
யாழ் - நாயன்மார்கட்டு

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் [பேய்ச்சியம்மன்] ஆலய

# மகாகும்பாபிஷேகமலர்





ஆசிரியர் "சொக்கன்"

ஸ்ரீ. ந. வீரமணி ஐயர் அவர்களுக்கு அன்பளிப்பு

உ
தேவிதுணை

# நாயன்மார்கட்டு ஸ்ரீஇராஜராஜேசுவரியம்பாள் ஆலய

(பேய்ச்சியம்பாள்)

# மகாகும்பாபிஷேக மலர்

''தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்''
— உமாபதி சிவாசாரியர்

ஆசிரியர் : '' சொக்கன் ''

**விரோதிகிருது ஆண்டு ஆனித் திங்கள் 15ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (29-6-71)**

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஸ்ரீ இராஜராஜேஸ்வரியம்பாள் திருப்பள்ளியெழுச்சி ... | வித்துவான் கரு கி. நடராஜன் பி. ஓ. எல். | iii |
| வாழ்த்துரைகள் ... ... | ... | v |
| நன்றி ... ... | இ. சரவணமுத்து | viii |
| அன்னையின் அடியிணைகளுக்கு ஓர் அணிமலர் ... | ஆசிரியர் | 1 |
| ஆலய வரலாறு ... ... ... | க. சொக்கலிங்கம் பி. ஏ. | 2 |
| இராஜராஜேஸ்வரி அஷ்டகம் ... ... | பிரம்மஸ்ரீ தி. சதாசிவையர் | 9 |
| ஆலய தேவி சேவை ... ... ... | பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை | 10 |
| இல்லையென் றுதருளும் இராஜராஜேஸ்வரி ... ... | 'நல்லைக் குமரன்' | 11 |
| ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பஞ்சகம் ... ... | ''வெள்ளையண்ணை'' | 12 |
| அருளுக எமக்கே அம்மா ... ... ... | ஸ்ரீமதி இரத்தினம் நவரத்தினம் எம். ஏ, எம். லிட். | 13 |
| பாரதி பாடிய பராசக்தி ... ... ... | ''ஆராவமுதன்'' | 14 |
| கடைக்கண் பார்த்தருள் கல்யாணி ... ... / கண்குளிரக் காட்சி தந்தாள் ... ... | இயலிசை வாரிதி, யாழ்ப்பாணம் ந. வீரமணிஐயர் | 20 |
| சக்தி பேதங்கள் ... ... ... | ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். | 21 |
| இராஜராஜேசுவரியம்பாள் கும்மி ... ... | கா. இரகுநாதன் | 24 |
| அட்டபந்தனம் ... ... ... | சா. கணேசன் | 25 |
| சக்தி வழிபாட்டு வரலாறு ... ... ... | வித்துவான் பண்டிதர் சி. குமாரசாமி பி. ஏ. | 27 |
| ஸ்ரீஇராஜராஜேஸ்வரி பதிகம் ... ... | ''அருட்கவி'' சி. வி. | 32 |
| செப்பறைச் சிதம்பர சுவாமிகள் ... ... | மு. ஞானப்பிரகாசம் பி. ஏ., பி. எஸ்ஸி. | 34 |
| வேதாகம சிவபுராணங்கள் எடுத்துரைக்கும் வித்தகி | வியாகரணசிரோமணி தி. கி. சீதாராமசாஸ்திரிகள் | 37 |
| கொஞ்சி நெஞ்சினிக்கின்ற தாய் ... ... | கவிஞர் வி. கந்தவனம் | 42 |
| தேவியே நின்னருளைத்தா ... ... | வித்துவான் திருவாட்டி மகேஸ்வரி இராசேந்திரன் | 43 |
| கும்பாபிஷேக தத்துவங்கள் ... ... | பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் | 44 |
| ஸ்ரீஇராஜராஜேசுவரி இரசனை ... ... | நாயன்மார்கட்டு வெ. சிவசம்பு | 49 |
| அருளாளர் வாய்தவறினர், அந்தாதி ஒன்று பிறந்தது ... | இரசிகமணி கனக. செந்திநாதன் | 51 |
| சைவ உணவின் தத்துவங்கள் ... ... | சு. பரநிருபசிங்கம் பி. எஸ்ஸி, டிப். இன். எட். | 54 |
| தேவி புகழ்மாலை ... ... | ''சேந்தன்'' | 55 |
| பாரதியும் வேதமரபும் ... ... | கலாநிதி க. கைலாசபதி எம். ஏ. | 57 |
| பொருள் ... ... | ச. பரநிருபசிங்கம் | 59 |
| நாயன்மார்கட்டு ஸ்ரீஇராஜராஜேஸ்வரி திரு ஊஞ்சல் ... | இயலிசை வாரிதி யாழ்ப்பாணம் ந. வீரமணிஐயர் | 61 |
| ஆலய பரிபாலனசபை, திருப்பணிச்சபை, சைவசமய அபிவிருத்திக்கழக அலுவலர்கள் | | 64 |



வெளியீடு:

**யாழ். சைவசமய அபிவிருத்திக் கழகம்**
**நாயன்மார்கட்டு.**

சேக்கி ழார்அருள் சென்னி யிருத்திச் செந்த மிழ்ச்சிவச் செந்நெறி போற்றி
வாக்கி னிற்கவி வன்மையி லோங்கி வயதி னுல்முதி ராததி றத்தோ(டு)
ஆக்க நற்பணி பற்பல செய்யும் ஆற்ற லார்நட ராசனுர் ஆக்கிப்
பாக்கி யப்பய னுயெமக் கீந்த பரையின் பள்ளியெ ழுச்சியு மீதே.

உ

சிவமயம்

## நாயன்மார்கட்டு

# ஸ்ரீ இராஜராஜேசுவரியம்பாள்

(பேய்ச்சியம்பாள்)

## திருப்பள்ளியெழுச்சி

**செந்தமிழ்ச் சிரோமணி பண்டித வித்துவான், க. கி. நடராஜன், பி. ஓ. எல். டிப். இன். எட்.**
*(செயலாளர், அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம்)*

திருமகள் கேள்வன் உரைமகள் கொழுநன்
தேடியுங் காணுச் சிவபெரு மான்றன்
உருவினிற் பாதியா யுலப்பிலா வருளே
உலகுய வளிக்கும் ஒருதனிப் பிராட்டி!
கருதிய வன்பினிற் கும்பிட வடியர்
கணக்கிட முடியாத் திறத்தினில் வந்தார்.
இருபெரும் நிதியே! எழிலுறும் மதியே!
இராஜரா ஜேஸ்வரீ! பள்ளியெழுந் தருளே.

உலகுசூ ழிருளகற்றும் ஒளிக்கதிரோன் எழுந்தான்;
ஊனமிலா ஞானமெனுங் கதிரவனு மெழுந்தான்;
நிலவுலகில் வெண்சங்கம் நீண்முழக்கஞ் செய்த;
நெருங்கினர்கள் அடியார்கள் நெடுவீதி யெல்லாம்;
புலபுலெனப் புள்ளினங்கள் ஆர்த்தன; வொண் முரசம்
புவியெல்லாம் பரந்தொலித்த; தண்மலர்கள் பூத்த;
இலைமலிந்த தண்டலைசூழ் நாயன்மார் கட்டில்
இராஜரா ஜேஸ்வரீ! பள்ளியெழுந் தருளே.

நானூறே டைம்பதுநல் லாண்டுகட்கு முன்னே
நலஞ்சேரு மச்சுவே லிப்பதியி னின்றே
தேனூறும் மலர்ப்பொழில்சூழ் நாயன்மார் கட்டில்
திகழ்பத்தி யோடுகுடி யேறியசீர் முருகர்
வானூர எழுந்துவளர் மரத்தடியி லாங்கோர்
மாத்தடியி லழகார்நின் திருவுருவம் அமைக்க
ஈனமிலா வருளினையெஞ் ஞான்றுமருள் தாயே!
இராஜரா ஜேஸ்வரீ! பள்ளியெழுந் தருளே.

பெருவெள்ளத் தாற்கோயில் சிதைந்திடினுஞ் சிதையாப்
பிறங்குவடி வோடுமெழுந் தருளியொப் பில்லா
அருள்வெள்ளம் பொழிமுகிலே! அன்னையே நிற்கிங்
களவிறந்த வன்பினெடுந் திருக்கோயி லமைத்தங்
குருகிமனம் நெக்குநெக் குயர்கும்பா பிடேகம்
உன்னதமா வுஞற்றினர்காண்; உலகில்வரு தீமை
இருவினைக ளெலாமகல எமக்கருளுந் தாயே!
இராஜரா ஜேஸ்வரீ! பள்ளியெழுந் தருளே.

வெயிலுகந்த பிள்ளையார் அரசகே சரிப்பிள்ளை
மேற்காகுந் திக்கதனிற் காவலா நிற்பப்
பயில்தமிழின் மன்னர்கள்முன் தொட்டபழம் பதுமப்
பண்புடைய நீர்நிலையின் பாங்கரொரு மாடி
குயில்பயிலக் குலவியிருந் திரகுவமி சத்தைக்
கோதில்பெருங் காவியமா யாத்தபெரும் புலவன்
இயல்பயிலு மாசகே சரிவாழ்ந்த ஊரில்
இராஜரா ஜேஸ்வரீ! பள்ளியெழுந் தருளே.

குருபூசை மடமொன்று குயிற்றியதிற் சைவக்
குரவர்களுட் படவறுபான் மும்மையடி யார்கள்
பெருமையெலாஞ் சிறக்கவிழாப் பிறங்கியதன் மையினாற்
பேசுபெரு நாயன்மார் கட்டெனும்பேர் பெற்ற
அரியதல மதனுள்ளே வடபாலுந் தெற்கும்
அகன்வயல்கள் சூழ்மருதம் அழகுவீற் றிருப்ப
இரியுமிருள் சீக்கின்ற இனியமுகம் மலர
இராஜரா ஜேஸ்வரீ! பள்ளியெழுந் தருளே.

வண்டுகள் மதுமலர் மாந்திநின் றிசைக்க;
வாட்டமில் சூட்டுடை வாரணம் முருகன
தொண்டரை வருகெனச் சூழ்ந்துநின் றழைக்குந்
தூயநன் முறையினிற் கூவின மனைதொறும்;
தண்டலைப் பூவைகள் தண்குயி லஞ்சுகந்
தண்டமிழ் மொழியினிற் சாற்றின நின்சீர்
எண்டிசை பரவிட ஏழையே முய்ய
இராஜரா ஜேஸ்வரீ! பள்ளியெழுந் தருளே.

இல்லற நெறியினி லிசையுநர் ஒருபால்
ஏற்றநற் றுறவினை யாற்றுந ரொருபால்;
பல்லறம் முயலுநர் பாடுந ரொருபால்
பத்தர்கள் சீவன் முத்தர்க ளொருபால்;
சொல்லுறு மேழிகொள் தூயவர் ஒருபால்
துன்னிய நாண்மலர் மன்னிய கையினர்
எல்லவ ரும்வந் தேத்தநின் றூர்கள்
இராஜரா ஜேஸ்வரீ! பள்ளியெழுந் தருளே.

மலைபடு மணிபுனை மாலைகள் கொணர்ந்தார்;
வளரொளித் தரளநன் மாலைகள் கொணர்ந்தார்;
தொலைவறு பசியபொன் மாலைகள் கொணர்ந்தார்;
சூர்க்கரித் தந்தமார் மாலைகள் கொணர்ந்தார்;
கலைபயில் தமிழ்ப்பா மாலைகள் கொணர்ந்தார்;
கடிகமழ் வனபூ மாலைகள் கொணர்ந்தார்;
இலையெனும் படியிடை மகளிர்கள் சேர்ந்தார்
இராஜரா ஜேஸ்வரீ! பள்ளியெழுந் தருளே.

கதிர்விடு மாரகே யூரங்கள் கொணர்ந்தார்;
கவினுறு மணிசெறி மகுடங்கள் கொணர்ந்தார்;
அதிவிலைக் கடகமும் வடகமுங் கொணர்ந்தார்;
அம்மை!நின் கழற்கணி கிங்கிணி கொணர்ந்தார்;
முதுபெருங் காடுறை முக்கண ஞேடே,
முகம்மலர்ந் தாடிய பேய்ச்சியம் பாளே;
இதிற்சய முறுவையென் றெனக்கருள் புரிய
இராஜரா ஜேஸ்வரீ; பள்ளியெழுந் தருளே

திருச்சிற்றம்பலம்.

# வாழ்த்துரைகள்

## I

கோப்பாய், நாடாளுமன்ற உறுப்பினர்;

### திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்கள்

கோயிலின் மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

நானூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்த அற்புதமும் புதுமையும் நிறைந்த அம்பிகையின் இத்திருக்கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு இப்போது மகாகும்பாபிஷேகம் நடப்பது அம்பிகையின் அருளன்றோ.

அகில அண்டங்களுக்கும் அன்னையாய், அருள் அமுது அருவியாகப் பாயும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளை அன்று அடியார் மனமார வணங்கியதுபோல் இன்றும் தொடர்ந்து புதிய ஆர்வத்துடனும், அன்புடனும் புதிய கோயிலில் வழிபாடு செய்ய வாய்த்தது அம்பாளின் அருளே. அடியார்களோடு சேர்ந்து நானும் பலமுறை இக்கோயிலில் வழிபாடு செய்துள்ளேன். அங்குள்ள அமைதியும், அருளும். எங்கும் காணப்பெற்றிலேன். அம்பாளின் அருளால், பலவருடங்களாக இக்கோயில் சகல சைவர்களுடைய வழிபாட்டிற்கும் சாதி வேறுபாடின்றி அமைந்துள்ளது. இப்படிச் சைவத்தில் மறுமலர்ச்சியும், முன்னேற்றமும் உண்டாவதற்கு நாம் நன்றி பாராட்டுகிறோம்.

திருப்பணி வேலையைச் சிறப்பாக நிறைவேற்றியதற்கு ஊர் மக்களுக்கு எனது பாராட்டையும், நன்றியையும், தெரிவித்துக் கொள்கிறேன்.

## II

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் செயலாளரும்

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத் தலைவருமாகிய

### திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் O. B. E.

புதியனவாய் ஆலயங்களை நிருமாணிப்பதிலும், பழையனவற்றைத் திருத்திப் பேணி வழிபட்டு வருதல் மேன்மையாகும், என்பதே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் திருவுளக் கருத்தாகும். இவ்வகையிலே, நாயன்மார்கட்டு ஸ்ரீஇராஜராஜேசுவரியம்பாள் ஆலயத்தினை அவ்வூர் மக்கள் சீரணோத்தாரணஞ்செய்து, மகாகும்பாபிஷேகம் நடாத்துவது பாராட்டிற்குரிய செயலேயாகும். ஆலயம் அமைந்திருக்கும்நிலம் நாவலரவர்களின் மூதாதையர்களுக்குச் சொந்தமாயிருந்தது என்று அறிய, இவ்வாலயம் என்றும் நின்றுநிலவி அருள்கனிந்து பயன்படும் என்பதில் எனக்கு ஐயம் எழவில்லை. அப்பெருமானது ஆன்மசக்தி அங்குக் கலந்து நிற்குமன்றோ?

இப்புனிதத் திருப்பணியை முற்றுவித்த நாயன்மார்கட்டுச் சைவ மக்களுக்கு ஸ்ரீஇராஜராஜேசுவரியம்பாளின் பூரண கிருபா கடாட்சம் கிட்ட வேண்டும் என்று அன்னையை மன மொழி மெய்களால் வணங்குகின்றேன்.

## III

யாழ்ப்பாணச் சைவபரிபாலன சபையின் சமயப் பிரசார அமைச்சரும்,
இந்துசாதனப் பத்திராதிபருமாகிய

### சித்தாந்த சிரோமணி திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

'நாயன்மார்கட்டு' என்ற நாமமே ஒருவருக்குத் தெய்வ சிந்தனையை இயல்பாக ஊட்டும். இத்தகைய புண்ணிய பூமியில் வாழ்பவர்கள் சிறந்த சிவனடியார்களாகத் திகழ்வார்கள். அவர்களுடைய வாழ்க்கையைத் தெய்வீகமாக்குவதற்கு அவ்வூரில் ஸ்ரீஇராஜராஜேசுவரியம்பாள் கோயில்கொண்டெழுந்தருளி யிருப்பதும் அவ்வூரவர்கள் செய்துகொண்ட புண்ணியமே. ஷெ கோயிற்றிருப்பணி அவ்வூரவர்களுடைய பத்தி யினாலும், ஊக்கத்தினாலும் சிறப்புற நிறைவேறி 30-6-71 புதன்கிழமை இறைவனருளாற் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுவதை யறிந்து மகிழ்ச்சியுறுகின்றோம். சர்வ லோகநாயகியாகிய அம்மையின் திருவருள் எல்லா உயிர்களையும் காப்பதாக.

## IV

யாழ்ப்பாண இந்துக்கல்லூரியின்
முன்னாள் அதிபரும், அகில இலங்கைச் சேக்கிழார்மன்ற உபதலைவர்களுள் ஒருவரும்,
'ஈழநாடு' பொறுப்பாசிரியருமாகிய

### திரு. ந. சபாரத்தினம் அவர்கள்

ஒரு சமூகம் உயிர்த்துடிப்புடன் இயங்குகின்றதென்றால் அந்த இயக்கத்தை உணர்வதற்கு அது தனது ஆலயத்தை எவ்விதம் பேணிப் பாதுகாக்கின்றது என்பதே அத்தாட்சியாகும். நாயன்மார்கட்டுவாழ் சைவமக்களின் இயக்க உணர்வையும், உயிர்ப்பையும் அவர்கள் தம் குலதெய்வமாகிய ஸ்ரீ இராஜராஜேஸ்வரியின் கோயிலைப் புனர்நிர்மாணஞ்செய்து மகாகும்பாபிஷேகம் நடாத்துவதைக்கொண்டு நன்கு உணர முடிகின்றது. 'அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்' என்பது பாரதி வாக்கு.

நாயன்மார்கட்டின் சைவமக்களுக்கு அன்னையின் அருள்கிட்டல்வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

---


### நன்றி

மலர் வெளியீட்டிலே அயராது உழைத்து ஒத்துழைப்பு நல்கிய நிரஞ்ஜனா அச்சக அதிபர்க்கும், ஸ்ரீ லங்கா அச்சகத்தினர்க்கும் எமது நன்றி உரியது.

குறுகிய காலத்திலே மலரை வெளியிட நேர்ந்தமையால் அச்சுப் பிழைகள் பல ஏற்படலாயின. அவற்றிற்காக வருந்துகின்றோம்.

அட்டைப் படம், அம்பாள் திருவுருவப்படம் ஆகியவற்றை அழகுற வரைந்துதந்த 'சர்மா' அவர்களுக்கும் எம் நன்றி உரியது.

— ஆசிரியர்

பொருள்செய்வ தேனென்றுற் பூதம் போலப் புதைத்துவைத்து மகிழ்வதற்கே அல்ல அல்ல அருள் அன்பு மொழி கலைகள் பலவும் ஓங்க அறப்பணிகள் நிகழ்த்துதற்கே என்ற உண்மை தெருளுற்றார், திருப்பணியின் சபைக்கு வாய்த்த திறமைமிகு பொருளாளர், பண்புச் செல்வர், மருளற்றார், மதியுடையார், மாண்பு மிக்கார் மதிப்புடைய சரவணமுத் துரைப்பர் நன்றி.

உ
தேவி துணை.

# நன்றி

நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேசுவரியம்பாள் ஆலய பரிபாலனசபை தொடக்கி வைத்த ஆலய ஜீர்ணோத்தாரணத் திருப்பணியை முற்றுவிப்பதற்கென 4 - 4 - 66 இல் ஓர் ஆலய திருப்பணிச்சபை நியமனமாயிற்று. பலவேறு இன்னல்களுக்கும், இடையூறுகளுக்கு மூடாக இச்சபை இயங்கி, அம்மையின் திருப்பெருங் கருணையினாலே இன்று, கோயிற்றிருப்பணியை முற்றுவித்துள்ளது. அகிலாண்ட கோடி உயிர்களுக்கும் மாதாவாய் விளங்கும் அன்னை ஸ்ரீ இராஜராஜேஸ்வரியின் திருவடித் தாமரைகளுக்கு எம் பணிவார்ந்த வணக்கங்களைச் செலுத்துகின்றோம்.

இது ஒரு சிறிய திருப்பணியாயினும் எங்கள் கிராமத்தின் பொருளாதார நிலையினை நோக்குமிடத்து இதை ஒரு பெரும் பணியாகவே கருதல்வேண்டும். அம்பாளின் அடியார்களதும், ஆலய பரிபாலன சபையதும், திருப்பணிச்சபையதும் ஒரு முகமான ஒத்துழைப்புக் கிடைத்திராவிடில் இப்பணி நிறைவேறுவது எளிதாய் இருந்திருக்காது. ஆலய திருப்பணிக்கு நிதிவேண்டிச் சென்றபொழுதெல்லாம் அடியார்கள் மனமுவந்து தம்மாலியன்ற நிதியுதவிகளைப் புரிந்துள்ளனர். அன்பர்களிற் சிலர் திருப்பணி வேலைகளிற் சிலவற்றைத் தாங்களே முழுச்செலவையும் பொறுத்துச் செய்வதாக முன்வந்து நிறைவேற்றியுமுள்ளனர். இவர்கள் யாவர்க்கும் அம்பாளின் அருட்பார்வை கிட்டல் வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

ஆலய பரிபாலன நிருவாகசபையின உறுதுணையும், வழிகாட்டலுங் கொஞ்சமல்ல. திருப்பணிச் சபை உறுப்பினர்களின் பெருமுயற்சியும், ஒத்துழைப்பும் திருப்பணி நிறைவேறப் பெரிதும் உதவின. ஒப்பந்தகாரரும், தொழிலாளர்களும் பூரணமாக ஒத்துழைத்துச் சில சலுகைகளையும் அளித்தனர். திருப்பணி வேலைகள் அமைதியாகவும், உறுதியாகவும் நிறைவேற ஆரம்பம் முதல் இவர்கள் யாவரும் உதவியமையை என்றும் மறவேன். இவர்களுக்கு எனது மனங்கனிந்த நன்றியைக் கூறி, எதிர்காலத்திலும் இவர்கள் ஆலயம் சிறப்பாய் நடைபெற உதவ வேண்டுகின்றேன்.

திருப்பணிச் சபை உறுப்பினர்களுள் ஒருவரான திரு. இ. திருநாவுக்கரசு அவர்கள் முழு வேலைகளுக்கும் பொறுப்பாய் இருந்து, தம் உடல் நலத்தையும் கருதாது அல்லும் பகலும் உழைத்தமையைப் பாராட்டாதிருத்தல் முடியாது. 'நன்றி மறப்பது நன்றன்று'.

யாழ். நாயன்மார்கட்டுச் சைவசமய அபிவிருத்திக் கழக உறுப்பினர்கள் திருப்பணி நிதிச் சேகரிப்பிலே பெரும்பங்கு கொண்டனர். ஏறக்குறைய 3700/- ரூபா அவர்களால், சேகரிக்கப்பெற்று என்னிடம் கையளிக்கப்பெற்றது. இந்நிதிச் சேகரிப்பிலே நாயன்மார்கட்டுச் சிறுவர் சிறுமிகள் காட்டிய ஆர்வமும், ஒத்துழைப்பும் என்றும் மறக்கத்தக்கவையல்ல. சிரமதான அடிப்படையிலும் இவர்கள் திருப்பணிவேலைகளிலே கலந்து உழைத்திருக்கின்றனர். சம்பிரதாய முறையிலே, "இவர்களுக்கெல்லாம் நன்றி" என்று கூறுவதுடன் என் மனம் திருப்தியடையவில்லை.

திருப்பணி வரவு செலவுக் கணக்குகளை ஆலய பரிபாலனசபையின் நிருவாகசபையிடம் ஒப்படைத்துள்ளேன். விபரம் அறிய விரும்புவோர் நிருவாக சபையினருடன் தொடர்புகொள்க.

அனைவர்க்கும் அம்பாளின் அருளினாலே சகல சௌபாக்கியங்களுங் கிட்டுக.

வணக்கம்.


இ. சரவணமுத்து
*தனாதிகாரி.*
*ஸ்ரீ இராஜராஜேசுவரியம்பாள்*
*ஆலய பரிபாலன சபை,*
*திருப்பணிச் சபை.*

*நாயன்மார்கட்டு,*
**25-6-71.**

உ

# தேவி வணக்கம்

உருகாத எந்தமது மனமான பாறையினை
  உன்கருணை யாலு ருக்கி
ஒளிவீசு மெய்ஞ்ஞான கதிராகி எம்முளே
  ஓங்கிநீ யிலகல் வேண்டும்
பெருகாத விழிகளிணை மழைவார வைத்துனது
  பெயரினை நாவி லெழுதி
பேதைமை போக்கியுன் போதமே துணையெனும்
  பேற்றினை அருளல் வேண்டும்
ஒருகாலு முன்னடிகள் மறவாத பெருமையினை
  உத்தமப் பத்தி வலியை
உன்னடிய ராமெமக் கிந்நிலையி லேநல்கி
  உண்மையை உணர்த்தல் வேண்டும்
அருகாக வேபதும மலர்மேவு நற்றடம்
  அழகுசெய வயல்கள் சூழ
அன்போடு நாயன்மார் கட்டினில் அமர்ந்தருளும்
  அன்னையே பேய்ச்சி யுமையே!



உ

# அன்னையின் அடியிணைகளுக்கு ஓர் அணிமலர்

அனைத்துலகையுந் தனது பெருங் கருணைத் திறத்தாலே அணைத்து, ஆதரித்து, அருண்மழை பொழிகின்ற அகிலாண்டேஸ்வரியாம் அன்புத் தாயினைப் பேய்ச்சியம்மன் என்ற திருநாமத்தால் ஒரு சிறிய மரகட்டையிலே ஆவாகனஞ் செய்து, நானூற்றைம்பதாண்டுகளுக்கு முன்னர், இங்கு முருகர் என்ற அடியார் எழுந்தருளுவித்தார்.

அன்றிலிருந்து அவள், நாயன்மார்கட்டுவாழ் மக்களின் குலதெய்வமாக விளங்கி வருகின்றாள். ஆயிரம் நாமங்களிலும் அடக்கவொண்ணாத அருந்திறலின் பெருந் திருவாகிய அன்னைக்கு, ஸ்ரீ இராஜராஜேஸ்வரி என்ற திருநாமத்தினையுஞ் சூட்டி நாம் வழிபட்டு வருகின்றோம.

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி மகாசோடசி எனவும் அழைக்கப் பெறுவாள். அவள் ஞானத்தின் திருவுருவாவள். அவளை அழைக்கும் மந்திரம் மகாசோடசி எனப் பெயர் பெறும். அஃது இருபத்தெட்டு அட்சரங்களைக் கொண்டது. 'ஸ்ரீ' என்பது இரண்டு அட்சரங்களையும், 'ரா' இரண்டு அட்சரங்களையும், 'ஜ' எட்டு அட்சரங்களையும், 'ரா' இரண்டு அட்சரங்களையும், 'ஜே' எட்டு அட்சரங்களையும், 'ஸ்வ' நான்கு அட்சரங்களையும், 'ரி' இரண்டு அட்சரங்களையும் கொண்டது என்பர்.

நவசத்தி பேதங்களுள் ஒன்றாகிய ஸ்ரீ இராஜராஜேஸ்வரி, நவாக்ஷரிபாலா, அன்னபூர்ணா, அஸ்வருதா ஆகிய மூன்று உபமூர்த்தங் கொண்டதாகும். ஸ்ரீ இராஜராஜேஸ்வரி என்னும் மகாசோடசி, ஞானரூபிணியாதலால், முதிர்ச்சியைப் புலப்படுத்தும் அறுபது வயதினளாய் உருவகிக்கப்படுவது வழக்கம்.

இத்தகைய ஞானகலாவல்லியின் ஆலயத்தினை அவளின் குழந்தைகளாகிய நாம் எமது இயல்பிற்கேற்ப ஓரளவு திருத்தி, இன்று அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகமும் செய்கின்றோம் என்றால், அதுவும் அவளின் திருவருளேயாகும்.

மகாகும்பாபிஷேக நினைவாக, நாயன்மார்கட்டுச் சைவசமய அபிவிருத்திக் கழகம் ஒரு சிறு மலரினை மிகவும் மகிழ்வோடு வெளியிடுகின்றது. பொன் வைக்க வேண்டிய இடத்திலே பூ வைத்ததுபோல இச்சின்னஞ் சிறிய மலரை அவளின் பொன்னார் திருவடியிலே வைத்து வழிபட்டு நிற்கின்றோம். 'யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை' என்ற திருமந்திரத்திருவாக்கு இந்நேரத்திலே எம் நினைவில் வருகின்றது.

இம்மலரை வெளியிடும் நிதியினை மனமுவந்தளித்த பெரியார்க்கும், வாழ்த்துரைகளும், கட்டுரைகளும், கவிதைகளும் வழங்கிய அறிஞர்க்கும் அம்மையின் அருட்பார்வை கிட்டல் வேண்டும் என்று வழுத்தி அமைகின்றோம்.

வணக்கம்

— ஆசிரியர்

# நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் (பேய்ச்சியம்பாள்)

# ஆலயவரலாறு.

க. சொக்கலிங்கம் (சொக்கன்) பி. ஏ.
(தலைவர், யாழ். நாயன்மார்கட்டுச் சைவசமய அபிவிருத்திக் கழகம்)

## தலமான்மியம்

இந்துப் பேராழியின் நடுவிலே நித்திலம் எனப் புகழொளி கான்று விளங்கும் இலங்கைமணித் திருநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணம், முற்காலத்திலே தமிழரசரால் ஆளப்பெற்றது. அக்காலத்தில் யாழ்ப்பாண அரசின் தலைநகராய் விளங்கியது நல்லூராகும். அதன் அண்மையிலேயிருந்த நாயன்மார்கட்டு, பல நூற்றாண்டுகளாய்ச் சைவநெறியையும், ஆயுர்வேத வைத்தியத்தையும் பேணிக்காத்து வந்தமை குறிப்பிடத் தக்கது.

'கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விறலின' ராகிய நாயன்மார் அறுபத்து மூவர்க்கும் குருபூசை நடாத்திவந்த திருமடம் ஒன்று அண்மைக் காலம்வரை இங்கு நிலவி வந்தது. குருபூசைகளைச் செவ்வனே நடாத்துதற்கு யாழ்ப்பாண அரசர்கள் மானியங்கள் பலவற்றை அளித்திருந்தனர். வெயிலுகந்த பிள்ளையார் கோவிலின் அருகிலே நாயன்மார் குருபூசை மடம் அமைந்திருந்த நிலம் இன்று "மடத்துவளவு" எனவே அழைக்கப்படுவதும் எமது கவனத்தை ஈர்க்கும் ஒரு சான்றாகும். இறைவனைத் தமது பத்தித்திறத்தாலே உள்ளங்களிலே கட்டி வைத்திருந்த அடியார்களை - நாயன்மார்களை - மக்கள் தம் அன்பினாலே கட்டிய இடமாதலின் இவ்வூர், நாயன்மார்கட்டு என்ற பெயரினைப் பெற்றதுபோலும்!

குருபூசை மடத்தின் அண்மையிலே தமிழரசர் ஒரு குளத்தையும் வெட்டியிருந்தனர். நான்கு பக்கமும் படித்துறைகளும், சுவர்க்கட்டுக்களும், நடுவிலே தீர்த்த மண்டபமும் வாய்ந்ததாய் ஊருக்கு அழகினை ஊட்டும் வகையிலே இந்தக்குளம் அமைந்திருந்தது. அக்காலத்திலே நல்லூர்க் கந்தசுவாமி கோவில், அரியாலைச் சித்திவிநாயகர் கோவில், வெயிலுகந்த பிள்ளையார் கோவில், சட்டநாதர் கோவிலாகியவற்றின் தீர்த்தோற்சவங்கள் யாவும், நாயன்மார்கட்டுக் குளத்திலேயே நடைபெற்றன.

குளத்தின் வடபால் ஒரு மாடிவீடு இருந்ததாய்த் தம் முன்னோர் கூறியதாக இங்குள்ள முதியோர் சிலர் உரைப்பர். இந்த இல்லத்திலிருந்தபடியே, தம்முன்னால் அலையெறிந்து கொண்டிருந்த குளத்தின் இயற்கையெழிலை நயந்தவண்ணம், அரசகேசரியார் இரகுவமிச காவியத்தினை இயற்றினர் என்பர். அந்த மாடிவீடு இருந்த நிலம் இப்போது தோட்டமாக உள்ளது. தோட்டஞ்செய்வோர் நிலத்தை ஆழமாகக் கொத்திய பொழுது மாடிக்கட்டட அத்திவாரத்தினைக் கண்டதாகவும் உரைப்பர். இவ்வாறு பழைமையான வரலாற்றுப் பெருமைக்கு ஓர் நிலைக்களமாக நாயன்மார்கட்டு விளங்கிவருகின்றது.

அன்றியும், முறிவு தறிவு வைத்தியத் துறையிலே "அற்புதங்கள்" நிகழ்த்திய "உடற்பிணி" மருத்துவர்க்கும் இவ்வூர் தாயகமாய் விளங்கியது. ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன்பு வரை தம் உடற்பிணி போக்க இங்கு வந்தோர் தொகை எண்ணக் கணக்கற்றது. இன்றும் "பெருங்காயம் வைத்த பாண்டம்போல" அவ்வைத்தியர்களின் வழித்தோன்றல்கள் முறிவுதறிவு வைத்தியத்துறையிலே ஓரளவு புகழ்பெற்றே விளங்குகின்றனர்.

நிற்க, "கோவில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்பது பழமொழி. இப்பழமொழி கூறும் உண்மையை நன்குணர்ந்து. ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னரே இங்கு மக்கள் ஆலயங்களை நிறுவினர். இவ்வாலயங்களின் 'மூர்த்தி சிறிதாயினுங் கீர்த்தி பெரிதாகும்.' நாயன்மார் கட்டின் மேற்கில் இரு விநாயகர் ஆலயங்கள் உள்ளன. மூலஸ்தானத்திலே அமராது, வெயிலை விரும்பி அமர்ந்தருளிய வெயிலுகந்த பிள்ளையாரின் ஆலயமும், தமிழரச பரம்பரையினரும், புலவர் சிகாமணியுமாகிய அரசகேசரியின் பெயரைத் தம்மோடு சார்த்திக்கொண்ட அரசகேசரிப் பிள்ளையார் ஆலயமுமே அவ்விரு ஆலயங்களுமாம்.

கீழ்பாலுள்ளது, பேய்ச்சியம்பாள் என்னும் ஸ்ரீ இராஜராஜேசுவரி அம்பாள் ஆலயமாகும். நாயன்மார்கட்டு மக்கள் தமது குலதெய்வமாகப் போற்றி, இடரினும் தளரினும் தமதுறுநோயை எடுத்துரைத்து அவற்றினின்றும் நீக்கம்பெற வழிபாடியற்றும் பேரன்னையாக, ஸ்ரீ இராஜராஜேசுவரி அம்பாள் வீற்றிருந்தருளுகின்றாள்.

## முருகருக்கு அருளிய முதல்வி.

இற்றைக்கு ஏறக்குறைய நானூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் அச்சுவேலி என்ற சிற்றூரிலிருந்த முருகர் என்பவர் நாயன்மார்கட்டிலே வந்து குடியேறினர். அவர் ஒரு தேவி உபாசகர். தாம் குடியேறிய காணியிலே நின்ற வேப்பமரம் ஒன்றின் கீழ் மேடையமைத்து, ஒருமுள நீள முள்ள மரக்கட்டையாலமைந்த தேவியின் திருமுகத்தை (திருமுகம் மாத்திரமே அம்மரக்கட்டையிலே செதுக்கப்பட்டிருந்தது) அம்மேடையிலே நாட்டி அவர் வழிபட்டு வந்தார். முருகர் கோயிலமைத்திருந்த காணி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் மூதாதையர்க்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத் தக்கது.

முருகர், தமது தெய்வத்திற்கு வெள்ளிக்கிழமைகளிலும், செவ்வாய்க்கிழமைகளிலும் தீபம் ஏற்றி வழிபாடியற்றி வந்தார். காலப்போக்கிலே தேவிக்கு ஓர் சிறு குடிசையும் அமையலாயிற்று. இவ்வாறு குடிசையிற் குடியேறிய பேய்ச்சி அன்னை, முருகருக்கு மாத்திரமன்றி ஊரவர்க்கும் வழிபடுந் தெய்வமானாள். தை மாதப் பிறப்பன்று விசேட பூசை, பொங்கல், சித்திரைப் பௌர்ணமியின்போது சித்திர புத்திர நயினுர் கதை வாசித்தல் சித்திரைக் கஞ்சி வார்த்தல் முதலான வைபவங்களும் இடம் பெறத் தொடங்கின. இதனல் முருகரின் பொறுப்பும் அதிகரிக்க அவர் ஊரவர்களின் உதவி கொண்டு, சுற்றுச் சுவர்களை மண்ணால் அமைத்து. ஒரு பனங் கதவையும் இணைத்தார்.

## முருகரின் வழி வந்தோர் ஆற்றிய பணிகள் :

முருகரின் பரம்பரையிலே வந்த கதிர்காமர். வேலாயுதனுர், கூழங்கைத் தாமோதரர் ஆகியோர் தம் மூதாதையரின் திருப்பணிகளை முட்டின்றித் தொடர்ந்து நடாத்தி வந்தனர். தாமோதரனுரின் காலத்திற்குப் பின் அவரின் நண்பர் ஐயம்பிள்ளையும், ஊரவர் சிலரும் சேர்ந்து மார்கழித் திருவெம்பாவைப் பூசையையும் தேவியின் சந்நிதானத்திலே நடாத்தி வந்தனர். ஐயம்பிள்ளையின் மறைவைத் தொடர்ந்து அவரின் மகன் சின்னையா அம்பாளின் திருப்பணிகளைப் பத்தி சிரத்தையோடு நடாத்தி வந்தார். இவர் காலத்தில், திருவெம்பாவைப் பூசைகளின் போது திருவாதவூரடிகள் புராணப் படிப்பும் நிகழ்ந்து வருவதாயிற்று.

சின்னையா சந்ததியின்றி மறைய அவரின் சகோதர முறையினரான வேலுப்பிள்ளையும், பின்னர் அவரின் புதல்வர்களாகிய முருகேசு, அருணாசலம், கனகசபையாகியோரும் முறையே ஆலய பரிபாலனத்தைச் செவ்வனே நடாத்தி வந்தனர்.

## 1918ஆம் ஆண்டுப்பெருவெள்ளம்

கனகசபையாரின் ஆலய நிருவாக காலத்தில், 1918 ஆம் ஆண்டில் பெரு மழையும் புயலுங் காரணமாகக் கோயிற் கூரையும், சுவர்களும் சரிந்து வீழ்ந்தன. இவ்வவல நிலை கனகசபையாருக்குப் பெருங்கவலையை அளித்தது. அவர் தமது சூழலில் வாழ்ந்தவர்களை அடுத்து, கோயிலைத் திருத்தி அமைக்க உதவுமாறு வேண்டினர். அவரின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்த மக்களும் தம்மால் இயன்ற அளவு பொருளுதவியதோடு, கோயில் கட்டுந் திருப்பணிக்குத் தமது உடலுழைப்பையும் அளிக்க முன் வந்தனர். எல்லாருமாகச் சேர்ந்து கோவில் அழிபாடுகளை நீக்கி மேடையிலே புதையுண்டிருந்த தேவியின் திருமுகத்தை வெளியே எடுத்தனர்.

## அற்புதம் நிகழ்த்திய அம்மை

ஏறக்குறைய நான்கு நூற்றுண்டுகளாய் மண்ணுள்ளே புதைந்திருந்த தேவியின் திருமுகம், அது மரக்கட்டையினலே அமைக்கப்பட்டிருந்தும் எவ்வித சிதைவுகளோ, ஊனமோ இன்றி விளங்கிப் பொலிந்தவண்ணமிருந்தது. இந்த அற்புத நிகழ்ச்சியால் ஈர்க்கப்பட்டோர் வியப்பால் சிலைகள் போலாயினர். மீண்டும் அவர்கள் தம் நிலைக்கு வந்தபொழுது, அவர்களின் விழிகளிலே, பத்தி, வெள்ளமாய்ப் பெருகி வழியலாயிற்று

கல்லெனில் துகளாய்ப் போகும்
மரமெனில் உட்கிப் போகும்
வல்லதாம் இரும்பே என்னில்
காலத்தால் மறைந்தே போகும்
செல்வமே! எங்கள் தாயே!
சீருடைப் பேய்ச்சி அன்னய்!
நல்லவர் முருகர் நெஞ்சை
நாடிய உனக்கீ றுண்டோ ?

அம்பாளின் இத்திருமுக வடிவு இன்று வரை, சிதைவின்றிப் பூசகரின் அபிஷேகாரா தனைகளைப் பெற்றவண்ணம், மூல விக்கிரகத்தின் அருகே அமர்ந்திருத்தல் காணலாம்.

## குடிசை சிறு கோயில் ஆதல்

கனகசபையார் கோவிலின் ஜீர்ணோத்தாரணத்திற்குச் சேர்த்த பொருளைக் கொண்டு கோவிலைத் திருத்தியமைக்கத் தொடங்கினர். மேற்கூரை கிடுகால் வேயப் பெற்றது. சுவர் எழுப்பியபொழுது தாம் சேர்த்த நிதியினைக் கொண்டு, அதனைப் பூர்த்தி செய்தல் இயலாத காரியம் என்பதைக் கனகசபையார் உணர்ந்தார். எனவே அவர் மீண்டும் நிதி சேர்க்கத் தொடங்கினர். முன்னர், கூரைக்குப் பயன்படுத்திய மரங்களைக்கொண்டு தற்காலிகமாகக் கோவில் மேற்கூரை போடப் பெற்றது. இவ்வாறு பத்தாண்டுகள் கழிந்தன.

## இராஜராஜேசுவரியம்பாள், என்ற திருநாமம் அமைந்த வகை:

1928ஆம் ஆண்டிலே கனகசபையாரின் கோரிக்கையை ஏற்று, ஆசிரியர் திரு. வெ. கந்தையா அவர்களும் கோவிற் புனருத்தாரண நிதிச் சேகரிப்பில் ஈடுபட்டார். கனகசபையாரும் ஆசிரியரும 1928ஆம் ஆண்டு மார்கழித் திருவாதிரை நாளன்று, முதன் முதலாக நாயன்மார் கட்டு ஆயுர்வேத வைத்தியசாலை அதிபர். வைத்திய பூபதி திரு. வெ. சிவசுப்பிரமணியம் அவர்களிடம் நிதி கோரிச் சென்றனர். வைத்தியபூபதி அங்காளியை அக்கோவிலின் அம்பாள் திருநாமமாயிருந்து வந்த (இன்றும் அத்திருநாமமே மக்களிடையே பிரசித்தி பெற்று விளங்குகின்றது.) பேய்ச்சியம்மன் என்பதை ஆட்சேபித்துப் பின்வரும் நியாயங்களை எடுத்துரைத்தார். "பேய்ச்சியம்மன் என்று ஒரு தேவி இல்லை. அதற்கு நித்திய, நைமித்திய பூசைகளோ, பூஜா பத்ததிகளோ இல்லை. ஆகவே இக்கோவிலில் நவசத்திகளுள் ஒன்றைத் தெரிந்து பிரதிட்டை செய்வோம். அன்றியும் கோவில் நிருவாகத்தை ஊர்ப்பொது ஆக்குவோம். இதற்கு நீங்கள் சம்மதித்தால் ஒத்துழைப்புத் தருவேன்."

திரு. வெ. கந்தையா அவர்களும், கனக சபையாரும வைத்திய பூபதியின் நிபந்தனைகளை ஏற்று, தேவியின் மூர்த்திப் பிரதிட்டைப் பொறுப்பையும் வைத்திய பூபதியிடமே கையளித்தனர். அவரும், குறித்த ஒரு தினத்தில் வைத்திய சாலைக் கண்மையிலிருந்த குருபூசை மடத்திலே ஊரவரை அழைத்து ஒரு கூட்டத்தைக் கூட்டுவித்தார். அக் கூட்டத்திற்குக் கோவிற்காணிச் சொந்தக்காரராகிய ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை (நாவலரவர்களின் தமையனுர் மகன்) அவர்களும், பருத்தித்துறை முத்துச்சுவாமிக் குருக்களும் விசேட அழைப்பின் பேரில் சமுகமளித்தனர்.

இந்தப் பொதுக் கூட்டத்திலே நவசத்திகளின் திருநாமங்களையும்,வழக்கத்திலிருந்தபேய்ச்சியம்மன் என்ற திருநாமத்தையும் சீட்டுக்களிலே எழுதி அவற்றுள் ஒன்றை மூன்று வயது நிரம்பாத சிறுமி ஒருத்தியைக் கொண்டு எடுப்பித்தனர். அவள் எடுத்த திருவுளச்சீட்டு 'பேய்ச்சியம்மன்' என்று எழுதப்பட்டதாகும், இதனை ஏற்காத வைத்தியபூபதியும் ஸ்ரீமத் த. கைலாசபிள்ளையும், முத்துச்சவாமிக் குருக்களும் 'மீண்டும் திருவுளச்சீட்டு எடுத்தல் வேண்டும்' என்றனர். அவ்வாறு திருவுளச்சீட்டு எடுத்தபொழுது ஸ்ரீ இராஜராஜேஸ்வரி' என்ற திருநாமம் வந்தது, அன்றிலிருந்து பேய்ச்சியம்மன் 'ஸ்ரீ இராஜராஜேசுவரியம்பாள்' எனவும் அழைக்கப் பெறலாயினள்.

## ஆலய நிர்வாகம் ஊர்ப்பொதுவாதல்

1928ஆம் ஆண்டிலிருந்து 1931ஆம் ஆண்டு இறுதி வரை கனகசபையார் ஆலயத்தைத் தம் பொறுப்பில் வைத்திருப்பதா, ஊர்ப்பொது ஆக்குவதா என்ற பிரச்சினைக்கு முடிவுகாண இயலாதவராய்த் தயங்கிக் கொண்டிருந்தார். அம்பாளின் திருவருட் சித்தத்தாற்போலும் 1932 ஆம் ஆண்டு, தைப்பொங்கலன்று அவர் கோவிலை ஊர்ப்பொது ஆக்குவதற்கான விளம்பரத்தை வெளியிடப்போவதாய்ப் பிரகடனஞ் செய்தார். தாம் கூறியபடியே 1932ஆம் ஆண்டு பங்குனி மாதம் 21ஆந் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 6-30 மணியளவில், மகாசபை ஒன்றை நல்லூர்ப் பிரம்மஸ்ரீ தம்பையாக் குருக்கள் தலைமையிலே கூட்டித் தம் கருத்தை வெளியிட்டார்.

அம் மகாசபைக் கூட்டத்தில் அவரின் கோரிக்கையை மகாசபையார் ஏற்றனர். அந்தக்கூட்டத்திற்குச் சமூகமளித்தவர்களிலிருந்தே கோவிற் பரிபாலனத்திற்கெனப் பன்னிருவர் கொண்ட ஒரு நிருவாகசபையும் தெரியப் பெற்றது.

## ஆலய பரிபாலனசபை

1932ஆம் ஆண்டு பங்குனி மாதம் 21ஆந் தேதி மகாசபைக் கூட்டத்திலே தெரிவுபெற்ற ஸ்ரீ இராஜஇராஜேசுவரி அம்பாள் (பேய்ச்சியம்பாள்) ஆலய பரிபாலனச் சபையின் விபரம் வருமாறு :

தலைவர் : டாக்டர் வெ. சி. இராமநாதன்
உபதலைவர் : திரு. க. தி. சம்பந்தர் (சோதிடர்)
காரியதரிசி : திரு. வெ. கந்தையா (ஆசிரியர்)
உபகாரியதரிசிகள் : திரு. ச. பொன்னையா
திரு. வே. கனகசபை

நிருவாகசபை அங்கத்தவர்கள் : திருவாளர்கள் க. நாகமுத்து, மு. வல்லிபுரம், சு. செல்லையா, க. ஆறுமுகம். மு. வல்லிபுரம, அ. ஆறுமுகம் ப. சிவக்கொழுந்து. நிருவாகசபை அங்கத்தவர்களின் தொகை கூடுதலாக உள்ளது என்ற கருத்தை அங்கீகரித்து, திருவாளர்கள் அ. ஆறுமுகம் க, ஆறுமுகம், மு. வல்லிபுரம் ஆகியோர் தாமாகவே அறிவித்து நிருவாகசபையிலிருந்து விலகிக்கொண்டனர்.

ஆலயபரிபாலனசபை, கோவில் நிருவாகத்தைச் செவ்வனே நடாத்தவும், அருச்சகர்க்கடமையாற்றவும் பொருத்தமான ஒருவராகத் திரு. அ. ஆறுமுகம் அவர்களைக் கண்டு, அவரிடம் அவ்விரு பொறுப்புக்களையும் அளித்தது. மேலும் அச்சபை, இப்பொறுப்புக்களை அவர் நன்கு நடாத்துவதற்கயாச் சில வரையறைகளுக்குட்பட்ட அதிகாரங்களை அவருக்கு அளித்து, அவற்றை உறுதிப்படுத்தும் வகையிலே ஒரு பராமரிப்புத்தத்துவ உறுதியையும், நொத்தாரிசு திரு. வே. க. சுப்பிரமணியம் அவர்களைக் கொண்டு எழுதுவித்துப் பரிபாலனசபையாரின் ஒப்புதற் கையொப்பங்களோடு அவரிடம் கையளித்தது. அதனோடு தனுதிகாரிப் பதவியிலும் அவரே நியமனமானுர்.

இல. 3411 கொண்ட இப்பராமரிப்புத்தத்துவ நியமன சாதனத்தின் ஒரு சிறுபகுதி பின்வருமாறு:

"சொல்லப்பட்ட வேலுப்பிள்ளை கனகசபையும், வேலுப்பிள்ளை முத்துக்குமாருவும், அருணசலம் நவரெத்தினமுமாகிய நாங்கள் குறித்த தேவஸ்தானமும், அதற்குரிய அசைவற்ற, அசைவுள்ள வாதனங்களனைத்தும், குறித்த நாயன்மார்கட்டுப் பாண்டியன்தரை என்னுமிரு குறிச்சிகளிலுமுள்ள சைவசமயிகள் சகலர்க்கும் பொதுவாயே உரியனவென இதனுல் உறுதிப்பண்ணி அறிக்கையிடுகிறேம்."

## கோவிற்றிருப்பணியும் கும்பாபிஷேகமும்

கோவில் அதிபர்ப்பொறுப்பையேற்ற திரு. அ. ஆறுமுகம், கோவில் ஜீர்ணோத்தாரணத் திருப்பணிகளிலே அயராது ஈடுபட்டார். ஊரவர்களும், கோவிற் பரிபாலனசபையாரும் அவருக்குப் பல்லாற்ருனும் உதவிபுரிந்தனர். 'செம்மணி தெற்கு' துரவடி என்னுங் காணியில் எழுந்தருளியிருக்கும் இராஜராஜேசுவரி (பேய்ச்சியம்பாள்) கோவில் திருப்பணி விஞ்ஞாபனம்' என்ற தலையங்கமிட்டு, அவரும், ஆலயபரிபாலன சபையாரும் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்திலிருந்து சில பகுதிகளைக் கீழே தருகிறேன்.

"மேற்குறிக்கப்பட்ட தேவியின் ஆலயம் சாஸ்திர ரீதியற்றதாய் அமைக்கப்பட்ட ஓர் சிறு மண் குடிசையாயிருந்தமையையும். அத்தேவியார்க்கு இக்கிராமத்திலுள்ள ஸ்ரீ கூழங்கைத் தாமோதரர் என்பார் அடிமைபூண்டு விளக்கேற்றல், பொங்கலிடல் முதலிய தொண்டுகளைத் தன்பொருள் கொண்டும், கிராமவாசிகளிடத்து யாசித்த பொருள் கொண்டும் நடாத்தி வந்தமையையும் அன்பர்கள் யாவரும் நன்கறிவர்.

[இதற்கு அடுத்த இருபந்திகளிலும் ஐயம்பிள்ளையாரின் வழித்தோன்றல் திரு. வே. கனகசபை கோவிற்றிருப்பணியைத் தொடங்கியதுமுதல் கோவில் ஊர்ப் பொதுவாகி. ஆலய பரிபாலன சபையார் நிருவாகத்தை ஏற்றது வரையுள்ள வரலாறுகள் கூறப்படுகின்றன.]

"ஐயன்மீர்! தற்போது அங்கத்தவர்களாகிய நாங்களும் வேறு சிலரும் தனித் தனி, மூர்த்தி, ஆசனக்கல், தீர்த்தக்கிணறு, மணி, இன்னுஞ் சில பொருட்களும் உபகரித்திருக்கிறேம். இன்னுஞ் சாஸ்திர ரீதியான திருப்பணிக்குக் கொண்டுவரச் சில திருத்தங்களையும் ஸ்தூபி பலிபீட மீருகிய பல அங்கங்களையும், அமைத்து

அஷ்டபந்தன கும்பாபிஷேகம் செய்யவேண்டி யிருத்தலால் புண்ணிய சீலர்களே! தாங்களும் இப்புண்ணிய விஷயத்திலீடுபட்டுத் தங்களா லியன்ற திருப்பணியை அல்லது பொருளுதவி யைச் செய்யுமாறு மிக்க வணக்கத்துடனும் அன்புடனும் வேண்டுகின்றோம் ''

இவ் விஞ்ஞாபனத்தோடு நின்றுவிடாது தேவிமூர்த்தியை நாயன்மார்கட்டு, அரியாலை, கொழும்புத்துறை, நல்லூர் முதலாமிடங்கட்கு எழுந்தருளச் செய்து அடியார்களிடமிருந்து நிதி சேர்க்கப் பெற்றது. இந்நிதியையும், நாயன்மார் கட்டிலிருந்த தேவியடியார்களினது நிதியையுங் கொண்டு அதிபர், மூலஸ்தான பண்டிகை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், சபாபண்டபம் முதலானவற்றின் திருப்பணிகளை முற்றுவித்தார். இத்திருப்பணிகளைச் செவ்வனே நடாத்துதற்குக் கச்சேரியடி சரவணமுத்து ஆசாரி தலைமையில் கட்டட வேலைக்காரர்கள், தமது சம்பளத்தைக் குறைத்தும் மனப்பூர்வமாக ஒத்துழைத்தும், உத வியமைக்கு அம்பாள் அடியார்கள் என்றும் நன் றியுடையவர்களாயிருத்தல் அவசியமாரும்.

இம் மண்டபங்கள் தவிர மடப்பள்ளி, களஞ் சிய அறை, வாகனசாலை, மணி, மணிக்கூட் டுக் கட்டடம். தீர்த்தக் கிணறு, வசந்த மண்ட பம், கதவுகள். மூலதேவி மூர்த்தி. விநாயகர் கோவில். விநாயகர் சிலை, நந்தி, பலிபீடம், கோமுகிக்கல், முதலியவற்றை ஆலயபரிபாலன சபையாரும், மற்றும் ஊர்ப் பிரமுகர்களும் தனித்தனி செய்து பூர்த்தி செய்வித்தமையை யும், கோவிலுக்கு வேண்டிய குடை, திருவாசி, சகடை, வாகனங்கள் முதலிய உபகரணங்களைச் செய்தளித்தமையையும் இவ்விடத்திலே குறிப்பது பொருத்தமேயாகும்.

இவ்வாறு யாவும் ஒழுங்கானபின் ஸ்ரீமுக வருடம் சித்திரை மாதம் 19 ஆந் தேதி திங் கட்கிழமை காலை 10 — 24 மணியளவில், புனர்பூசமும், மிதுனமும் கூடிய சுபமுகூர்த்தத் தில் நீர்வேலி அப்பாத்துரைக் குருக்களவர்களால் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நிகழ்த்துவிக்கப் பெற்றது. கும்பாபிசேகத்தைத் தொடர்ந்து பன்னி ரண்டு நாள்கள் அபிஷேகங்களும். அலங்கார உற் சவங்களும் நிகழ்ந்தன.

1959 ஆம் ஆண்டு ஆடி மாசம் 29 ஆந் தேதி தொடக்கம் கொடியேற்றித் திருவிழா முதலான நைமித்தியவிழாக்கள் ஒவ்வோராண்டும் பத்து நாள்கள் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப் பெற்றன.

திருவிழாக்களும், அலங்கார உற்சவங்களும் நிகழத்தொடங்கவே செப்பமான, அகன்ற வீதி களும் தேவையாயின. திருவருட்டுணையாலும், அம்பாள் அடியார்களின் நிதி, நில உதவிகளா லும் இத்தேவைகள் நன்முறையிலே பூர்த்தியா யின. படிப்படியாகக் கோவிலின் மின்வெளிச்சம் அமைத்தல், புறமதில் கட்டுதல், ஓடுவேய்தல் முதலாந் தேவைகளும் நிறைவுபெறலாயின.

## மங்குதசை:

சில ஆண்டுகள் ஆலயபரிபாலனம் நன்கு நடைபெற்று வந்தது. உற்சவங்களும், பூசைக ளும் சிறப்புற நடந்தேறின. எனினும் காலத்தின் போக்காலும், தளர்ச்சிகளினாலும் கோவிலின் நிர் வாகத்திலே சற்றே வீழ்ச்சி ஏற்படலாயிற்று. ஆலய பரிபாலனசபை உறுப்பினர்களிலே சிலர் காலமானதும், அதிபரின் மரணமுஞ்சேர்ந்து கோ வில் முன்னேற்றத்தை இடையிலே தடுத்து நிறுத் தின. கோவில் மூலஸ்தானத்தைத் திருத்திச் செப்பஞ் செய்யவும், தூபி எழுப்பவும் வேண் டிய அவசியதேவை ஏற்பட்டபொழுது, அம்பாளை மூலஸ்தானத்திலிருந்து பெயர்த்துவந்து மகாமண் டபத்தின் ஒருபக்கத்திலே தகரக்கூடடைத்து, அத னுள்ளே எழுந்தருளச் செய்தனர். இதனால் ஆண் டுதோறும் நடைபெறுங் கொடியேற்றவிழா முத லியன தடைப்பட்டன. பொருளாதாரக் குறை வால், கோவில் ஜீர்ணோத்தாரணவேலைகள் நீண்ட காலமாகக் கைவிடப்பட்டிருந்தன.

இடைக்காலத்தில், கோவிலின் திருத்த நட வடிக்கைகளுக்கென ஒரு மகாசபைக்கூட்டம் 20-5-62 ஞாயிற்றுக்கிழமை ஆலயமண்டபத்தில், காலஞ்சென்ற முடிக்குரிய நியாயவாதி திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கோவில் நிருவாக உரிமைகள் சம்பந்மான சில பிரச்சினைகள், இக்கூட்டத்திலே ஆராயப்பெற்றன.

## ஆலயத்திருப்பணிச்சபை.

மேற்குறித்த பிரச்சினைகளினாலே ஆலயத் திருப்பணி வேலைகள் தடைப்படுவதை விரும்பாத சிலரின் முயற்சியினால் 4-4-66 திங்கட்கிழமை,

(பங்குனி உத்தர புண்ணியதினத்தன்று) ஆலய கர்ப்பக்கிருக, அர்த்தமண்டப புனருத்தாரண திருப்பணி மீண்டும் தொடங்கப்பெற்றது. ஆலய பரிபாலனசபை, ஆலயத்திருப்பணிக்கென நியமித்த ஐவரைக்கொண்ட உபகுழு தன்பணிகளைத் தொடங்கி, 11 - 4 - 66 இல் ஆலயத்திருப்பணி விஞ்ஞாபனம் ஒன்றை வெளியிட்டது. திருவாளர்கள் இ. சரவணமுத்து, சு. பரநிருபசிங்கம், ச. சதாசிவம், இ. திருநாவுக்கரசு, செ. இரத்தின சபாபதி ஆகியோரைக்கொண்ட இச்சபையினரின விஞ்ஞாபனத்திலிருந்து ஒரு பகுதி பின்வருமாறு:

"ஒப்பந்தக்காரர், சீமெந்து, மணல், கோவிலிடிப்பு, அத்திபாரச்செலவு, நிழற்கொட்டகை போடல், தச்சுக்கூலி, கொல்வேலை முதலிய வற்றைப் புறநீங்கற்படுத்திப் பண்டிகை வேலையையுஞ் சேர்த்துச் சுத்த மதிப்பீடாகப் பதினையாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றொரு ரூபா (15,891 - 00) எனக் கணக்குத் தந்திருக்கின்றார். அவருடைய கணக்கில் பதினெட்டு வித வேலைப்பாடுகளமைந்த 439 யார் திருக்கற்கள் கணப்படுகின்றன. ஒரு யார் திருக்கல் 12½, 19, 20, 24, 26, 30. 32, 57, 66, 25, 52. 126, 254 ரூபா வீதம் பெறுமதி உடையதாகக் காணப்படுகிறது. ஆகையால் அம்பாள் அன்பர்களாகிய நாம் ஒவ்வொருவரும் மேற்குறிப்பிட்ட தொகை நிரம்பக்கூடிய வகையில் அம்பாள் திருப்பணி உதவியை ஷெ ஆலய சபைத் தனதிகாரி திரு. இ. சரவணமுத்து அவர்களிடம் கொடுத்துப் பற்றுச் சீட்டைப் பெற்று. அப்பற்றுச் சீட்டைச் சபையார் கேட்கும் சமயத்தில் காட்டக் கூடியதாகக் கவனமாக வைத்துக்கொள்வோமாக. அம்பாளன்பர்களாகிய நாம் உதவும்பணம் திருப்தியாகச் சேருங் காலத்தில் வரும் பராபவ வருட சித்திரை மாதத்தில் ஒரு சுப முகூர்த்தத்தில் அடித் திருக்கல் நாட்டுவிழாவை நடைபெறச் செய்வோமாக."

## "தவமும் தவமுடையார்க்காகும்'

"அடித் திருக்கல் நாட்டு முகூர்த்த எல்லேக்குள் பணத்தை உதவினல் பேருதவியாகும். என்று ஆலய பரிபாலன சபையாரால் 20-3-66 இல் நியமிக்கப்பட்ட திருப்பணிச்சபையாராகிய நாம் விநயத்துடன் கேட்கின்றேம். 'இறைவியின் துணையின்றி இறைவனை அடைய முடியாது என்பதைச் சிந்திப்போமாக' என்ற திருப்பணிச்சபையாரின் கோரிக்கைக்கு உடனடிப்பலன் ஒன்றும் கிட்டவில்லை. எனினும் திருப்பணிச்சபையார், பணம் வரும் என்ற நம்பிக்கையிலே அடித்திருக்கல் நாட்டினையுங் குறித்த காலத்திலே தொடங்கி ஓரளவு தமது சொந்தப் பணத்தையே முதற்பணமாகக் கொண்டு திருப்பணியில் ஈடுபட்டனர். ஆனல் அவர்களின் எதிர்பார்ப்பு ஏமாற்றமாயிற்று. எனவே திருப்பணி வேலைகள் மீண்டும் தளர்நடையிட்டன.

## காலத்தினற் செய்த உதவி.

அம்பாளின் திருவருளேயே தன் உறுதுணையாகவும், அவளின் மண்டபமே தனது செயல் நிகழிடமாகவும் கொண்டு கடந்த பல்லாண்டுகளாக யாழ். நாயன்மார்கட்டுச் சைவசமய அபிவிருத்திக் கழகம் செயற்பட்டு வருகின்றது. ஆலயமண்டபத்திலே வெள்ளிக்கிழமைதோறும் கூட்டுப் பிரார்த்தனை நடாத்துதல், சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவித்தல், மார்கழித் திருவெம்பாவை நாள்களில் வீதிப் பஜனை நடாத்துதல், மணிவாசகர் விழா, திருவள்ளுவர் விழா முதலியவற்றை எடுத்தலாகிய சிவப்பணிகளிலே ஈடுபட்டு வந்த கழகம், கோவிற்றிருப்பணிக்கான தனது பங்கையுஞ் செய்வதற்கு முன்வந்தது: கிறிஸ்தவர்கள் நடாத்தும் 'கரோல்' முறையைப் பின்பற்றி இல்லங்கள் தோறும் சென்று, கும்மி, கோலாட்டங்களின் மூலம் அம்பாள் ஆலயத் திருப்பணியின் அவசியத்தை எடுத்தோதி நிதியுதவி கோரியது. 1, 2, 3-10-68 ஆகிய மூன்று நாள்களில் நாயன்மார்கட்டுக் கிராம மக்கள் யாவரும் சிறுவர், சிறுமியர், பெரியவர்கள் என்ற வேறுபாடின்றி இப் பணியிலே கலந்து கொண்டனர். கழகக் காரிய தரிசியாகிய திரு. கா. இரகுநாதனின் மேற்பார்வையிலேஅலுப்புச் சலிப்பின்றிக் கும்மி, கோலாட்ட நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்ட யாவர்க்கும் அம்பாளின் திருவருட் பார்வை கிட்டும் என்பது உறுதி.

"பெரியோர்களே! அம்பிகையின் திருக்கோவிற் றிருப்பணிக்கு நிதி திரட்டும் நோக்கமாகச் சைவக் குழந்தைகளாகிய நாம் இல்லங்

கள்தோறும் யாழ் / நாயன்மார்கட்டுச் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவோடு பஜனை ஊர்வலமாகச் செல்லத் தீர்மானித்துள்ளோம். எங்கள் பஜனை ஊர்வலம், விஜயதசமித் திருநாளாகிய புரட்டாசித்திங்கள் 15 ஆம் நாள் (1-10-68) மாலை 5 மணியளவில் மேற்படி அம்பாள் ஆலயத்தில் வழிபாட்டுடன் தொடங்கித் தொடர்ந்து 15ஆம் 16ஆம், 17ஆம் நாள்களாகிய(1,2,3-10-68) 3 நாள்கள் நடைபெறும். பெரியோர்களே! எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தாய் உண்டு. ஆனால்எங்கள் எல்லோருக்கும் தாயாகவிளங்கும் அம்பிகைத்தாயின் திருக்கோவிலின் இன்றைய நிலையைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். விழாக்காலத்திலே அழகான சிங்கவாகனத்தில் அமர்ந்து ஆடிவரும் அம்பிகையின் திருக்கோலத்தைக் கண்டுகளித்த எமது கண்கள் இன்று வரண்டிருக்கின்றனவே! இதைக்கண்டுங் காணாதவர் போலவும், கேட்டுங் கேளாதவர் போலவும் நாம் வாழலாமா? புண்ணியம் எல்லாவற்றிற்கும் மேலாகிய சிவபுண்ணியத்தை நிறைவேற்றுவது எமது மேலான கடமையல்லவா?" என்று கூறும் கழக விளம்பரப்பத்திரந்தந்து, சிறுவரும், சிறுமியரும்ஆடிப் பாடியவற்றை இன்று நினைத்தாலும் நெஞ்சம் இனிக்கின்றது. இல்லநிதிச் சேகரிப்பால், யாழ். நாயன்மார்கட்டுச் சைவ சமய அபிவிருத்திக் கழகம சேர்த்த நிதித்தொகை ரூபா 3700/- வரை ஆலயபரிபாலன திருப்பணிச்சபைத் தனாதிகாரியிடம் சேர்க்கப்பெற்றது. கழகத்தின் செயல் இதனோடு நின்றுவிடவில்லை. நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை மாணவ, மாணவியரையும், கழக உறுப்பினர் பலரையுங்கொண்டு சிரமதான அடிப்படையிலே கோயிற்றிருப்பணிகளிலே அது உதவியமையையும் இங்குக் குறிப்பிடல் பொருந்துவதே.

## 'யாவும் அவள் தருவாள்'

இவ்வாறு பல எழுச்சிகளும், வீழ்ச்சிகளும் இன்பமும், துன்பமுங் கலந்த ஒரு சூழ்நிலையில் ஸ்ரீ இராஜராஜேசுவரி அம்பாள் ஆலயத் திருப்பணி ஓரளவு நிறைவு பெற்றுள்ளமை, அவளின் திருவருளின் பயனேயாகும். இம்மாதம் 30-6-71 இல் ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் தொடங்கவிருக்கின்றமை நாயன்மார்கட்டுவாசிகளின் பெருந்தவப்பேறே எனலாம்.

ஓர் ஊரின் அமைதியும், செல்வமும், இன்பமுமெல்லாம் அவ்வூரின் நடுநாயகமாக விளங்கும் ஆலயத்தின் சிறப்பிலேயே தங்கியுள்ளன என்ற பேருண்மையை நாம் உணர்ந்து, எம் அன்னையாம் ஸ்ரீ ராஜராஜேசுவரி பேய்ச்சியம்பாளின் ஆலயத்தைச் சீருடனுஞ் சிறப்புடனும் வைத்திருப்போமாக. அவளை எந்நேரமும் சிந்தையிலிருத்தி வழிபட்டு, உடலாலும் உள்ளத்தாலும் பெறும் பயனைப் பெற்றுய்வோமாக.

> 'அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்.' - பாரதி

**ஆதாரங்கள்**


1. ஸ்ரீ இராஜராஜேசுவரி பேய்ச்சியம்பாள் ஆலயவரலாற்றறிக்கை (கல்லச்சுப்பிரதி - வெ. கந்தையா, ஆலய நிர்வாகசபைக் காரியதரிசி)
2. பராமரிப்புத்தத்துவ நியமனசாதனம்.
3. ஆலயபரிபாலனசபை, திருபணிச்சபை, சைவ சமய அபிவிருத்திக் கழகம் அவ்வப்போது வெளியிட்ட துண்டுப்பிரசுரங்கள்.

## நசித்திடல் வேண்டும் அன்னாய்!

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்.

- பாரதி

# ஆண்டு தோறும் நடந்தே செல்வார்




முன்னொருகால் திருநாவுக் கரசர் கைலை முதல்வனமர்ந் தருளுகின்ற கோலங் காணப்
பன்னரிய துயர்தாங்கிப் பயணஞ் சென்ற பான்மையிலே திருக்கேதீச் சரத்தை நோக்கித்
துன்னரிய காட்டிடையே சிவத்தைச் சொல்லித் தூயரிவர் ஆண்டுதொறும் நடந்தே செல்வார்
அன்னவரின் தூண்டுதலே அம்மை கோயில் அமைவதற்குக் காரணமாம் அவர்கள் வாழி!

# இரு நிதியைச் சேர்த்தார்









நாயன்மார் கட்டுவாழ் சைவ மக்கள் யாபேரும் ஒன்றாகக் கூடி நின்று
ஆயனவன் சோதரியாய் அமர்ந்த தேவி ஆலயத்தைத் திருத்திடவே முனைந்தார் அன்பால்
பாயுமருள் வீறுகொண்ட பாலர் பல்லோர் பாங்காகக் கும்மிகோ லாட்டந் தம்மால்
தேயுமுடல் காலுளைவை எண்ணு தில்லந் தேடிச்சென் றிருநிதியைச் சேர்த்தார் வாழி !

சங்கதம் கற்றோன் நல்ல தமிழையும் உணர்ந்தோன் வல்ல
பொங்கெழிற் கவிதை யாத்துப் போற்றலும்புகழும்பெற்றோன்
தங்கிசை ருதுசங் காரந் தமிழிலே தந்தோன் ஐயன்
சங்கைசேர் சதாசி வப்பேர் சமைந்தவன் பாடல் காண்பீர்

# ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அஷ்டகம்

(எண் சீர் ஆசிரிய விருத்தம்)

அன்னை சாம்பவி பிறைமுடி அபலை
அபர்ணை பார்வதி உமையருட் காளி
மன்னி மாசல மகள்சிவை காத்யா
யனிமுக் கண்ணிநற் பயிரவி கருணை
துன்னு சாவித்ரி அழிவில்யவ் வனத்தாள்
சுபஞ்செய் வாளநிறை பெருந்திரு அருள்வாள்
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 1

அன்னை மோகினி தேவிமுப் புவன
அகண்ட ரூபிணி பெருமகிழ் வளிப்பாள்
மன்னு நற்கலை வடிவினள் தளிர்க்கை
வயங்கு வேய்ங்குழற் கானத்தின் விருப்பாள்
நன்னர் மங்கலை உடுபதி நிகரும்
நலங்கொ ளானனி புகைக்கணற் செகுத்தாள்
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 2

அன்னை பொற்சிலம் பரதனக் கடகம்
அங்க தங்குளிர் முத்தணி அணிவாள்
மன்னு சம்பகஞ் சாதிமென் மலர்நன்
மாலை யாள்கழுத் தணியொளி திகழ்வாள்
துன்னு வீணையுங் குழலுமிக் கணிசெய்
தொடிக்க ரத்திவீ ராசனத் திருப்பாள்
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 3

அன்னை ரௌத்திரி பத்திர காளி
கைலை வைணவி யாரழல் முகத்தி
மன்னு நற்பிரம் மாணிமுப் புரங்காய்
வயிரி வானவர் வழுத்துசெஞ் சோதி
தன்னை அண்டினர்ப் புரந்தருள் அம்மை
தக்கன் மாமகள் சாமுண்டி வலவை
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 4

அன்னை சூலம்வில் அங்குச பாசம்
அடுத்த கையினள் பிறைமதி அணிவாள்
பொன்னும் வாணியும் போற்றிடுந் தகையாள்
வராகி மாமது கைபடர்ச் செகுத்தாள்
சின்ன மாகமல் லாசுர மூகர்ச்
சிதைத்த நங்கையம் பிகைமகேச் சுவரி
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 5

அன்னை முத்தொழில் புரிபவள் மேலாம்
அணங்கு மிக்குயர்ந் தொளிர்தரு நிறத்தாள்
மன்னு காயத்ரி பிரணவ அமுத
சார பூரணி வழிபடற் குரியாள்
தன்னை நேரிலோங் காரிதாழ் விநதை
தனயற் காத்தவள் தைத்தியர்ச் செகுப்பாள்
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 6

அன்னை நித்தியை ஆகம மாதி
வழுத்த நின்றவள் ஆரியை தேவி
அன்ன வாகனன் முதலெறும் பீரும்
அனைத்து மீன்றவள் செகமயல் புரிவாள்
வன்ன பஞ்சகப் பிரணவ மாதி
வகுத்த நாயகி மாலினி மனத்தாள்
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 7

அன்னை அட்டகம் அநுதினம் அன்பின்
அகன்ற சிந்தையிற் படிக்குநல் லடியார்
அன்னை தன்கடைக் கண்ணரு ணோக்கம்
அடைவ ரிங்கழி யாப்பெருந் திருவும்
அன்னை தூயமந் திரப்பெருந் துதியால்
அரன்ச மீபமன் னரும்பம் அளிப்பாள்
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 8

காலஞ்சென்ற வித்தியாதரிசி பிரம்ம ஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்களால்
சமஸ்கிருதத்தில் இருந்து மொழி பெயர்க்கப்பெற்றது.

பண்டித மணியை எங்கள் பசுந்தமிழ்க் கனியை இன்பக்
கண்டென இனிக்குஞ் சொல்லிற் கருத்தினைப் பொதிய வல்ல
மண்டிய அறிவி னுரை மதிப்பதே கரும மந்தத்
திண்டிறற் செம்மல் தந்த சிந்தனைச் செல்வங் காண்பீர்.

# ஆலய தேவி சேவை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

திருவருட்பயன்

*"பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமே*
*நீயொன்றுஞ் செய்யாம னில்"*

**உரை**

"பேய் ஒன்றுந்தன்மை - திருவருளாகிய பேய் தன்வயம் செய்யுந் தன்மை, பிறக்கும் அளவும் - உன்பால் உளதாகும் வரையும், நீ - ஆன்மாவாகிய நீ, ஒன்றுஞ் செய்யாமல் நில் - உன் முனைப்பு அடங்கி அசைவற நில்"

"ஒன்று செய்ய வேண்டும் என்னும் உணர்வு எழுந்தோறும், "திருவருள் செய்வது செய்க" என்று தாம் அடங்கியிருக்கும் சாதகம் ஈண்டுக் கூறப்பட்டது. 'பிறக்குமளவும் நில்' என்றார், திருவருள் நடத்துதலை ஒன்றுஞ் செய்யாமல் நிற்பவர் காண்பராதலின், 'பிறக்குமளவும்' என்றார், பிறந்தபின் திருவருள் எடுத்துச் சுமக்குமாதலின். 'நீ' என்றது பசுஞான மேலிடுகின்ற நிலையில் நிற்கும் மாணுக்கனை."

"'சும்மா இரு சொல்லற' என்றவாறு - வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க என்பதாம்"

"உன் செயலற்றுநில்"

OOO

இறைவன் பேயோடாடி. இறைவி பேய்ச்சி; பேயொன்றுந் தன்மை பிறப்பிப்பவள். அவள் பித்தனுக்குச் சத்தியாய்ப் பித்தி என்ற பெயருந் தரிப்பவள்.

OOO

பராசத்தியின் ஓரம்சம் இராஜராஜேசுவரி. நாயன்மார்கட்டில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அம்மை இராஜராஜேசுவரி. அங்கே எழுந்தருளிக் கருணைமழை பொழியும் அம்மைக்குப் பொதுசனங்கள் இட்டு வழங்கும் பெயர் பேய்ச்சி.

ஆன்மாக்களுக்குப் பேயொன்றுந் தன்மை பிறப்பிக்குந் தேவிக்குப் 'பேய்ச்சி' என்ற பெயர் பொருத்தம்! பொருத்தம்!! முக்காலும் பொருத்தம்!!!

OOO

பேய்ச்சியாகிய தேவியை,

"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை" என்கின்றது திருவாசகம்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி", பிறவுமாகிப் பிறந்திளைக்கின்ற ஆன்மாக்களை மெல்ல மெல்லப் பிழை நெறிகளினின்றும் பேதித்து, மனிதப் பிறப்பை அருளி வளர்த்துத் தன் வயஞ் செய்தற்குச் சதா முயன்றுகொண்டிருக்கின்றாள், அந்தப் பெய்வளையாகிய 'பேய்ச்சி'. அவள் பாதத் திறம்பாடி யாடுதல் நம் கடனும்.

OOO

'உடம்பினுள் உத்தமனைக் காண்' என்கின்றனர் ஞானிகள். உத்தமனைக் காணுதற்கு உத்தமியின் அநுக்கிரகம் வேண்டும். முதலில் உடம்பினுள் உத்தமியைக் காண வேண்டும்.

OOO

நமது உடம்பு தேவி எழுந்தருளியிருக்குங் கோயில். ஆத்மா அவள் வீற்றிருக்கும் மூலஸ்தான பீடம்.

ஆத்மா பஞ்சகஞ்சுகன். கஞ்சுகம் - சட்டை. ஐந்து சட்டைகளை அணிந்திருக்கின்றோம். இந்தத் தூல சரீரம் வெளிச்சட்டை.

அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆநந்தமயம் என்பன அந்தச் சட்டைகளின் பெயர். இந்தச் சட்டைகளைத் தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என்று மூன்ருக வகுப்பதுமுண்டு. இந்த மூவகைச் சரீரங்களையும் ஆலயத்தின் மூன்று வீதிகளுக்கொப்பிடலாம். இதிலிருந்து ஆலய அமைப்பு இச் சரீர அமைப்பே என்பதை உணரலாம்.

'பேய்ச்சியும்' உத்தமியும் ஆகிய தேவியை நமது சரீரத்தில் ஆன்ம பீடத்தில் தரிசித்தற்குச் செய்யும் புற முயற்சியே ஆலய அமைப்பும் வழிபாடுமாம்.

ஆலயத்தை நமது சரீரமாகப் பாவனை செய்து, அமைக்கும் முறையில் அமைத்து, பேணும் முறையிற் பேணுதல் வேண்டும். ஆலய வழிபாடே ஆன்மாவில் ஆன்ம நாயகனையும் நாயகியையுங் காணுதற்கு வழி.

'ஆலயந் தொழுவது
சாலவும் நன்று.'

இவ்வாற்ருல், ஆலயத் திருப்பணியும் ஆலய சேவையேயாமென்பது சொல்லாமலே அமையும்.

---

கொல்லும் பிறவிக் கொடுமையைக் களைந்து
வெல்லும் வழியினை விரைவினில் நல்கித்
தொல்லைகள் போக்கும் தூயளாம் அன்னையை
"நல்லைக் குமரன்" நயந்துபா டினரே.

# "இல்லை யென்றுதருளும் இராஜ இராஜேஸ்வரி"

ராகம் : தர்மவதி | தாளம் : ஆதி

பல்லவி

தொல்லைவினை தீர்ப்பாய் தாயல்லவோ — என்றும்
இல்லை யென்றுதருளும் இராஜ ராஜேஸ்வரி! (தொல்லை)

அநுபல்லவி

எல்லை இல்லாக் கருணை என்றும் பொழிபவளே
எங்கள் குலதேவி! எழுதா மறைமுதல்வி! (தொல்லை)

சரணம்

நல்லவர் வாழுகின்ற நாயன்மார் கட்டினிலே
நாலு நூற்றுண்டின் முன்னர் அமர்ந்தவளே!
பல்லறமும் புரிவார் பேய்ச்சி எனப் போற்றும்
பரதேவதே! பாதம் பணிவார்க்கருள் தாயே! (தொல்லை)

— நல்லைக் குமரன்

பூமாலை சூட்டிப் புவியேத்துந் தேவிக்குப்
பாமாலை சூட்டிப் பரவினர் - கோமாலை
அண்ணனைப் பெற்றவளை அன்போடு "வெள்ளையண்ணை"
நண்ணவழி நல்கினரே நன்று,

# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பஞ்சகம்

"வெள்ளை அண்ணை"

ஈழமெனுந் திருமாதின் வதன மாகும்
யாழ்ப்பாணத் தவ்வதனத் திலங்குஞ் சைவத்
தூழமையும் நாயன்மார் கட்டுர் ஆகும்
உயர்நுதலில் ஒளிர்திலகம் உலகில் மக்கள்
பீழையெலாம் நீக்கியருள் பேய்ச்சி யம்மன்
பெருங்கோவி லெனப்பலரும் பேசும் வண்ணம்
ஏழுலகந் தழைக்கவருள் ஈயுஞ் செல்வி
இராஜரா ஜேஸ்வரியே இலங்கி வாழி.

அன்பாகும் பூவினிலே யடிய ராகும்
அளிக் குலத்துக் தமிழ்தூட்ட வருளாஞ் செந்தேன்
இன்பமுடன் ஊறச்செய் தெங்கும் வாழும்
யாவருமே உனைப்பாடி இறைஞ்சும் வண்ணம்
பொன்பொருளும் புகழ்கலையும் பொலியு மூராய்ப்
பொருந்துமுயர் நாயன்மார் கட்டூர்த் தொண்டர்
என்பவர்கள் உன்னடிகள் குறிக்கச் சேரும்
இராஜரா ஜேஸ்வரியே இலங்கி வாழி.

முருகரெனும் அடியவரின் உள்ளக் காவில்
முளைத்தெழுந்த பூங்கொடியே முன்பு மாந்தர்
உருகுமுளத் துடனுள்ளே உவந்து போற்ற
ஒருகோவில் அமைந்திடலால் இந்த ஊரில்
மருமலரால் யாமிங்கு வந்தே யுன்றன்
மலரடிகள் போற்றவருள் வரங்கள் ஈவாய்
இருநிலத்தோர் யாவர்களும் வாழ வைக்கும்
இராஜரா ஜேஸ்வரியே இலங்கி வாழி.

சிவனுகும் ஞானவொளி தன்னில் தோன்றிச்
செய்திடவைந் தொழிலீசன் சத்தியாகித்
தவமாகும் நன்னெறியிற் சார்ந்தே நாளும்
தாரணியில் மக்களெலாந் தழைக்கு மாறு
நவயுகத்துள் விஞ்ஞான நலன்க ளாகி
நானிலத்தோர் உயர்ந்திடவே நண்ணும் அம்மா!
இவணுறையும் அன்னையுனை ஏத்து கின்றோம்
இராஜரா ஜேஸ்வரியே இலங்கி வாழி.

ஏழுலகும் புகழ்பரப்பி ஈழம் வாழி
யாழ்நகரும் எந்நாளும் இனிது வாழி
ஆழியுடை தரித்திடுமிவ் வகிலத்துள்ளோர்
அவர்புகழ நாயன்மார் கட்டூர் வாழி
ஊழிதொறும் பேய்ச்சியம்மன் உன்றன் கோவில்
உலகினிலே எந்நாளும் உயர்ந்து வாழி
ஏழிசையால் உன்பாடல் இசைப்போ ருள்ளோ
இராஜரா ஜேஸ்வரியே இலங்கி வாழி.

வண்ணையில் அமர்ந்து நாளும் வாழ்வினை அருளும் அம்மை
எண்ணிய எண்ணி யாங்கே, எய்திடச் செய்வாள் என்ற
உண்மையை உணர்ந்த நங்கை ஒப்பிலா அறிவின் மிக்கார்
எண்ணத்திற் புனிதம் வாய்ந்த இரத்தினம் உரைத்தல் கேளீர்.

# அருளுக எமக்கே அம்மா

ஸ்ரீமதி இரத்தினம் நவரத்தினம் எம், ஏ, எம். லிட்.
(முன்னுள் வித்தியாதிபதி, வட பிரதேசம், யாழ்ப்பாணம்)

உலகத்தைப் படைத்து. அளித்து வரும் இறைவனைத் தாயாகப் பாவித்து அன்பினல் நைந்து உருகுவது மனித வர்க்கத்துக்கு இயல்பே யாகும். பிறந்தது முதல், குழந்தைப் பருவம் முழுவதும் தாயைப் பிரிந்து கிடக்கும் மனித வாழ்க்கைக்குத் தாயைக் கடவுளாகப் பாவிப்பது இயற்கையான அன்பின் வழியே. ஆதலால், கடவுளைத் தாயாகப் பாவிக்கும் முறை உண்மை யான நன்மை பயக்கும் அன்பின் நோக்கமே யாகும். எனவே எம் நாட்டில் தொன்று தொட்டுத் தந்தையும் தாயுமாய்த் தாங்குகின்ற "அம்மை யப்பனை" அயரா அன்புடன் வழி பாடு செய்யும் முறை, பத்தர்களின் மனத்தைக் கவர்ந்திருக்கிறது.

இறைவனும் மெய்யடியார்களுடைய பக்தி வலையிற் சிக்கியும் இரங்கியும் தாயுருவங்கொண்டு குழந்தைகளைக் காப்பாற்றக் கருணை கூர்ந்து முக்கியமான புண்ணிய ஸ்தலங்களில் ஆவிர்ப்ப வித்துள்ளார்.

'அவளுந் தானு முடனே காண்க.' என்பது திருவாசகம். ஈழநாட்டுக்கு இருதயஸ்தானமாயுள்ள வண்ணை மாநகரென்றபுண்ணிய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ தையல்நாயகியாக ஆவிர்ப்பவித்துச் சக்தி வடிவமாக உலகம் ஈன்ற அன்னை பிரகாசிக்கின்றனள்.

வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் எழுந் தருளாநின்ற தையல்நாயகியம்மையின் பிரார்த்தனைத் துதிப்பாவைத் தினமும் ஓதி ஓதி உணர்வோ மாக. (அறுசீரடி ஆசிரிய விருத்தம்)

இராகம்: யமுனகல்யாணி.

தையல் நாயகித் தாயே!
நல்ல தருணமிஃ தம்மா!
வையம் புகழும் வண்ணை
நகரில் வாழ்சிவ காமி!
கையின் வரமுடன் நல்குங்
கந்த ஸ்வாமியைத் தந்த
மையல் வினைதீர் தாயே
மங்கள வாழ்வரு ளம்மா!

தையல் நாயகித் தாயே!
நல்ல தருணமிஃ தம்மா:
பொய்ம்மைப் புலன்வழி யோடும்
பொல்லா மனத்தெனை ஆண்டு
மெய்ம்மைச் சிவநெறி சேர்க்கும்
வீரகள் குருபதம் போற்றி
எய்யா இன்பருள் பெறவே
ஏத்துகம் அருள்புரி யம்மா!

தையல் நாயகித் தாயே!
நல்ல தருணமிஃ தம்மா!
பையப் பையவே ஆய்ந்து
பண்ணு வாய்சிவ தொண்டு
வெய்ய பிறவி யொழியும்
வெந்தழி யும்பழி பாவம்
ஐயன் குருமொழியிஃ தாற்ற
அருளுக எமக்கே யம்மா.

தையல் நாயகித் தாயே!
நல்ல தருணமிஃ தம்மா!
உய்யச் சிவன்பா லுன்னை
முழுவது மொப்புக் கொடுத்தால்
ஐயன் அன்னையைப் போலே
ஆதரிப் பானெனும் அருள்வாக்(கு)
ஒய்யெனக் கொண்டியா முஞற்றும்
உறு தவந் தருவா யம்மா!

தையல் நாயகித் தாயே!
நல்ல தருணமிஃ தம்மா!
வையத் தெல்லாஞ் சிவன்றன்
வலியால் நிகழுஞ் செயலே:
கையி லெங்கள் வலியாற்
காணுஞ் செயலொன் றில்லை;
மெய்யிஃ தென்னும் போதம்
மேவ அருள்வா யம்மா!

பாரதியின் பாட்டு, பராசத்தியின் பாட்டு,
பேரதனுக் கீடில் பெரும்பாட்டு — பாரதனை
ஆட்டுகின்ற பாட்டாகும் "ஆரா வமுத"ஞர்
காட்டுவதைக் காண்பீர் களித்து.

# பாரதி பாடிய பராசக்தி

"ஆராவமுதன்"

இறைவனிடத்தே ஆன்மாவை ஆற்றுப் படுத்தி நிலையான பேரின்பத்தினை அது துய்க்கும் வண்ணம் செய்வது திருவருளாகும். இத்திருவருளே பராசக்தி. 'ஒரு நாமம் ஒருருவம்' இல்லாத இறைவனை ஆணுக வும், அவன் ஆன்மாக்கள் மீது பொழியும் பேரருளினைப் பெண்ணுகவும் உருவகித்த திறன் வியத்தற்குரியதே. அம்மையும் அப்பனும் பிரிவின்றி நிற்கும் தன்மையினை அர்த்த நாரீச்சுர வடிவிலே வகுத்துக் காட்டிய கற்பனைத் திறனையும் நாம் புகழாதிருத்தல் இயலாது. சைவசித்தாந்தம் திருவருளினை மிகுதியும் உயர்த்திப் பேசுகின்றது. எனினும் ஆன்மாவின் முடிந்த குறிக்கோள் திருவருளை அடைவதோடு நின்று விடுதலை அது ஏற்பதில்லை

'இருவர் மடந்தையருக் கென்பயனின் புண்டாம்
ஒருவன் ஒருத்தி ஒருத்தி யுறின்
(திருவருட்பயன் - இன்புறுநிலை - 2)
என்பது திருவருட் பயன்

இதன் மூலம் சைவசித்தாந்தம், 'பதி' ஒருவரே என்ற தனது கோட்பாட்டினை நிறுவுகின்றது.

அகச் சமயங்களுள், சைவத்திற்கு அடுத்ததாகச் 'சாக்தம்' இடம் பெறுகின்றது. சக்தியைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடுதலே சாக்தமாகும். சாக்தமதத்திற்கு ஆகமங்களும் வகுக்கப்பட்டுள்ளன. எனினும் சிவத்தின் முழு முதற்றன்மையை ஏற்றுக்கொண்ட அளவிற்குச சக்தியின் முழுமுதற்றன்மை, இந்தியாவிலே பிற் காலத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தத்துவக்கோட்பாடு ஒருபுறமிருக்க, சமுதாய அமைப்பிலே ஆணின் தலைமைத் தன்மை வலிமையான அடிப்படையிலே நிறுவப்பட்டதன் பயனுகவும் சக்தி வழிபாடு இரண்டாவதிடத்தைப் பெற்றது என்ற உண்மையையும் நாம் மறுத்தல் இயலாது; இருப்பினும் சாக்தம் தன் வலிவை முற்றுக இழந்ததோ எனில் அதுவும் இல்லை.

தமிழகத்திலே சக்தி வழிபாடு, தனது உச்ச கட்டத்தை மீண்டும் அடைந்த காலம் நாயக்க மன்னர் ஆட்சிக் காலமாகிய பதினுன்காம், பதினைந்தாம், பதினுறும், நூற்றுண்டுகளாகும். நவராத்திரி வழிபாடுகளும், வைபவங்களும் தமிழகத்திலே இக்காலத்திலேதான் கால்கொள்ளத் தொடங்கின. படிப்படியாகப் பெண்மை, அடிமை நிலைக்குத் தள்ளப்பட்ட காலத்திலே, நவராத்திரி வழிபாடுகள் முக்கிய இடம் பெற்றமை வியப்பிற்குரிய ஒரு செய்திதான். நாயக்கமன்னர் கலைகளைப் பேணி வளர்த்துக் காப்பதற்கு நவராத்திரியைக் கருவியாகக் கொண்டனரேயன்றிச் சக்தியின் முக்கியத்தை நிலை நாட்டவோ, பெண்மையின் மகத்துவத்தை மீண்டும் நிலை நாட்டவோ முயலவில்லை, என்பதையே இது காட்டுகின்றது. மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ், சகலகலாவல்லி மாலை அபிராமியந்தாதி போன்ற பெண்பாற்றெய்வப் பிரபந்தங்களும் இக் கால கட்டத்திலே தான் தோன்றுகின்றன.

இத்தகைய ஒரு சூழலின் பின்னணியிலே தோன்றிய பாரதி. சமுதாய எண்ணங்களிலும், மொழியின் போக்கிலும் புரட்சி செய்தது போலவே, தெய்வ வழிபாட்டிலும் ஒரு புரட்சிக் கவிஞுக விளங்கக் காண்கின்றோம். 'ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று கூறி அலையும் அறிவிலிகளை'ப் பரிகசித்த அவனே, பல தெய்வங்களைப் பல நிலையிலே பாடி மகிழ்ந்தாலும்,

அவன் பரம்பொருட்டன்மையை ஏற்றி வழி பட்ட தெய்வம் பராசக்தி ஒருத்தியேதான் என்பதை, அவனுடைய பத்திப் பாடல்களை ஆராய்ந்து கற்போர் அறிந்து கொள்வர்.

கண்ணன் பாட்டிலே பாரதியின் பாவனு சக்தி சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது என்பது துண்மையே ஆனல் அவற்றினூடு அவனது பத்தித் திறத்தின முழுமையினையும் காணல் இயலாது. முருகன், விநாயகர் முதலாங் கடவுளர்களை அவன் பாடுகையில் அவனது சுவையுணர்வையும், சொல்லாட்சியையும், சந்தக் கவியின்பத்தையுங் காணலாமேயன்றி முழுமையான ஆன்ம சமர்ப்பணத்தைக் காணல் கூடவில்லை. யேசு கிறிஸ்து, அல்லா முதலிய பிறமத தெய்வங்களைப் பாடிய அவன் ஒரு சமய சமரச வாதி எனத் தன்னை நிரூபிக்க முயன்றபோதிலும், அங்கும் அவர்களுக்குப் பரம் பொருட்டன்மையை ஏற்றவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. ஆனல், பராசக்தியைப் பாடும்பொழுது தான் உண்மையான, பத்தியிலே கனிந்த, பரம்பொருளுணர்ந்த பாரதியினை நாம் காணக்கூடியதாய் இருக்கிறது. சமுதாயத்திலே பெண்மைக்கு முதன்மையளிக்க வேண்டும் என்ற உந்தலாலே அவன் சக்தி வழிபாட்டினை மேற்கொண்டானு, சக்தி வழிபாட்டினுல் ஈர்க்கப்பட்டு அதனல் உலகிலுள்ள பெண்கள் யாவரையும் தேவிகளின் திருவடிவாகக் கண்டானு என்பது ஆய்விற்குரியது. காரணம் எதுவாயினும் பாரதியின் உள்ளம் சக்தி வழிபாட்டிலேயே கனிந்து, நெகிழ்ந்து, பக்குவம் அடைந்தது, என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் பல உள.

சிவன் ஆன்மாக்களின் உய்திப் பொருட்டுச் செய்தருள்கின்ற ஐந்தொழில்களையும் பராசக்திக்கே ஏற்றிப் பாரதி பாடுவது கருதத்தக்கது.

போற்றி உலகொரு மூன்றையும் புணர்ப்பாய்
மாற்றுவாய் துடைப்பாய் வளர்ப்பாய் காப்பாய்
கனியிலே சுவையுங் காற்றிலே இயக்கமும்
கலந்தாற் போலநீ அனைத்திலுங் கலந்தாய்
உலகெலாந் தானுய் ஒளிர்வாய் போற்றி!
அன்னை போற்றி! அமுதமே போற்றி!

(பாரதி பாடல் போற்றியகவல் 1 — 6)

இந்த அடிகளிலே இறைவி பரம்பொருளாக உருவகிக்கப்படுகின்றுள். சிலப்பதிகார வேட்டுவ வரியிலே சிவனுரின் திருவிளையாடல்கள் யாவும், சிவையில் - பராசக்தியில் - ஏற்றி இளங்கோவடிகள் பாடுவதும் ஈண்டு ஒப்புநோக்கத் தக்கதாகும்.

மதியின் வெண்தோடு சூடுஞ் சென்னி
நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி தவளவாள் நகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து
அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோன்

(சிலம்பு வேட்டுவ வரி 54 – 53)

இவ்வாறு இறைவனையும், இறைவியையும் பேதமின்றி ஒருவராகக் காண்பது, பாதி பெண், பாதி ஆண் வடிவான அர்த்தநாரீச்சுர மூர்த்தமாகப் பரம்பொருளைக் கொள்வதன் வெளிப்பாடாகலாம். 'சிலம்புங் கழலும் புலம்புஞ் சீறடி' என இளங்கோவடிகளும். 'நிரை கழல் அரவம் சிலம்பொலி அலம்பும்' எனத் திருஞானசம்பந்தரும் குறிப்பாகப் புலப்படுத்தும் இவ்வுண்மையை,

'தீயென்பார் அறிவென்பார் ஈசன் என்பார்', எனப் பாரதி வெளிப்படையாகப் புலப்படுத்துகின்ருன்.

புனலாகவும், காலாகவும், ஒளியாகவும், வெளியாகவும் இயற்கையின் பல்வேறு வடிவங்களிலே பரம்பொருளைக் கண்டு மகிழ்கின்ற போக்கும் பாரதியின் சக்திப் பாடல்களிலே மிகுதியுங் காணப்படுகின்றது. அப்பர் பெருமான் சிவமெனுஞ் செம்பொருளை,

'இருநிலனுய்த் தீயாகி நீருமாகி
யியமான னுயெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றுகி
யாகாசமாய் ................'

(நின்ற திருத்தாண்டகம் 1)

எனப் பாடியருளுவது போன்றே பாரதியும்;

இயற்கையென் றுனையுரைப்பார் - சிலர்
இணங்கும்ஐம் பூதங்கள் என்றிசைப்பார்
செயற்கையின் சக்தி யென்பார் - உயிர்த்
தீயென்பார் அறிவென்பார் ஈசனென்பார்.
(சிவசக்தி 1 - 2)

என்று குரலெடுக்கின்றான்.

வேதங்கள் இந்திரன், வருணன், அக்கினி முதலான ஆண் தெய்வங்களுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றன. பெண் தெய்வங்கள் இரண்டாவதிடத்தையே பெறுகின்றன. பாரதி வேதங்களைப் படித்து உணர்ந்தவன். வேதவேள்விப் பாடல்களின் பாணியிலே பராசக்தியை அவன் பாடி மகிழ்வது நோக்கத் தக்கது. பகைவர்கள், இயற்கை உற்பாதங்கள், துன்பங்கள் துயரங்களினின்றும் தம்மையும், தம் திருக்களையும் காப்பாற்றும்படி வேதகால முனிவர்கள் பாடிய வழியினைப் பின்பற்றிப் பாரதியும் பராசக்தியை வேண்டி ஏத்திப் போற்றுகின்றான்.

நின்னருள் வேண்டுகின்றோம் - எங்கள்
நீதியுந் தர்மமும் நிலைப்பதற்கே
பொன்னவிர் கோயில்களும் - எங்கள்
பொற்புடை மாதரும் மதலையரும்
அன்னநல் லணிவயல்கள் - எங்கள்
ஆடுகள் மாடுகள் குதிரைகளும்
இன்னவை காத்திடவே - அன்னை
இணைமலர்த் திருவடி சரண்புகுந்தோம்.
(சிவசக்தி - 7)

வேதத்தின் ஞான காண்டப் பிரிவிலமைந்த உபநிடதங்கள் பிரும்மம் என்ற பரம்பொருளையும், அதனால் இயங்கும் பிரபஞ்சத்தையும் உருவகங்கள் வாயிலாக விளக்க முயல்கின்றன. கடோபநிஷத்திலே வரும் நசிகேதன் கதையிலே உடல் தேராகவும், புத்தி பாகனாகவும், ஐம்பொறிகள் ஐந்து குதிரைகளாகவும், ஆன்மா உள்ளமர்ந்தோனாகவும் உருவகிக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் நன்கு கற்றவனான பாரதி, காலம் என்ற பெரு வனத்திலே, அண்டகோளம் என்ற மரத்திலே, காளி சக்தியாகிய வண்டானது, மூல அத்துவாக்களையே ஆறு கால்களாய்க் கொண்டு அமர்ந்திருக்கிறது என்ற முன்னவர் கருத்தினை அழகாகப் பாடுகின்றான்.

காலமாம் வனத்தி லண்ட கோளமாம ரத்தின்கீழ்
காளிசக்தி என்றபெயர் கொண்டு - ரீங்
காரமிட் டுலவுமொரு வண்டு
காலும்விழி நீலவண்ண மூலஅத்து வாக்களெனும்
கால்களா றுடையதெனக் கண்டு - மறை
காணுமுனி வோருரைத்தார் பண்டு
மேலுமாகிக் கீழுமாகி மேலுமுள திசையுமாகி
விண்ணுமண்ணு மானசக்தி வெள்ளம் - இந்த
விந்தையெல்லாம் ஆங்கதுசெய் கள்ளம்
வேதமாய் அதன்முன்னுள்ள நாதமாய் விளங்குமிவ்
வீரசக்தி வெள்ளம்விழு பள்ளம் - ஆக
வேண்டும்நித்த மெந்தனேழை யுள்ளம்.
(மஹா காளியின் புகழ் 1)

வேதங்கள் உபநிடதங்களை மாத்திரமன்றித் தேவாரம், திருவாசகம், ஆழ்வார்களின் பத்திப் பனுவல்கள், தாயுமானவர் திருப்பாடல்கள் முதலானவற்றிலெல்லாம் மூழ்கித் திளைத்தவன் பாரதி. எனவே அவற்றின் செல்வாக்கும் அவனுடைய சக்திப் பாடல்களிலே நன்கு புலப்படுகின்றது. அப்பர் பெருமான் தமது திருவங்கமாலையிலே, உடலின் உறுப்புக்கள் யாவையும், இறைவனை இன்ன இன்னவாறு வழிபடல்வேண்டும் என்று அவற்றிற்குக் கட்டளையிடுகின்றார். பாரதியும் தன் நெஞ்சை நோக்கி,

சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சாதனைகள் யாவினையுங் கூடும்
சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சக்தியுற்றுக் கல்லினையுஞ் சாடும்.

சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சக்தி வழியினையது காணும் - கண்ணைச்
சக்தி தனக்கே கருவி யாக்கு - அது
சக்தியுற்றுக் கல்லினையுஞ் சாடும்
(சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம் 1 - 2)

இவ்வாறே தன் செவி, வாய், நாசி, மெய், கண்டம், தோள், நெஞ்சம் முதலாகிய பல உறுப்புக்களுக்கும் மனத்தினுக்கும் கட்டளை பிறப்பிக்கின்றான். சக்தியை நினைத்து உள்ளுருகி அவளுக்கே தன்னை முற்றாக அர்ப்பணிக்கும் பொழுது பாரதியின் குரலிலே மணிவாசகப்பெருமானின் ஒலி கலந்து இழைவதைக் கேட்கின்றோம்.

கரணமுந் தனுவும் நினக்கெனத் தந்தேன்
காளிநீ காத்தருள் செய்யே
மரணமும் அஞ்சேன் நோய்களை அஞ்சேன்
மாரவெம் பேயினை அஞ்சேன்
இரணமுஞ் சுகமும் பழியுநற் புகழும்
யாவுமோர் பொருளெனக் கொள்ளேன்
சரணமென் றுனது பதமலர் பணிந்தேன்
தாயெனைக் காத்தலுன் கடனே.

(மஹாசக்தி பஞ்சகம் - 1)

என்ற பாரதி பாடலில்,

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமைஎல் லாமும்
குன்றே அனையாய் ஆட்கொண்ட
போதே கொண்டி லையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

(குழைத்த பத்து - 7)

எனும் மணிவாசகப் பெருந்தகையின் கசிவு நிலையினை ஒரு துளி தெறித்துள்ளமை, நன்கு புலனாகின்றது.

சிவனாரின் கூத்திலே ரவுத்திரம் நிறைந்த ஊழிக்கூத்தே, ஆன்மாக்களின் ஆணவமுனைப்பினை முற்றாய் நீக்கி அவற்றை முத்தி நிலைக்கு இட்டுச் செல்வதாகும். சிவத்தையும் சக்தியிலே கண்ட சக்திதாசனாகிய பாரதி ("சக்திதாசன்", "காளிதாசன்" என்பனவும் பாரதியின் புனை பெயர்களாகும்) சக்தியின் ரவுத்திர தாண்டவத்தைப் படம் பிடித்துக் காட்டும் இடம் மெய் சிலிர்க்க வைக்கின்றது. திருப்புகழ்ச் சந்தக்கவி ஓசையின் வளத்தினைப் பாரதியின் 'ஊழிக்கூத்துப்' பாடல் எமக்கு எடுத்து மொழிகின்றது.

வெடிபடு மண்டத் திடிபல தாளம்போட வெறும்
வெளியி லிரத்தக் களியொடு பூதம்பாடப் - பாட்டின்
அடிபடு பொருளின் அடிபடு மொலியிற்கூடக் - களித்
தாடுங் காளி! சாமுண்டீ! கங்காளி
அன்னை! அன்னை! ஆடுங் கூத்தை
நாடச் செய்தாய் என்னை. 1

ஐந்துறு பூதம் சிந்திப்போயொன் றாகப், பின்னர்
அதுவும் சக்திக் கதியில் மூழ்கிப் போக அங்கே
முந்துறும் ஒளியிற் சிந்தை நழுவும் வேகத்-தோடே
முடியா நடனம் புரிவாய் அடுதீ சொரிவாய்
அன்னை! அன்னை! ஆடுங் கூத்தை
நாடச் செய்தாய் என்னை. 2

(ஊழிக் கூத்து 1 - 2)

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதலால், வேறொன் றறியேன் பராபரமே' என்பது தாயுமானசுவாமிகளின் திருவாக்கு. பாரதியின் உயிர் இலட்சியமே இதுதான். அவன் ஒரு சமுதாயக் கவிஞன். தான் பெற்ற இன்பத்தால் இந்த வையமும் களிகொள்ளவேண்டும் என்ற பெருங் கனவாளன் அவன்.

'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'

(திருக்குறள் - கல்வி 9)

எனத் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்ததும் ஈண்டு நோக்கத் தக்கது.

நல்லதோர் வீணைசெய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி - எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே
சொல்லடி சிவசக்தி - நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?

(நல்லதோர் வீணை - 1)

என்ற பாடலிலே 'மாநிலம் பயனுற வழி காட்டல் வேண்டும்' எனவும், 'அவ்வாறு வாழாத வாழ்வு புவிக்குச் சுமையானது' எனவும் பாரதி கூறும் இடம், அவனது பேரிலட்சியத்தை எமக்கு நன்கு புலப்படுத்துவதாயுள்ளது.

கூடும் திரவியத்தின் குவைகள் - திறல்
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள்-இவை
நாடும் படிக்குவினை செய்து - இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கு மோங்கக் - கலி
சாகுந் திறனெனக்குத் தருவாய் - அடி

தாயே! உனக்கரிய துண்டோ? - மதி
மூடும் பொய்மையிரு ளெல்லாம் - எனை
முற்றும் விட்டகல வேண்டும்.

(யோகசித்தி - வரங்கேட்டல் - 9)

'இம்மையே தருஞ் சோறுங் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம்' எனப் புலவர்களை அழைத்த சுந்தரமூர்த்தி, உலகிற்கு நலஞ் செய்யத் தனக்குச் சக்தி தருமாறு வேட்ட பாரதியின் முன்னவரன்றோ? 'பொன்னும் மெய்ப்பொரு ளுந்தருவானைப். போகமுந் திருவும் புணர்ப்பானை', ஆரூரிலே கண்ட நம்பியாரூரரே போன்று இறைவியை வழுத்தி,

எண்ணுங் காரியங்க ளெல்லாம் - வெற்றி
ஏறப் புரிந்தருளல் வேண்டும் - தொழில்
பண்ணப் பெருநிதியம் வேண்டும் - அதிற்
பல்லோர் துணைபுரிதல் வேண்டும்''

என்றும், ''காணி நிலம் வேண்டும்'' என்றும் பாரதி கோருகின்ற கோரிக்கைகள் அவனைச் சக்தியோடு எவ்வாறெல்லாம் இணைத்துக் காட்டுகின்றன! 'எத் தவத்தைச் செய்தாலும், எதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே' என்றாற் போல எந்நிலையிலும், எதிலும் சக்தியின் கருணையையே பாரதி வேட்கின்றான்.

கதைகள் சொல்லிக் கவிதை எழுதென்பார்
காவியம்பல நீண்டன கட்டென்பார்
விதவி தப்படு மக்களின் சித்திரம்
மேவி நாடகச் செய்யுளை வேயென்பார்
இதய மோவெனிற் காலையும் மாலையும்
எந்த நேரமும் வாணியைக் கூவுங்கால்
எதையும் வேண்டில தன்னை பராசக்தி
இன்ப மொன்றினைப் பாடுதல் அன்றியே.

(பராசக்தி - 1)

இவ்வாறு எல்லாம் பராசக்தியின் லீலை என்றே உணர்ந்து எந்நேரமும் அவளையே மனத்தில் இருத்தினாலும், பாரதியின் உள்ளம் உலகியலிலே தட்டுளுப்புப்பட்டு அல்லலுறுவதும் வழக்கமாகவே இருந்தது. அவ்வேளைகளில் தேவார முதலிகளைப் போலவும், மணிவாசகப் பெருந்தகை போலவும் ஆழ்வார்கள் போலவும் பாரதியும் பராசக்தியை நோக்கிக் கதறியழுவது வழக்கம்.

விண்ணும் மண்ணுந் தனியாளும் - எங்கள்
வீரை சக்தி நினதருளே - என்றன்
கண்ணுங் கருத்தும் எனக்கொண்டு - அன்பு
கசிந்து கசிந்து கசிந்துருகி - நான்
பண்ணும் பூசனை கள்எல்லாம் - வெறும்
பாலை வனத்தில் இட்ட நீரோ' - உனக்
கெண்ணுஞ் சிந்தை யொன்றிலையோ - அறி
வில்லா தகிலம் அளிப்பாயோ

(யோகசித்தி- வரங்கேட்டல் 1)

உலகியற் கவலைகளால் அலக்கணுறும் பாரதி, அடுத்த கணமே தன்னைச் சமாளித்துக் கொண்டு பராசக்தியை மெய்யியல் நிலையிலே உணர்ந்து பாடத் தொடங்கி விடுவான்.

இன்னுமொரு முறைசொல்வேன் பேதை நெஞ்சே!
எதற்குமினிக் கவல்வதிலே பயனொன்றில்லை
முன்னர்நம திச்சையினாற் பிறந்தோ மில்லை
முதலிறுதி இடைநமது வசத்தில் இல்லை
மன்னுமொரு தெய்வத்தின் சக்தியாலே
வையகத்திற் பொருள்களெலாஞ் சலித்தல் கண்டாய்
பின்னையொரு கவலையுமிங் கில்லை நாளும்
பிரியாதே விடுதலையைப் பிடித்துக்கொள்வாய்

((பேதை நெஞ்சே - 1)

பராசக்தியினை உயிருந் தசையுமுள்ள அம்மையாய்ப் போற்றிசைக்கும் பாரதி, சூக்குமமான அருவமாகவும் கண்டு, தத்துவக் காட்டினுள் தவழ்ந்து உலாவுதலும் உண்டு. இதனைக் 'காலமாம் வனத்தில்' என்ற பாட்டிலே முன்னர்க் கண்டோமாயினும், வேறு சில இடங்களையுந் தொட்டுக் காட்டுவது அவசியமாகின்றது.

தெளிவுறும் அறிவினைநாம் - கொண்டு
சேர்த்தனம் நினக்கது சோமரசம்
ஒளியுறும் உயிர்ச் செடியில் : இதை
ஓங்கிடு மதிவலி தனிற் பிழிந்தோம்.

(சிவசக்தி - 4, 1-2)

எனவும்,

எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்தனவாய்
விண்ணிற் சுடர்கின்ற மீனையெலாம் - பண்ணி
- யதோர்
சத்தியே நம்மைச் சமைத்ததுகாண், நூறாண்டு
பத்தியுடன் வாழும் படிக்கு.

(மஹா சக்தி வெண்பா 4)

எனவும்,

மூர்த்திகள் மூன்று பொருள் ஒன்று - அந்த
மூலப்பொருள் ஒளியின் குன்று
நேர்த்தி திகழும் அந்த ஒளியை - எந்த
நேரமும் போற்று சக்தி என்று.

எனவும் பாரதியின் தத்துவநோக்கு விரி கின்றது.

எனினும் பாரிய தத்துவங்களின் தாங்கியாக, நெருடல் நிறைந்த சொற்கூட்டங்களாலே பாட்டிசைப்பது பாரதியின் வழியன்று. சித்தர் கணங்களின் பாட்டுக்களையும், காவடிச் சிந்துகளையும், கோபால கிருஷ்ணபாரதியார், அருணாசலக் கவிராயர் போன்றோரின் கீர்த்தனங்களையும் நன்கு படித்துச் செறியச் செய்து கொண்ட அவன், சாதாரண பாமர மக்களும் சக்தியின் புகழினைப் பாடி உருகத் தக்க வகையிலே, அவர்களின் இட்ட தெய்வமான முத்துமாரியின் திருநாமத்தை இணைத்து எழிலார்ந்த பாட்டுக்களைப் பாடியுள்ளான்.

உலகத்து நாயகியே - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரி
உன்பாதம் சரண்புகுந்தோம் - எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரி!
கலகத் தரக்கர்பலர் - எங்கள்முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரி!
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் - எங்கள்முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரி
பலகற்றும் பலகேட்டும் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
நிலையெங்குங் காணவில்லை - எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரி!
நின்பாதம் சரண்புகுந்தோம் - எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!

(முத்துமாரி - 1

"நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு.அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரந் தருவாள்" என்று முழுமையாக நம்பியவன் பாரதி. எனவே மிக அருமையாகச் சில சமயங்களிலே அவனது மனந் தளர்ந்த போதிலும், அதனால் விரக்தியடைந்து சக்தியை ஏசிய போதிலும், ("ஆளாங் கிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால் - வாளாங் கிருப்பீர் திருவாரூரில் வாழ்ந்து போதீரே" - சுந்தரமூர்த்தி சுவாமிகள்) அவன் உலகம் அல்லல் நிறைந்தது என ஒப்பாரி வைக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவனல்லன். பாரதி ஓர் மகிழ்ச்சி வாதி. (Optimist அதனாலே தான் அவன்.

"துன்பமேஇயற்கையெனும்சொல்லைமறந்திடுவோம்
இன்பமே வேண்டி நிற்போம், யாவும் அவள் தருவாள்")

(தேச முத்துமாரி - 6)

என்று பாடுவது இயல்கின்றது.

பாரதி, பராசக்தியினைப் பொதுவாக எல்லாப் பொருள்களிலும் சிறப்பாகப் பெண்ணினத்திலுங் கண்டான். எனவே பெண்மையைப் பாடும்போதெல்லாம் பத்தி கனிந்த வீராவேசத்தோடு, அவன் பாடுவது தவிர்க்க முடியாததாகின்றது. பெண்மைக்கு மாசு செய்வோரை அவன் நாயினுங் கேவலமாகவே மதித்தான். பாஞ்சாலி சபதத்திலே திரௌபதியைப் பல இடங்களில் 'அன்னை' எனவே பாரதி அழைத்தல் காணலாம். (துச்சாதனன் எழுந்தே அன்னை துகிலினை மன்றிடை உரிதலுற்றான், .... - உட்சோதியிற் கலந்தாள் - அன்னை உலகத்தை மறந்தாள் ஒருமையுற்றாள்" அந்த அன்னைக்குத் துன்பிழைத்த துச்சாதனன் "வெறும் மாடு". அவளை வீதியிலே இழுத்து வந்த துச்சாதனனைப் பார்த்து ஒன்றுஞ் செய்யாத மக்கள் "வீரமிலா நாய்கள்" "நெட்டை மரம்'' போன்றவர்கள்! பாரதியைப் பொறுத்தவரை பராசக்தியும், பாரத சக்தியும் ஒன்றுதான். அதுமட்டுமன்று. உலகின் எந்தப் பகுதிக்கும் அருள் சுரந்து காப்பவள் அன்னை பராசக்தியே! ருஷ்யா, சார் கொடுங் கோலனின் கரங்களினின்றும் விடுபட்டபொழுது பாரதி,

தேவி கருணை மழைபொழியத் திருவார் இணுவைப் பதியினிலே
மேவி வாழும் வீரமணி மேலாம் இசையில் நடனத்தில்
ஆவி மலர்த்தும் கீர்த்தனைகள் அமைக்குந் திறனில் ஈடில்லார்
கூவி அன்னை அருள்வேட்கும் குரலைக் கேட்பீர் இசையூடே.

## 1

# கடைக்கண் பார்த்தருள் கல்யாணி!

இயலிசை வாரிதி, யாழ்ப்பாணம்
என். வீரமணி ஐயர் இயற்றியது.

இராகம் : கல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

கடைக்கண் பார்த்தருள் கல்யாணி ! -- தாயே
அடைக்கல மாயுந்தன் அடியிணை பிடித்தேனே
(கடைக்கண்)

அநுபல்லவி

படைக்கல மாய்த்திரி சூலமேந்துங் கௌரி
விடைக்கபா லிமருவும் விசாலாக்ஷீ ஆதரி
(கடைக்கண்)

சரணம்

ஆயன்மால் அயன்போற்றும்
அகிலாண்ட டேஸ்வரி
நாயன்மார் கட்டு வளர்
நளினி மகேஸ் வரி
சேயென் வினை தீர்க்கும்
இராஜரா ஜேஸ்வரி
தாயேயுன் பதமன்றித் தாரணியில் துணை
யுண்டோ
(கடைக்கண்)

## 2

# கண் குளிரக் காட்சி தந்தாள்

இராகம் : ரஞ்ஜனி தாளம் : ஆதி

பல்லவி

கண்குளிரக் காட்சி தந்தாள் கல்யாணி
மண்புகழும் நாயன்மார் கட்டினி லமர்ந்து
(கண்குளிரக்)

அநுபல்லவி

எண்குணத் தான் மருவும் ஏகாம்ப ரேஸ்வரி
இசைபாட அருள் ஈஸ்வரி (கண்குளிரக்)

சரணம்

கஞ்சமல ரடியில் செஞ்சிலம் பொலித்திட
அஞ்சலென அபய வரதமும் அளித்திடும்
ரஞ்ஜனி நிரஞ்ஜனி இராஜரா ஜேஸ்வரி
தஞ்சம் அருள்வா யெனக் கெஞ்சுமெனக்குஇன்று
(கண் குளிரக்)

---

மாகாளி பராசக்தி உருசிய நாட்டிற்
கடைக்கண் வைத்தாள், அங்கே
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்.
(என்றே பாடுகின்றான் புதியருஷியா 1-2)

சத்ரபதி சிவாஜி தனது நாட்டின் மக்களுக்கு அளிக்கும் வீர உரையும்,

'ஜய ஜய பவானி ! ஜய ஜய பாரதம்
ஜய ஜய மாதா ! ஜய ஜய துர்க்கா'
(சத்ரபதி சிவாஜி 1-2)

எனவே தொடங்குகின்றது. வெற்றிமுரசு கொட்டி வீரசுதந்திரப்பண் இசைக்கையிலும், 'நெற்றி யொற்றைக் கண்ணனோடு நிர்த்தனஞ் செய்தாள், நித்தசக்தி வாழ்க' என்றே பாரதி முழங்கினான். சுருங்கச்சொன்னால் சக்தி — பாரதி = 0 என்பதே பெறப்படும்.

சக்தி சக்தி சக்தீ சக்தீ - சக்தீ சக்தீ வாழி நீ
சக்தி சக்தி சக்தீ சக்தீ - சக்தீ சக்தீ வாழி நீ
(சக்தி திருப்புகழ் 6)

நற்றவச் சைவவாழ்வை நயத்தலே குறியாய்க் கொண்டார்
பற்பல சமய நூல்கள், பலதிறத் தமிழின் நூல்கள்
உற்றுநன் காராய்ந் துண்மை உணர்ந்தவர் மதியின் மிக்க
சொற்றிறம் வாய்க்கப் பெற்ற முருகவேள் வரைந்த தி:.தே.

# சக்தி பேதங்கள்

புலவர், ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்.
(ஆசிரியர், 'திருக்கோயில்', சென்னை.)

**முன்னுரை :**

'பொருள் ஒன்றே உள்ளது. அதனை அறிஞர்கள் பலவாகக் கூறுவர்' (ஏகம் சத் விப்பிரா பகுதா வதந்தி) என்பது வேதமொழி. அம்முறையில், சக்தி என்பது ஒன்றேயாயினும். அதன் தொழிற்பாட்டால் அது பலவகையாகக் கூறப்படும். 'சத்திதன் பலவோ? என்னில், தான் ஒன்றே; அநேகமாக வைத்திடுங் காரியத்தால்,' என்பது சிவஞான சிததியார். திருவாசகத்தில் வரும் திருவெம்பாவைப் பாடல்களை அனைவரும் அறிவர். திருவெம்பாவை என்பது மனோன்மணி, சர்வபூததமனி. பலப்பிரதமனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, இரவுத்திரி, சேட்டை, வாமைஎன்னும நவசக்திகளின் செயலைக் குறிக்கின்றது என்பர். அதனுலேயே 'சக்தியை வியந்தது' என அதற்கு நுண்பொருள் தலைப்புக் கொடுக்கப் பெற்றிருக்கின்றது. சக்தி ஒன்றே பலவேறு வடிவபேதங்கள் கொண்டு வெவ்வேறு தொழில்களை இயற்றி உயிர்கட்கு நலம் புரியும் என்பது தாற்பரியம். இந்நவ சக்திகளின் இயல்கள் செயல்கள் வருமாறு:

**நவசக்திகள் :**

(1) மனோன்மணி, பக்குவம் எய்திய உயிர்களை மலத்தினின்று நீக்கிச் சிவத்துடன் சேர்க்கும். (2) சர்வபூததமனி, உயிர்களிலெல்லாம் ஒன்றி, உடன் கலந்து நின்று, அவற்றின் புண்ணிய பாவங்களை அகற்றுவிககும். (3) பலப்பிரதமனி சூரியனிடத்தில் பதிந்துநின்று தீய கிருமிகளை அழிதது, நல்ல பொருள்கள் பெருகி வளர்வதற்கு ஆக்கம் அளிக்கும். (4) பலவிகரணி, சந்திரனிடத்தில் நிலைபெற்று அமுதத்துளிகளைச் சொரிவித்துப் பயிர்பச்சைகளும், உயிர்த்தொகுதகளும் தழைத்துச் செழித்தோங்க உதவி செய்யும். (5) கலவிகரணி வானத்தில் இருந்து, எல்லாப் பொருள்களையும் ஏற்றுநின்று அவைகள் தன்னிற் கலந்து இணைய இடம் தந்து நிறகும். (6) காளி, காற்றினகண கலந்து பிராணமயமாய் விளங்கி, உயிர்களுக்கு நலம் விளைவிக்கும். (7) இரவுத்திரி நெருப்பினகண் தங்கி அதற்கு வெப்பம் அளித்து நிற்கும. (8) சேட்டை, நீரில நிலைபெற்று அதற்குக் குளிர்ச்சியும், சுவையும் உண்டாக்கும். (9) வாமை, மண்ணில் விளங்கி ஐம்பூதங்களின் இயல்புகளும், செயல்களும் நிகழுமாறு செய்யும்.

**சத்தமாதர்கள் :**

உலகை இயக்கி ஐந்தொழில்கள் புரிந்துவரும் அருளாற்றலாகிய சத்தியானது, தனக்கென்று ஒரு பெயரும் வடிவமும் இல்லாததாயினும், அன்பர்கள் பொருட்டுப் பல பெயரையும், வடிவங்களையும் கொள்ளும். இம்முறையில், பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி என்னும் சத்தமாதர்களாகவும் வடிவங்கொண்டு சக்தி ஒன்றே திகழ்வதும் உண்டு. இவ்வெழுவருடைய இயல்களையும், செயல்களையும் இலக்கியங்கள் ஆங்காங்கே சிறப்புறக் குறிக்கும். யானைத்தோல் போர்த்தவள் மகேசுவரி. வானரங்கள் குவித்த மலைகளால் கடலை அடைத்தவள் நாராயணி. கடலின் வயிறு கிழியும்படி வேற்படையை ஏவியவள் கௌமாரி. கற்பக மலரைக் கூந்தலில் அழகுறச் சூடியவள் இந்திராணி. சிங்கத்தை ஊர்தியாகக் கொண்டவள் காளி. வேதங்களால் மிகவும் புகழ்ந்து சிறப்பிக்கப் பெறுபவள் அபிராமி. பிரளயத்தினின்று உலகை மீட்டருளியவள் வராகி எனப் பலவகைகளில் சக்தியின் வடிவபேதத்தைச் சாத்திரங்கள் புகழ்ந்து கூறும்.

சிலப்பதிகாரம் என்னுஞ் செந்தமிழ்க் காப்பியத்தில் சத்திவழிபாடு பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. கொற்றவை, பிடாரி, பத்திரகாளி, துர்க்கை ஆகிய சத்தியின் வடிவபேதங்கள், சிலப்பதிகாரததின் வழக்குரைகாதையில் குறிககப் பட்டுள்ளன. இவ்வாற்றால், இற்றைக்கு ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு முற்பட்ட மிகப் பழங்காலத்திலேயே தமிழ்நாட்டிற் சக்தி வழிபாடும் சக்தியின வடிவபேதங்களும் பரவிப் பெருகியிருந்தமை தெரியலாம். சக்திவழிபாட்டை விளக்கும சாக்தேய சமயத்தின் தந்திர நூல்களில், சக்தியின் வடிவ பேதங்கள் பறபல கூறப்பெறுகின்றன. அவற்றுட சிலவற்றைப் பற்றிய தியான சுலோகங்களின் குறிப்பக்களை மட்டும இங்கு இயன்றவரையில் காண்போம.

(1) **பாலாம்பாள் :** நான்கு திருக்கைகளை உடையவள். அவற்றில் முறையே அக்கமாலை, புத்தகம், அபயமுத்திரை, வரதமுத்திரை என்பவற்றைக் கொண்டிருப்பவள். நீலோற்பல மலரில் வீற்றிருப்பவள். செந்நிற மேனியினள். ஆகமங்களில் இவளுக்குப் 14 வகையான திருவுருவ அமைப்புக்கள் கூறப்பெற்றிருக்கின்றன. இவளது மூலமந்திரம் மூன்று அல்லது ஆறு எழுத்துக்களைக் கொண்டது.

(2) **லலிதாம்பாள் :** சிந்தாமணி என்னுஞ் சிறப்பு மிக்க நவமணித் திரளால் அமைந்த மாளிகையில், பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன் என்னும் நால்வரையும் நான்கு கால்களாகக் கொண்ட கட்டிலில், காமேசுவரரின் மடியில் வீற்றிருப்பவள்; பதினாறு வயதினள். பாசம், அங்குசம், பஞ்சபாணம, கரும்புவில் ஏந்தியவள். தலையில் பிறை சூடி இருப்பவள். செந்நிறமேனியள். இவளது மூலமந்திரம் 15 எழுத்துக்களைக் கொண்டது. அது 12 வகைகளில் வெவ்வேருக அமையும். 16 எழுத்துக்களைக் கொண்ட இவளது மந்திரம் ஷோடசி எனவும், 18 எழுத்துக் கொண்டது சௌபாக்ய வித்யை எனவும் வழங்கப்பெறும். அனந்தபைரவம், அயக்கிரீவம், தட்சிணமூர்த்தம் என இவளை வழிபடும் நெறிகள் மூன்றுவகைப்படும். இவள் அனைத்துலகிற்கும் பேரரசி நிலையிற் பிறங்குபவள். இராஜமதங்கி, மந்திரிணி ஆகியோர் இவளது அமைச்சர்களாவர். காஞ்சி காமாட்சியம்மையே ஸ்ரீலலிதா தேவியாகக் கருதப்படுகிருள்.

(3) **இராஜராஜேசுவரி:** இவள் லலிதா தேவியைப் போன்றே திருவுருவம் உடையவள். இவளது மூலமந்திரம் 28 எழுத்துக்கள் கொண்ட மகா ஷோடசி எனப்படும். ஸ்ரீவித்யையே இப்படிவங்களுக்கெல்லாம் உரிய பொதுவான சாத்திரமாகும். இராஜராஜேசுவரி ஞானத்தின் முழுநிறைவைக் குறிககின்ருள். இவள் 60 வயதினள். சித்திரை மாதத்தில் வரும் வசந்த நவராத்திரி விழா இராஜேசுவரிக்கு மிகவும் சிறப்பானதாகும்.

(4) **நவாட்சரிபாலா :** இத்தேவி, பாலாம்பாளின் வடிவததையே கொண்டவள். ஒன்பது எழுத்துக்களைக் கொண்ட மூலமந்திரத்தை உடையவள். அங்கம், உபாங்கம், பிரத்தியங்கம் என்னும் மூன்றனுள், லலிதாதேவியின் அங்கமாகத் திகழ்பவள்.

(5) **அன்னபூரணி:** லலிதாதேவியின் உபாங்கமாகத் திகழ்பவள். வலக்கையில் பொன் அகப்பையும், இடக்கையில் மணிகள் பதித்த பொற்கலத்தில் பாற்சோறும் ஏந்தி, உயிர்களுக்கெலலாம் உணவு வழங்கும் தாயாக விளங்குபவள். பொனனிறம் வாய்ந்தவள். பொற்கலனும், பூமாலை களும் அணிந்திருப்பவள். காசிஷேததிரத்தைத் தனக்கே உரிய சிறப்புத் தலமாகக் கொண்டவள்.

(6) **அசுவாருடாம்பாள் :** லலிதாதேவியின் பிரத்தியங்கமாகத் திகழ்பவள். சிவந்த மேனியுடன் சிவப்புநிற ஆடைகளும், சிவந்தநிற அணிகலன்களுந் தரித்துச் சிவப்புநிறக் குதிரையில் இவர்ந்து வருபவள். ஒளிமுகமும், முக்கண்களுங்கொண்டவள். தனது நான்கு கைகளிலும் முறையே பல்லம் (சவுக்கு) என்னும் படையும், சர்ப்பாத முத்திரையும், பகைவரைப் பிணிக்கும் பாசமும், தீயவரை அச்சுறுத்தும் பொற் பிரமபும் ஏந்தியிருப்பவள்.

(7) **இராஜமாதங்கி :** கடம்பமலர் சூடியவள்; அமிழ்தக் களிப்பில் திளைப்பவள். மடியில் வீணையை வைத்துக் கொண்டு வாசிப்பவள். செந்நிற ஆடை உடுப்பவள். நெற்றியிற் கஸ்தூரி திலகம் அணிந்தவள். பிறை சூடியவள். காதிற் சங்கக் குழை தரித்தவள். புன்முறுவல் பூத்த முகத்தவள். மரகத மணியின் நிறம் வாய்ந்தவள். இராஜராஜேசுவரியின அறிவியற் கலையியல் ஆற்றலாக விளங்குபவள். மாசிமாதத்தில் வரும் நவராததிரி விழா இவளுக்கு உரியது. மதுரைமீனுட்சியம்மையை இராஜமாதங்கியாகவே பெரியோர்கள் கருதுவர்.

(8) **லகுஷியாமா :** மதங்கமுனிவரின் மகள். வைரமணிகள் பதித்த வீணையை வாசிப்பவள். அமிழ்தக் களிப்புடையவள். இந்திர நீலநிறங் கொண்ட ஒளிமேனியளாய்ப் பேரழகுற்றுத் திகழ்பவள். இராஜமாதங்கியின் அங்கதேவதை.

(9) **வாக்வாதினி :** வெண்தாமரை மலரில் வீற்றிருப்பவள். பாரதி என்னும் பெயரினள். தன் இருகைகளிலும் எழுதுகோலும், புத்தகமும் ஏந்தியவள். இளம்பிறை சூடியவள். வெண்ணிறம் உடையவள். உலக வாழ்வின் அச்சத்தைப் போக்குபவள். இராஜமாதங்கியின் உபாங்க தேவதை. இவளைக் கலைமகளின் கூருகக் கருதுவர்.

(10) **நகுலி :** இராஜமாதங்கியின் பிரத்தியங்க தேவதை. முத்துப்போன்ற முறுவலள். பகைவராகிய நாகங்களின் நாக்கை அறுப்பவள். பக்தர்களுக்குப் பரிந்து உதவி புரிபவள்.

(11) **வராகி:** லலிதா தேவியின் படைத்தலைவி. தண்டினி எனவும் வழங்கப்படுவாள். ஜம்புகேசுவரம் என்னும் திருவானைக்காவில் உள்ள அகிலாண்டேசுவரி, தண்டினியாகவே கருதப்படுகின்ருள். இவளது இருக்கை தாமரைமலர். கார்கால மேகத்தின் நிறங்கொண்டவள். தன்பால் அடைக்கலம புகுந்த அடியவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றி அருள்பவள். தனது எட்டுக்கைகளிலும முறையே சக்கரம், வாள், உலக்கை கலப்பை, அபயம், வரதம், சங்கு, கேடயம் ஆகியனவற்

றைக் கொண்டிருப்பவள். ஆஷாடமாதத்தில் வரும் நவராத்திரி விழாவிற்கு உரியவள். இலகுவராகி, சொப்பனவராகி. திரஸ்கரணி ஆகிய மூவரையும் முறையே அங்கம், உபாங்கம், பிரத்தியங்கம் என்னும் தேவதைகளாகக் கொண்டவள்.

(12) **புவனேசுவரி**: தேவி பாகவதம் என்னும் நூலில், மிகவும் புகழ்ந்து போற்றப் பெறுபவள். உதயசூரியன் போன்ற ஒளிநிறம் உடையவள். திருமுடியில் பிறையும், காதுகளில் தோடு முதலிய அணிகலன்களும் தரித்தவள். தனது நான்கு கைகளிலும் முறையே பாசம், அங்குசம், அபயம், வரதம் என்பவற்றைக் கொண்டவள். சாக்தவழிபாட்டின் தலைமைத் தெய்வம் புவனேசுவரியே ஆவள். ஸ்ரீவித்யையின் பஞ்சதசாட்சரிமந்திரம் இவளுக்கு உரியது. இவளது ஓரெழுத்து மந்திரத்தை உச்சரிப்போர் முற்றுணர்வும், பேரின்பமும் எய்துவர்.

(13) **சண்டி**: மின்னல் ஒளியுடையவள். சிங்க ஊர்தியினள். பயங்கரத் தோற்றத்தினள். ஒன்பது மாதர்களாற் சூழப்பட்டவள். முக்கண்ணும் பிறைமுடியும் உடையவள். சண்டன் எனனும் அசுரனைக் கொன்றவள். தனது எட்டுக் கைகளிலும் முறையே சக்கரம், கதை, வாள், கேடயம், அம்பு, வில், பாசம், கண்டனம் ஆகியவற்றைக் கொண்டிருப்பவள். இவளது மூலமந்திரம் 9 எழுத்துக்கள் கொண்டது.

(14) **துர்க்கை**: பராசத்தியின் காவற்படைத் தலைவி. ஆபத்துக் காலத்தில் அடைக்கலம் புகுந்தவர்க்கு அச்சம் போக்கி அருள் புரிபவள். துர்க்கம் என்பது அகழி. அது மதிலைப் பகைவர் அணுக முடியாமற் செய்வதுபோல, தன்னை வழிபடும் அன்பர்களைத் துன்பங்கள் அணுகாவகையிற் காத்தலால் இவள் துர்க்கை எனப் பெயர் பெற்றாள். அரசர்க்கும், வீரர்க்கும் உரிய வழிபடுதெய்வம். ஐப்பசி மாதத்தில் வரும் நவராத்திரி விழாவில், கௌரி, லட்சுமி, சரசுவதி ஆகிய மூவரும் சேர்ந்த ஓருருவமாகத் திகழ்பவள் துர்க்கை. அக்கினிகலை, சூரியகலை, சோமகலை என்னும் முக்கூறும் தன் பாற் கொண்டவள். ஆபத்துக் காலத்தில், தேனில் தோய்த்த வெட்சிப்பூவைத் தூவி, துர்க்க சூக்தம் என்னும் மந்திரம் ஓதி அர்ச்சனை செய்து வழிபட்டால், எல்லா இன்னல்களும், பிணிகளும் சூரியனைக் கண்ட பனிபோல விலகி ஒழியும். இவள் தனது நான்கு கைகளினும் முறையே சங்கு, சக்கரம், வில், அம்பு ஏந்தியிருப்பாள். தலையில் முடியும் பிறையுஞ் சூடியிருப்பாள் சிங்கவாகனமும், பசும்புல்லின் நிறமும் கொண்டவள்; மானும் இவளுக்கு வாகனமாகும்.

(15) **மகிஷாசுரமர்த்தினி**: இவளைக் கொற்றவை எனவுங் கூறுவர். எருமைத் தலையை உடையவனாக இருந்த மகிஷன் என்னும் கொடிய அசுரனை வென்று கொன்றதனால், இவளுக்கு மகிஷாசுரமர்த்தினி எனப் பெயர் வழங்குவதாயிற்று. தமிழகத்திற் பல கோயில்களிலும் மகிஷாசுரமர்த்தினியின் அழகிய சிற்பங்களைக் காணலாம். மகாபலிபுரம், கங்கை கொண்ட சோழபுரம், நாமக்கல் முதலிய இடங்களில், மகிஷாசுரமர்த்தினியின் அழகிய அற்புத சிற்பத் திருவுருவங்கள் அமைந்திருக்கின்றன. சிலப்பதிகாரத்தில், வேட்டுவவரியில் இளங்கோவடிகள் மகிஷாசுரமர்த்தினியின் திருவுருவத்தினைச் சிறந்ததொரு சொல்லோவியமாக வரைந்து காட்டியுள்ளார்.

முடிவுரை :

இத்தகைய வெவ்வேறான பற்பல திருவுருவங்களைக் கொண்டு திகழும் அருளாற்றலாகிய சக்தி என்னும் அம்மையின் அரிய, பெரிய, சிறப்புக்களை உணர்ந்து, நாம் அவளை அன்புடன் வழிபட்டு உய்ய முயலுவோமாக.

(நன்றி-'திருக்கோவில்' சௌமிய-ஐப்பசி நவம்பர் 1969.)

---

**மதிக்கின்ற மாணிக்கம்**

**உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்**
**மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை**
**துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன**
**விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே.**

**துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்**
**பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்**
**கணையுங் கரும்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையி**
**லணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே.**

— *அபிராமியந்தாதி*

சிவப்பணி செய்யுஞ் சிந்தை, சிறுவரின் அடக்கம் என்றும்
உவப்புற உரைக்குஞ் சொற்கள் ஊரினில் நிலைத்த நேசம்
அவப்பொழு தறியா வாழ்க்கை அன்பினுல் நிறைந்த நெஞ்சம்
இவற்றினைக் காண எங்கள் இரகுநாதன் எடுத்துக் காட்டே.

# இராஜராஜேசுவரி அம்பாள் கும்மி

**கா. இரகுநாதன்** (*நாயன்மார் — நாதன்.*)

1968ஆம் ஆண்டு மார்ச்மாதம் 1ஆம் 2ஆம் 3ஆந் தேதிகள் நாயன்மார்கட்டுச் சைவமக்களின் வாழ்விலே என்றும் மறக்கமுடியாத நாள்களாகும். அம்பாள் ஆலயத்திருப்பணி நிதிக்காய், நாயன்மார் கட்டுச் சிறுவர் சிறுமியர் கும்மி, கோலாட்டம் அடித்து வீடுதோறுஞ் சென்று நிதிசேர்த்த நாள்கள் அவை. அந்நாள்களிலே அவர்கள் பாடிய பாடல்களின் சில பகுதிகளைப் பெருமகிழ்வோடு தருகின்றேம்.

— ஆசிரியர்.

வாழ்கநம் நாடிது வாழ்கநம் மக்களும்
வாழிய வாழிய வாழியவே
ஆழ்கதுயர் தொல்லை அத்தனையும் அன்னை
அள்ளிப் பொழியுங்க ருணையிலே (வாழ்க)

நாயன்மார் கட்டில்வாழ் நல்ல குழந்தைகள்
நாமெல்லாம் அன்போடு வந்தோமிங்கு
தாயன்பு கொண்டஉந் தண்ணளி நாடியே
தாவியே கும்மிய டிக்க வந்தோம் (வாழ்க)

கோயில் இல்லாஊரிற் குடியிருக் கவேண்டா
குறைவில்லா நன்மொழி நீரறிவீர்
தாயெங்கள் பேய்ச்சியின் கோயில் நிலையினைத்
தக்கவரே நீங்கள் கண்டிடுவீர் (வாழ்க)

உற்றவரே எம்மைப் பெற்றவரே இன்னும்
உம்மனம் துன்பம்அ டைந்திலதோ
கற்றவர் மற்றவர் யாவருங் கோயிலைக்
கட்டிடக் காசினை ஈந்திடுவீர் (வாழ்க)

எத்தனை ஆண்டுகள் எங்களின் ஆலயம்
இந்நிலை தன்னில் இருப்பதையா
உத்தம நேசங்கள் ஒன்ருகக் கூடியே
உதவிகள் செய்திட முன்வருவீர் (வாழ்க)

பாரிசு நகரிற் சென்று பைந்தமிழ் இனிக்கப் பேசி
நேரில ராக வந்த நித்திலக் குணத்தர் காரைப்
பேருடை நகரிற் கம்பன் பிறங்கிடு கழகங் கண்ட
சீருடைக் கணேசன் அட்ட பந்தனச் செய்கை சொல்வார்.

# அட்ட பந்தனம்

சா. கணேசன் (கம்பன் கழகம், காரைக்குடி.)

திருக்கோயிலில், கடவுள் மங்கலம் (பிரதிஷ்டை) செய்யப்பெறும் கல்லால் ஆன தெய்வப்படிமங்கள் ஆடாமல் நிலைபெற, இருப்பிடப், (பீடம்) படிமத்தின் அடிப்பகுதி இரண்டையும் பொருத்திப் படியச் செய்யும் ஒரு கூட்டுக் கட்டுப் பொருளை அட்ட பந்தனம் என்பர். இப்பொருள் ஓர் அருமையான படைப்பு; அற்புதமான கண்டுபிடிப்பு. எட்டுப் பண்டங்களின் கலவையானதாலும், இருப்பிடத்தையும், தெய்வப் படிமத்தையும் இணைத்துப் பிணைப்பதாலும், இது 'அட்ட பந்தனம்' எனப் பெயர் பெறுவதாயிற்று.

**அட்டபந்தன மருந்திற் கலக்கும் பொருள்கள்:**

1. கொம்பரக்கு 2. சுக்கான் தூள் 3, குங்கிலியம் 4. கற்காவி 5. செம்பஞ்சு 6. சாதிலிங்கம் 7. தேன்மெழுகு 8. எருமை வெண்ணெய் ஆகிய எட்டுமே. இவற்றையெல்லாம் கலந்து செய்யும் முறை இருவகையாகும். ஒன்று இடிமுறை; மற்றது காய்ச்சுமுறை. காய்ச்சுமுறை மிக விரைவாக ஆகிவிடும். ஆனல் காய்ச்சு மருந்து சார்த்தியதை அகற்றவேண்டிய நிலை ஏற்பட்டால் அகற்றல் கிட்டத்தட்ட இயலாது. வலிந்து செயற்படும்பொழுது சிலையுருவிற்குச் சேதம் விளையவுங் கூடும். ஆனதால் மிகப் பெரும்பாலும் இடிமுறையை மேற்கொள்ளலே நன்று.

மேலே சொன்ன பண்டங்களை நன்கு சோதித்து வாங்கவேண்டும். பின்னர், தூசு துப்பட்டை முதலிய களைந்து தூய்மை செய்யவேண்டும். அதன் பின்னர் அளவுப்படி கலக்கவேண்டும். கலந்தபின் இடிக்க வேண்டும்.

**(1) கொம்பரக்கு:** இது அவலரக்கு அல்ல. மரப்பட்டையுடன் ஒட்டிக்கொண்டிருக்கும். இது தான் தூய்மையானது; இயற்கையானது; கலப்பற்றது; இதை வாங்கிப் பொடித்த மரப்பட்டை முதலியவற்றை நீக்கிச் சுத்தமாக்கி வைத்துக் கொள்ளவேண்டும்.

**(2) சுக்கான் தூள்:** சுக்கானில் பல நிறமும், இருவகையும் உண்டு. வெள்ளைநிறம் நன்று; கபிலநிறம் கொள்ளலாம்; கருமைநிறம் கூடாது. இதைக் கொண்டு வந்ததும் முதலிற் சிறிது சுக்கானைத் தூளாக்கி, அடுப்பில் காயும் இரும்புச் சட்டியிலிட்டு, வறுத்துப் பார்க்கவேண்டும். படபட என்று உப்பைப்போல வெடித்தால், அவ்வகைச் சுக்கான் கூடவே கூடாது. ரவை, மணல்போல வெடிக்காமல் இருந்தால் அவ்வகைச் சுக்கான்தான் உகந்தது.

**(3) குங்கிலியம்:** துண்டுத்துகள், தூசி இல்லாமல் பொறுக்கி எடுத்துப் பொடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**(4) கற்காவி:** இஃது அழுக்குச் சிவப்பு நிறமாகக் கட்டியாய் இருக்கும். பூங்காவி என்பதல்ல இது. கடைகளில் காவித்தூள் என்று பல வகைக் கலப்படங்கள் உண்டு. அவற்றை வாங்கக் கூடாது. சட்டி கட்டியாய் இருக்கும் கற்காவினயயே வாங்கி, மேலே படிந்துள்ள தூசிகளைப் போக்கி விட்டு, இடித்துப் பொடியாய் வைத்துக்கொள்ள வேண்டும்.

**(5) செம்பஞ்சு:** இஃது இயற்கையாகவே வாதங்கொட்டை நிறமுடையது. பீகார்ப் பக்கத்திலிருந்து வருவது, 'கோத்தி' என்று பெயர். இது தான் உகந்தது. சிவப்புச் சாயம் ஏற்றி அடை அடையாய்த் தட்டி வைத்துக்கொண்டு அதுதான் செம்பஞ்சு என்று ஏமாற்றுவோரும், ஏமாறுவோரும் மிக அதிகம். 'கோத்தி'ப் பஞ்சைக் காம்பு முதலிய இல்லாமல் பழுதுநீக்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

**(6) சாதிலிங்கம்:** இதில் பலவகையுண்டு. உலாந்தாவிலிருந்து வருவதுதான் தரத்தால் உயர்ந்தது. கலவைப் பண்டம் எட்டிலும் விலைமிக்கது சாதிலிங்கமே. அட்டபந்தனத்தில் முக்கியமான பொருள் இது. விலைமிகுதியை எண்ணி அளவைக் குறைப்பதும், தரமற்ற மலிவுச் சரக்கை வாங்குவதும் இன்று மலிந்து காணப்படுகின்றன. அப்படிச் செய்வது முறைகேடாகும். இஃது இரும்பைப் போலக் கனமிக்க பண்டமாகும். இதைப் பொடி செய்தல் எளிது. இதையும் நன்கு பொடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

(7) **தேன்மெழுகு:** இதில் இருவகையுண்டு, ஒன்று மஞ்சள் நிறமுள்ளது. அதை மஞ்சண மெழுகு என்பர். மஞ்சண மெழுகில் தேன் கலந்திருக்கும். வெண்மெழுகில் தேன் இல்லை. இது தான் உகந்தது. வெண்மெழுகு என்று சில இடங்களில் மெழுகுவர்த்திக் குழம்பை ஆறவைத்து ஏமாற்றுவார்கள். வாயில் சிறிது கிள்ளிப்போட்டுச் சுவைத்துப் பார்த்தால் உண்மை புலப்படும்.

(8) **எருமை வெண்ணெய்:** பசுவின் வெண்ணெயில் கொழுப்புச் சத்துக் குறைவு. ஆகவே அது கூடாது. எருமை வெண்ணெய்தான் உகந்தது. இதிலுஞ் சிறிதும் நீர்ச்சத்தின்றி முழுதும் அகற்றப்படவேண்டும். நெருப்பு, வெயில், வேறுவகை வெம்மை, பயன்படுத்தப்படமுடியாதவை. அவற்றால் வெண்ணெய் உருகிவிடும். ஆனதால் புதிய மண்பானையை எடுத்துப் பானைக்கு ஒரு வீசை வெண்ணெயைப் புறத்தில் கால் அங்குலக் கனமாக அப்பி, வெம்மை தாக்காத குளிர்ந்த, இருண்ட அறையில் பானையைக் கவித்து வைத்திருக்கவேண்டும். பானை வெண்ணெயிலுள்ள நீர்ச்சத்து முழுவதையும் உறிஞ்சிக்கொள்ள, வெண்ணெய் பக்குவமாய் ஆகிவிடும். தேவைக்கேற்பப் பானைகளின் எண்ணிக்கையைக் கூட்டிக்கொள்ள வேண்டும்.

எல்லாப் பண்டங்களும் ஆயத்தமானபிறகு மர உரலில் இடிக்கவேண்டும். கல்லுரல் கூடாது. ஒவ்வொரு உருண்டைக்கும் குறிப்பிட்ட அளவாக ஏழு பண்டங்களையும் உரலில் இட்டுத் தேவைக்கு ஏற்ப வெண்ணெயைச் சிறிது சிறிதாகச் சேர்த்து ஒவ்வோர் உருண்டையையும் சுமார் அரைமணி நேரம் இடித்து, பின்னர் உரலிலிருந்து எடுத்து உருட்டித் தலையில் ஆணிக்கொண்டையால் ஒரு குத்துக் குத்தி வைத்துக்கொள்ள வேண்டும். முதல் இடி முடிந்ததும் ஒரு குத்து. இரண்டாம் முறை இடித்தபின் ஒரு குத்து. இப்படி எட்டுமுறை இடிக்கவேண்டும். ஓர் இடிக்கும் அடுத்த இடிக்குமிடையே குறைந்தது இரண்டு நாள்கள் இடைவெளியிருக்கவேண்டும்.

இனி அளவைப் பார்ப்போம். ஒவ்வொரு உருண்டைக்கும்,

| | | | |
|---|---|---|---|
| சுக்கான் தூள் | — | 25½ | தோலா |
| குங்குலியம் | — | 9 | ,, |
| கற்காவி | — | 7½ | ,, |
| சாதிலிங்கம் | — | 7½ | ,, |
| அரக்கு | — | 3½ | ,, |
| மெழுகு | — | 3½ | ,, |
| செம்பஞ்சு | — | 1 | ,, |
| எருமை வெண்ணெய் | — | 1 | ,, |

(இஃது எட்டு இடிக்கும் சேர்த்துள்ள உத்தேச அளவு. சிறிது கூடவும் ஆகலாம்)

இந்த மருந்து கலந்து இடிப்பதில் பண்டத் தூய்மை, பண்டங்களின் சேர்மான அளவு, இடிக்கும் காலஅளவு மூன்றும் மிக முக்கியம். அத்துடன் இடிக்கின்றவர்களின் உடல் தூய்மை, மனத் தூய்மை மிகமிக முக்கியம். இடிக்கும் பொழுது இடிக்கும் ஆட்கள் ஆலயத்திற்கு ஏற்ப, ''சிவ சிவ'' ''நாராயண'' அல்லது ''வேல் வேல் முருகா'' என்பன போன்ற இறைவன் பேர்களை உச்சரித்துக் கொண்டே இடிக்கவேண்டும். இப்படிச் செய்த அட்டபந்தன மருந்து சார்த்திக் குடநீராட்டுச்செய்த திருக்கோயில்களில் அம்மருந்து எவ்வித குறைபாடும் நேராது, மிக நீண்ட நாள்கள் இலங்கி வருவதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. எனவே, இடிக்கப் புகுமுன் இடிப்போர்களைக் குளிக்கச் செய்து, திருநீறு முதலானவற்றை அணிந்து கொண்டு விநாயகர் வணக்கம் செய்துகொண்ட பின் ஒவ்வொரு குத்துக்கும், ''சிவசிவ'' போன்ற நாமங்களைச் சொல்லிக்கொண்டே இடிக்கவேண்டும் என்பது எளியேன் ஏற்பாடு.

''கொம்பரக்குச் சுக்கான்தூள் குங்குலியம் கற்காவி
செம்பஞ்சு சாதிலிங்கம் தேன்மெழுகு—தம்பழுது
நீக்கி எருமைவெண் ணெய்கூட்டி நன்கிடித்து
ஆக்கலட்ட பந்தனம் ஆம்''

['திருக்கோயில்', சாதாரண, பங்குனி, மார்ச் 1971 இதழில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கம்.]

நெஞ்சினிற் சிறப்பாய் வித்தி நினைவெனும் நீரை வார்த்துக்
கொஞ்சமோ பலநூல் இட்டுக் குறைவறக் களைகள் நீக்கி
எஞ்சறக் கொண்ட நெல்லிற் புற்கையை யாக்கி அன்னை
மஞ்சுறு குழலாற் கீந்தார் மாண்புசேர் குமார சாமி.

# சக்தி வழிபாட்டு வரலாறு

வித்துவான், பண்டிதர் சி. குமாரசாமி பி. ஏ.
(விரிவுரையாளர், அரசினர் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" என்பது திருவாசகம். பூரண அன்பு, பூரண பொறுமை, பூரண தன்னலமறுப்பு, பூரண மன்னிக்கும் சுபாவம் என்பவற்றை நாம் தாய்மை யிலேயே காணமுடியும். பரம் பொருளைப் பல் வேறு வடிவில் அடியார்கள் தியானித்து வழிபடுகின்றார்கள். பதியாக (கணவனாக), தாயாக, குழந்தையாக, தோழனாக, ஆண்டானாகப் பாவித்துப் பக்தி செலுத்துகின்றார்கள். இப்பக்தி நெறிகளுள் மிக நெருக்கமாக உளங்கலந்து உறவுகொண்டாட வாய்த்த நெறி தாயாகக் கருதி வழிபாடு செய்யும் மார்க்கமேயாகும்.

தண்டிப்பவன் தந்தை. மன்னிப்பவள் தாய். இதனை நாம் உலகியலிற் காண்கின்றோம். இதனையே தாயுமானாரும்

"பொல்லாத சேயெனில் தாய் தள்ளல் நீதமோ
புகலிடம் பிறிது முண்டோ"

என்று வினவுகின்றார்.

"செம்மை நலமில்லாத சிதடரொடுந் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து முதலாய முதல்வன் தான்
நம்மையு மோர் பொருளாக்கி நாய் சிவிகை
ஏற்றுவித்த
அம்மை எனக் கருளியவா றார்பெறுவார்
அச்சோவே"

என்று பாடுகின்றார் மணிவாசகர். நாய் சிவிகை ஏற்றுவிக்கும் உள்ளம் தாய்மைக்கேயுண்டு. அந்தப் பண்பை அம்மை என்று சிறப்பிக்கின்றார் அடிகள்.

உலகத்தை இயக்கிக் கொண்டிருக்கின்ற, கண்ணாற் பார்த்து அறிய முடியாத ஆற்றலையே நாம் சக்தி என்று கூறுகின்றோம். வழிபாடு செய்கின்றோம்.

இவ்வழிபாடு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகின் பல பாகங்களிலும் பரவியிருந்துள்ளது. ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் அகழ்ந்து அறியப்பட்ட சிந்துவெளி நாகரிகத்திலும் சக்தி வழிபாடே முக்கியத்துவம் பெற்றிருந்ததென அறிஞர்கள் கருதுகின்றனர். மொகஞ்சதாரோ, ஹாப்பா, சங்குதாரோ முதலிய இடங்களிற் காணப்பட்ட முத்திரைகள், சிலைகள் ஆதியவற்றைக் கொண்டு சமய நிலையை ஆராய்ந்த பேரறிஞர் யோண் மார்ஷல் தாய்த்தெய்வ வணக்கத்தையே முதலில் வைத்துள்ளார். மும்முகக் கடவுள் வணக்கம் இரண்டாவது இடத்தையும், சிவலிங்க வழிபாடு மூன்றாவது இடத்தையும் பெறுவதாக அவர் கூறுகின்றார். அங்குக் காணப்பட்ட பெண் உருவங்கள் ஒடுங்கிய இடையையும், பரந்த அரைப் பகுதியையும் அலங்காரத் தலையணியையும் உடையனவாகக் காணப்பட்டன. நிருவாண உருவிற்காணப்படும் பெண் தெய்வ உருவங்களுமுள. பண்டைய நாகரிகம் நிலவிய எகிப்து, சுமேரியா முதலிய இடங்களிலும் இத்தகைய நிருவாணச் சிலைகள் கண்டறியப்பட்டுள்ளன. ஹரப்பாவிற் காணப்பட்ட ஒரு முத்திரையில் (Seal) இருகிளைகளுடன் கூடிய அரசமரத்தின் கிளைகள் மத்தியில் நீண்ட தலைமயிருடனும், இரு கொம்புகளுடனும் கூடிய நிருவாண உருவிலுள்ள ஒரு பெண் நிற்பதைக் காணலாம். வேறோர் முத்திரையிலே தலைகீழாகக் கால்களை அகலவிரித்த நிலையிற் காணப்படும் பெண்ணின் கருவிலிருந்து ஒரு செடி முளைத்து வருவதுபோன்ற அமைப்பைக் காணமுடிகின்றது. இது பிரபஞ்சத்தின் தோற்றமே சக்தியாகத் - தாய்த்தெய்வமாக - வழிபடப்பட்டமையை நன்கு விளக்கும்.

இந்து நதிக்கரை நாகரிகத்திற் காணப்படுவது போன்ற அமைப்பை நாம் எகிப்து, மொசப்பத்தேமியா முதலிய நதிக்கரை நாகரிகம் நிலவிய பிரதேசங்களிலும் காணமுடிகின்றது. எகிப்தில் 'இசிஸ்' என்ற பெண் தெய்வம் வழிபடப்பட்டது. சின்னாசியாவில் 'சிபில்' என்ற பெண் தெய்வமும், சிரியாவில் 'அஸ்தாத்' என்ற பெண் தெய்வமும் போற்றப்பட்டன. இவ்வாறு பழம்பெருமை வாய்ந்த நதிக்கரை நாகரிக நாடுகளிலே தாய்வழிச் சமூக அமைப்பு நிலவியமையே தாய்த்தெய்வ வழிபாடு தோன்றியமைக்குக் காரணமாகும் எனச் சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். வரலாற்றுக் கண் கொண்டு நோக்கும்போது இவ்வுண்மை நன்கு புலனாகும். மரபுவழி (descent), உறவுமுறை, (Kinship) சொத்துரிமை, ஆட்சி

யுரிமை, அதிகாரம், மணமுறை ஆதியன கொண்டு ஒரு சமூகம் தாய்வழிச் சமூகமா அன்றேல் தந்தை வழிச் சமூகமா என்று துணிய முடியும். விவசாயமே முக்கிய தொழிலாகக் கொண்டுவிளங்கிய நதிக்கரை நாகரிகங்கள் நிலவிய பிரதேசங்களிற் பெண்களே முக்கியத்துவம் பெற்றனர். தாய்வழிச் சமூக அமைப்பு இதனால் ஏற்பட்டது; தாய்த் தெய்வ வணக்கமும் தோன்றியது. இந்நாகரிகங்கள் ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பது ஆராய்ச்சியாளர் யாவருக்கும் ஒப்பமுடிந்த முடிபாகும். இதனால் சக்திவணக்கம் அக்காலத்திற்கும் மிக முற்பட்டதென நாம் துணிந்து கூறலாம்.

கி. மு. 1500 ஆம் ஆண்டளவிலேயே இந்தியாவுக்குள் ஆரியர் நுழைந்திருக்க வேண்டுமென்பது அறிஞர்கள் துணிபு. ஆரியர்கள் சமூக அமைப்புத் தந்தைவழி அடிப்படையில் அமைந்தது. கிராம வாழ்க்கையையே அவர்கள் மேற்கொண்டிருந்தனர் என்பதும் தெரிகின்றது. இக்கண் கொண்டு நோக்கும் போது காலத்தால் முற்பட்டதும், தாய்வழிச் சமூக அமைப்புடையதும், நகர வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டதுமாகிய இந்து வெளி நாகரிகம் ஆரியர் அல்லாதார் நாகரிகம் என்பது நன்கு புலனாகும். இந்து வெளி நாகரிகம் திராவிடர் நாகரிகம் என்பதை இன்று அத்துறையில் ஆராய்ச்சி செய்த அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அக்காலத்தில் வட இந்தியாவிலும் திராவிடரே வாழ்ந்தனரென்பதும், ஆரியரின் வருகையின் பின்னரே அவர்கள் தெற்கு நோக்கிச் செல்ல நேர்ந்தது என்பதும் யாவரும் ஏற்றுக் கொண்ட முடிபாகும். இதனால், சக்தி வழிபாடு திராவிட சமூகத்தில் உருவாகிய ஒரு வழிபாட்டுத் தத்துவம் என்பது திண்ணம். பின்னர் நாம் ஆராயப்போகும் சங்ககாலச் சமயக் கொள்கையும் இதனை வலியுறுத்தும்.

இந்தியாவில் மலைச்சாதியாராகவும் காட்டுச் சாதியாரகவும் சீர் திருந்தாத நிலையிற் பல திராவிடக் குழுவினர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் வணங்கும் பெண் தெய்வங்களை நோக்கும்போது பண்டைத் திராவிடர் மத்தியில் தாய்த்தெய்வ வணக்கம் எந்த அளவுக்குப் பேணப்பட்டது என்பது புலனாகும். 'ஏரன்பெல்சு' என்னும் மேனாட்டு அறிஞர், அவர்களிடை நிலவும் பெண்தெய்வ வணக்கம் பற்றி நன்கு ஆராய்ந்துள்ளனர். அவர் தொகுத்த அட்டவணையில் பிலிமக்கா, தார்ஜி, டொம், கடவா, ஒக்கரை, கங்கை, கொல்லா, அத்தி, புடுபுடுக்கி எனப் பெண் தெய்வப் பெயர்ப்பட்டியல் நீண்டுகொண்டு செல்கின்றது. சைவசமயத்தைச் சார்ந்த எழுபதுக்கு மேற்பட்ட சக்தி வடிவங்கள் இன்று நடைமுறை வணக்கத்தில் இந்தியாவில் இருப்பதாக அறிஞர் கோபிநாதராவ் கூறுகின்றார். வைணவமதத்தையும், பிற பிரிவுகளையும் சார்ந்த சக்திகளிலும் பலர் பூஜிக்கப்படுகின்றனர். இவற்றை அவதானிக்கும்போது, சக்தி வழிபாடு எவ்வாறு வாழ்வோடு ஒன்றி வளர்ந்து வந்துள்ளது என்பது புலனாகும்.

சமய வரலாற்றில் இந்து நதிக்கரை நாகரிக காலத்திற்கு அடுத்தபடியாக இடம் பெறுவது வேத காலமாகும். இருக்கு வேதகாலம் கி. மு. 1500 அளவில் என அறிஞர்கள் கூறுகின்றனர். இருக்கு வேதத்தில் வருணன், இந்திரன், அக்கினி, யமன் போன்ற ஆண் தெய்வங்களே முக்கிய தெய்வங்களாகப் போற்றப்பட்டன. விஷ்ணு, உருத்திரன், பிரஜாபதி என்போர் அத்துணை முக்கியத்துவமுடையவர்களாகக் காணப்படவில்லை. காலப் போக்கில் உயர்ந்தோர் தாழ்ந்து, தாழ்ந்தோர் உயர்ந்து விட்டமையைக் காண்கின்றோம். முழுமுதற் கடவுளாகச் சிவனும், விஷ்ணுவும் போற்றப்படத் தொடங்கினர்.

ஆண் தெய்வங்களே போற்றப்பட்ட இருக்கு வேதத்தில் ஒருசில பெண் தெய்வங்களும் போற்றப்பட்டன. வாக்கு, இராத்திரி, உஷை, சந்தியா, சரஸ்வதி (நீர்த்தெய்வம்) ப்ருதுவி (நிலத் தெய்வம்) ஆதியன துதிக்கப்பட்டமையை நன்கு அவதானிப்பின் இயற்கைச் சக்திகளே பெண் தெய்வங்களாகத் துதிக்கப்பட்டமை புலனாகும். வேத காலத்தையடுத்து வந்த உபநிடத காலத்தில் தாய்த் தெய்வம் மிக்க முதன்மை அடைவதைக் காணலாம். சக்தியைப் பரம்பொருளாக எமக்கு முதலில் எடுத்துரைப்பது கேனோபநிடதமே. சுவேதாச்வதார உபநிடதம் சக்தி தத்துவம் முழுவதையும் மிக விரிவாகக் கூறுகின்றது. தைத்திரிய உபநிடதம் துர்க்கை, கார்த்தியாயனி, கன்னியாகுமரி என மூன்று வெவ்வேறு பெயர்களாலே சக்தியைக் கூறுகின்றது. அக்கினி தேவனின் ஏழு நாக்குகளுள் இரு நாக்குகளாக முண்டக உபநிடதம் காளி, கராளி என்னும் பெயர்களைக் கூறுகின்றது.

வேத காலத்தின் பிற்பகுதியாகிய உபநிடத காலத்தையும் புராண இதிகாச காலத்தையும் அடுத்தே சைவம், வைணவம், சாக்தம் என்னும் மதங்கள் தனித்தனிப் பிரிவாகத் தோன்றியிருக்கலாம் என நாம் கருதலாம். வேதகாலத்தையடுத்து நமது கவனத்தைப் பெறுவது புராண இதிகாச காலமாகும். மார்க்கண்டேய புராணத்தில் வரும் தேவி மகாத்மியம் - சக்தியின் பெருமையை நன்கு விரித்துக் கூறுகின்றது. அப்பகுதியில் சக்தி, மகிஷாசுர மர்த்தனியாகக் கூறப்படுகின்றாள். எருமை வடிவினையுடைய அசுரனை அவள் அழித்த கதை அதில் இடம் பெறுகின்றது. புராணங்களில், தேவி, ஜகன்மாதா, ஜெகதாம்பிகை என உலகமாதாவா

கப் புகழப்படுவதைக் காணலாம். பதினெண் புராணங்களுட் பல பகுதிகளில், தேவியின் மகிமை புகழ்ந்து பேசப்பட்டுள்ளது.

மகாபாரதத்தில் துர்க்கையை வழிபாடு செய்த செய்தி இரு இடங்களிற் கூறப்படுகின்றது. பன்னீராண்டு வனவாசம் முடித்து ஓராண்டு அஞ்ஞாத வாசத்தை மேற்கொண்டு விராட நாட்டினுள்ளே புகும் வேளையில், தருமபுத்திரர் துர்க்கையை வேண்டுதல் செய்வது ஒரு செய்தி. பகவத்கீதை உபதேசிக்கப்படுமுன் யுத்தகளத்தில் தங்களுக்கு வெற்றியையளிக்குமாறு அர்ச்சுனன் துர்க்கையை வேண்டுதல் செய்வது மற்றொரு காட்சியாகும். துர்க்கை, காளி எனவும் மகிஷாசுர மர்த்தனி எனவும் போற்றப்படுகின்றாள். போரில் வெற்றியையருளும் தெய்வமாகப் பெண் தெய்வம் - சக்தி - போற்றப்பட்டவரலாறுகள் சரித்திரத்திற் பலவுண்டு. சங்ககாலத் தமிழ் மக்கள் வெற்றித் தெய்வத்தைக் கொற்றவை எனப் போற்றினர். அத்தெய்வத்தைப் பாபிலோனியர் 'அனாட்' என வழிபட்டனர். எகிப்தியர் துதித்த வெற்றிக்குரிய பெண் தெய்வம் "ஹாதர் செக்மெட்" என்பதாகும்.

சங்ககாலத் தமிழ் மக்களுடைய வாழ்க்கையை நாம் ஆராய்ந்தால் தாய்த் தெய்வ வழிபாடு அவர்களிடை நிலவியமை நன்கு புலனாகும். கொற்றவை வழிபாடே "பழந்தமிழர்களுடைய மிகப்புராதனமான வழிபாடாகும். கொற்றவை பழையோள் என்ற பெயரால், குறிக்கப்படுவது இதனை நன்கு வலியுறுத்தும். நடுகல் நாட்டி வழிபடும் வீரவணக்கமும் கொற்றவை வழிபாட்டோடு தொடர்புடைய வணக்கமேயாகும். வெற்றித் தெய்வமாகிய கொற்றவைக்குப் பலிகொடுத்து வழிபாடாற்றினர். வெற்றி பெற்ற வீரர் பலர் தமக்கு வெற்றியளித்த தெய்வத்துக்குக் காணிக்கையாகத் தமது தலையையே அறுத்துப் பலிகொடுத்த செய்திகளையும் நாம் சங்க நூல்களிற் பரக்கக் காணலாம். 'காடுகிழாள்' என்ற பெயராலும் கொற்றவை குறிக்கப்பட்டாள். "கொற்றவை நிலை" எனத் தொல்காப்பியம் கூறுவதும் சங்ககாலத்தில். கொற்றவை வணக்கம் பெற்றிருந்த முதன்மையை வலியுறுத்தும்.

பழந்தமிழர் வாழ்வோடு கலந்து வழிபாட்டில் முக்கிய இடம் பெற்ற மற்றொரு தெய்வம் முருகன் ஆகும். முருகனைப் பற்றிக் கூறும்போது அம்முருகனும் கொற்றவையின் மைந்தனாகவே போற்றப் படுவதைக் காண்கின்றோம்.

"வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ"

என்றும்,

"இழையணி சிறப்பிற் பழையோள் குழவி"

என்றும்,

திருமுருகாற்றுப்படை பாடுகின்றது.

"பைம்பூண் சேய் பயந்த மாமோட்டுத்
துணங்கையஞ் செல்வி" என்பது பெரும்பாணாற்றுப்படைச் செய்தியாகும். இது போன்று முருகன் கொற்றவை சிறுவனாகக் கருதப்பட்ட செய்திகள் சங்கச் செய்யுளிற் பரந்து காணப் படுகின்றன.

பிற்பட்ட சங்ககாலத்திலேயே ஆரியச் செல்வாக்குத் தமிழ் மக்கள் மத்தியில் பெருகத் தொடங்கிவிடுகின்றது. சங்கம் மருவிய காலத்தில், சமயத் துறையில் இச் செல்வாக்கின் பாதிப்பை நன்கு உணரமுடிகின்றது. சிலப்பதிகாரத்தில் தமிழருடைய தாய்த்தெய்வமாம் கொற்றவைக்கு ஆரியக் கடவுளாகிய துர்க்கையின் இயல்புகள் ஏற்றிக் கூறப்பட்டுள்ளது. வடமொழிப் புராணம் கூறும் செய்திகள் தமிழிலும் இடம் பெற்று விடுகின்றன.

"அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றி வேற் றடக்கைக் கொற்றவை அல்லள்"

என வாயிற் காவலன் பாண்டியனிடம் சென்று கூறுகின்றான். கண்ணகியின் சீறிய கோலம் துர்க்கையை அவனுக்கு நினைவூட்டுகின்றது. மேலும்

"அறுவர்க் கிளைய நங்கை இறைவனை
ஆடல் கண்டருளிய அணங்கு — சூருடைக்
கானகம் உவந்த காளி தாருகன்
பேருரம் கிழித்த பெண்ணு மல்லள்"

என அவன் தொடர்ந்து கூறுமடிகளில், மார்க்கண்டேய புராணம் கூறும் மகிஷாசுரவதம். சுட்டப் படுவதைக் காணலாம்.

சிலப்பதிகாரக் கதை புதியதோர் தாய்த் தெய்வ வணக்கத்தையும் தமிழ் நாட்டுக் களித்துள்ளது. சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வத்துக்குக் கோவிலெடுத்தான். அதனால் தமிழ் நாட்டின் பல பாகங்களிலும் கண்ணகி, தேவியாக வழிபடப்படும் வழக்கம் இன்றுவரை நிலவிவருகின்றது. 'கடல் சூழிலங்கைக் கயவாகு' மன்னனும் கண்ணகி விழாவிற் கலந்து கொண்ட காரணத்தினால் ஈழநாட்டிலும் கண்ணகி வணக்கம் நெடுங்காலமாகத் தொடர்ந்து இருந்து வருகின்றது. பிறமதத்தினராகிய புத்த மதத்தினரும் 'பத்தினித் தெய்யோ'

எனக் கூறித் தாய்த் தெய்வத்துக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வழிபாடியற்றி வருவது வியப்பிற்குரிய செய்தியேயாகும்.

சிலப்பதிகாரம் வேட்டுவவரி துர்க்கையைச் சிவனுடைய மனைவியாகவும், நாராயணனுடைய சகோதரியாகவும் கூறுகின்றது, சிங்கத்தின்மீதும் கலைமானின் மீதும் அவள் ஏறிவருவதாகவும் அது கூறுகின்றது. 'பாய்கலைப்பாவை' என்று துர்க்கை போற்றப்படுகின்றாள். 'ஞானக் கொழுந்து' என்றும் மாயவள் என்றும் இருவேறுபட்ட தன்மைகளோடு அவள் கூறப்படுவதையும் காணலாம்.

குப்தர் காலத்தில், செதுக்கப்பட்ட துர்க்கை சிலைகள் சிங்கவாகனத்தில் ஏறியகோலத்துடன் காணப்படுகின்றன. இரண்டு கரங்களுடனும், நான்கு கரங்களுடனும், எட்டுக்கரங்களுடனும், பத்துக் கரங்களுடனும் அச்சிலைகள் காணப்படுகின்றன. இத்தகைய சிலைகளை உதயகிரியிலும் காணமுடிகின்றது. தமிழகத்திலும் பல்லவர் காலத்தின் பின் கல்லிற் சிலைகள் பல செதுக்கப்பட்டன. மகிஷாசுரமர்த்தனி சிலைகளை நாம் மாமல்லபுரம், நாமக்கல், கங்கை கொண்ட சோழபுரம், மடத்துக் கோவில் முதலிய இடங்களிற் காணமுடிகின்றது.

லிங்க வழிபாடும் சிவசக்தி ஐக்கியத்தையே குறிப்பதென்பர். மேலேயுள்ள குறி ஆண் அம்சத்தையும் - சிவனையும், கீழேயுள்ள ஆவுடையார் பெண் அம்சத்தையும் - சக்தியையும், குறிப்பதாக அறிஞர்கள் கூறுவர்.

"சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ் வுலகமெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உயர்குண குணியுமாக
வைத்தனன் அவளால் வந்த ஆக்கம்இவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார் பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார்"

என்று தத்துவவிளக்கஞ் செய்கின்றது சிவஞான சித்தியார். சிவலிங்க வணக்கத்திலேயும் சக்தி தத்துவம் போற்றப்படுதலை இதனுல் உணரலாம்.

தேவார காலத்தில் "உமையாளொடும் உடனாகிய" அர்த்த நாரீச்சுரவடிவமே பெரிதும் போற்றப்படுவதைக் காணலாம்.

"மங்கையைப்பாகம் வைத்தாய் மான்மழுமறியும் வைத்தாய்" என்றும் "பெண்ணோர் பாகத்தர் பிறை தவழ் முடியினர்" என்றும் வருமடிகளை நோக்குக.

சக்தி தத்துவத்தின் மகிமையை யாவரும் அறிந்து போற்ற வைத்த பெருமை சங்கராச்சாரிய சுவாமிகளையே சாரும். தேவியின் அழகிய திருக்கோலத்தை அவர்களியற்றிய 'சௌந்தர்யலகரி' நன்கு விரித்துரைக்கின்றது. அவர்கள் இயற்றிய அன்னபூர்ணாஷ்டகத்தில்

"அன்ன பூர்ணே சதா பூர்ணே சங்கர பிராண வல்லபே
ஞான வைராக்கிய சித்த யர்த்தம் பிட்சாம் தேகிச பார்வதீ"

என வேண்டுதல் புரிகின்றார். எல்லாம் அருள வல்ல லோகமாதாவிடம் பொன்னும், பொருளும், போகமும் வேண்டாது ஞானமும், வைராக்கியமும் பொருந்திய சித்தத்தை அருளுமாறு இரந்து வேண்டுகின்றார். தேவியை மந்திர வடிவிலும், யந்திர வடிவிலும் அமைத்துப் பூசை செய்வர். ஆதி சங்கரர் பல கோவில்களில், தேவியின் அம்சமாக ஸ்ரீசக்கரத்தையே பிரதிட்டை செய்வித்துள்ளார். ஸ்ரீ சங்கரபூஜை தேவி வழிபாட்டில் ஒரு விசேட அம்சமாகும்.

திரிசதி (முந்நூறு திருப்பெயர்கள்), லலிதா சகஸ்ரநாமம் (ஆயிரம் திருப்பெயர்கள்) கொண்டு இன்று அம்பிகையை அர்ச்சிப்பர். இதன் விளைவாகத் தேவியின் திருப்பெயர்கள் எண்ணில்லாதனவாக வளர்ந்து செல்கின்றன,

"குமரி, காளி, வராகி, மகேசுரி, கவுரி, மோடி, சுராரி,
கொடியசூலி சுடாரணி யாமளி [நிராபரி மகமாயி
குறளுருப முராரி சகோதரி உலகதாரி, உதாரி,
குருபராரி விகாரி நமோகரி [பராபரி அபிராமி
சமரநீலி புராரிதன் நாயகி மலைகுமாரி, கபாலி
சலிலமாரி சிவாய மனோகரி [நரணி பரையோகி
சவுரி வீரி முநீர்விட ரோஜனி திகிரி மேவு கையாளி
சகல வேதமும் ஆயின தாயுமை" [செயாளொரு

எனவரும் திருப்புகழ் அடிகளிற் பரந்துபட்ட தேவியின் திருநாமங்களுட் சில பரவப் படுவதைக் காண்கின்றோம்,

காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, என்பது போலத் தலங்கள் தோறும் நாமங்கள் - மூர்த்தங்கள் - வேறுபடப் போற்றப்படுகின்றன. தேசங்கள் தோறும், மாகாணங்கள் தோறும் தேவியின் வணக்கம் வெவ்வேறு வடிவிலும் பெயரிலும் மாறுபட்டுச் செல்கின்றது. கருணை மொழியும் வடிவத்

திலும், பயங்கர வடிவத்திலும், தேவியை வழி பட்டுவருகின்றனர்.

| | |
|---|---|
| மகாராஷ்டிரம் | — துளசபவானி |
| காஷ்மீரம் | — குசிர பவானி |
| பஞ்சாப் | — ஜ்வல முகி |
| குஜராத் | — அம்பாஜி |
| உத்தரப்பிரதேசம் | — விந்திய வர்ஜினி |
| வங்காளம் | — காளி |
| அஜாம் | — காங்க்யா |
| கர்நாடகம் | — சாமுண்டி |
| காஞ்சி | — காமாட்சி |
| மலையாளம் | — பகவதி |

இவ்வாறு இடத்துக்கிடம் சக்திவழிபாடு பெறும் நாமாந்தரங்களைக் காணலாம்.

சபரர், புளிந்தர், பார்பரர் போன்ற கட்டு வாழ்க்கையினர் சபரி என அழைக்கின்றனர். நக்னசபரி - (ஆடையில்லாதவள்) பர்ணசபரி (தழை யுடை அணிந்தவள்.) என இருவேறு வடிவில் வைத்துப் போற்றுகின்றார்கள்.

கேரளத்தில் பிராமணி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி என ஏழு வடிவில் (சப்தமாத்திரிகாஸ்) தாய்த் தெய்வத்தை வழிபடுகின்றனர்.

வடநாட்டில் சாக்தர்கள் வாமமார்க்கத்தையே பெரிதும் போற்றுகின்றனர். இவர்கள் அறுபத்து நான்கு கலைகளைக்கொண்ட கௌலம் முதலிய தந்திரங்களைக் கைக்கொள்வர். தந்திரம் என்றே சாக்தமத நூல்கள் அழைக்கப்படுகின்றன. வாம மார்க்கத்தவர் பலி, ஓமம், தர்ப்பணம், செபம் முதலியவற்றைக் கிரியைகளாகக் கொள்வர். 'ம' வில் தொடங்கும் மத்ஸ்யம், மத்யம், மாமிசம், முத்திரை, மைதுனம் என்னும் ஐந்து பொருள்களைக் கொண்டு வழிபட்டால் இவ்வுலக சுகமும் முத்தியும் கிட்டும் என இவர்கள் நம்புகிறார்கள்.

இவர்கள் கொள்கைகளைத் தட்சிணாசாரர் எனப்படும் வைதிகர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் வேதங்களையும், ஸ்மிருதிகளையுமே தமது நூல்களாகப் போற்றுவர். இவர்கள் ஸ்நானம், சந்தியா வந்தனம், ஜபம், ஹோமம், தேவாராதனை, அதிதிபூஜை என்ற ஆறு கருமங்களையும் கைக் கொள்வர். காயத்ரி மந்திரம் இவர்கள் போற்றும் முக்கிய மந்திரமாகும். பேரின்பத்தை நாடுவதே இவர்கள் குறிக்கோளாகும். ஸ்ரீ வித்தை முதலாகச் சொல்லப்படுகின்ற பத்துப் பிரிவுகளையுடைய மகா வித்தை எனப்படும் மந்திரமும் இவர்களுக்குரிய முக்கிய மந்திரமாகும்.

பக்திநெறியே அன்னையின் அருளை அடைவ தற்குரிய மிகச் சிறந்த மார்க்கமாகும். அபிராமிப் பட்டருக்காகத் தனது தோட்டினை (காதணி) எறிந்து அமாவாசைத் திதியில், பூர்ண சந்திரோ தயம் காட்டிய வரலாறு நாம் அறிந்ததே. மிகச் சமீபகாலத்தில் வாழ்ந்து ஞான ஒளி வீசிய பக வான் இராமகிருஷ்ண பரமஹம்சர் காளிதேவி யையே பூஜித்து வந்தார். அம்மையின் அருளால் அவரியற்றிய அருட் செயல்களும் நாமறிந்ததே. சுப்பிரமணிய பாரதியார் தேவி துதியாகப் பல பாடல்கள் பாடியுள்ளார்.

ஓம் என்ற பிரணவமந்திர ரூபமாகச் சக்தி விளங்குகின்றாள். மந்திரங்களின் வடிவமாகவும் யந்திரங்களின் வடிவமாகவும் விளங்கும் தேவியை "ஆதீக்சாந்தா..............." எனவரும் அடிகள் அகரம் முதல் சகரம் இறுதியாகவுள்ள ஐம்பத் தொரு அட்சர வடிவினளாகவும் கண்டு துதித் தனர் அன்பர்கள் என்பதைக் காட்டும்.

அகிலாண்ட கோடியீன்றும், கன்னியென மறைபேசும் ஆனந்த ரூபிணியாம் அன்னை திரு வடிகளுக்கு வணக்கம்.

---

## ஆனந்த ரூப மயில்

பூரணி புராதனி சுதந்தரி புராந்தகி த்ரியம்பகி எழில்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத நாதாந்த சக்தி என்றுன்
நாமமே உச்சரித் திடுமடியர் நாமமே நானுச்சரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ் அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும் ஆனந்தரூப மயிலே
வாரணியு மிருகோங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ் வளமருவு தேவை அரசே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை வளர்காத லிப்பெண் உமையே.

— *தாயுமான சுவாமிகள்*

அன்னை பராசத்தி ஆனந்த பைரவியை
உன்னி உளமுருகும் உத்தமரை — என்றும்
மருட்கடலில் மூழ்காத மாண்பாரை அன்பர்
"அருட்கவி"யென் பாரறிந்த தால்.

## நாயன்மார்கட்டு

# ஸ்ரீ இராஜராஜேசுவரி பதிகம்

"அருட்கவி"

### காப்பு

உயிராகி மெய்யாகி ஓங்கார மான
கயமா முகத்துக் கணேசா — நயமார்
எழிஞயன் மார்கட் டிராசேஸ் வரியின்
கழலிணையைப் பாடவருள் காப்பு

அத்தனுக் கினியபெண் ணமுதமே தில்லைதனி லாடுமர கதவல்லியே,
அகிலாண்ட நாயகிபு ராதனித்ரி யம்பகி ஆதிபார் வதிபவானி
பத்தர்க் கிரங்கிடும் நித்யகல் யாணியே பாண்டுரங்கன் தங்கையே
பரசுகந் தருமமுத வசனியே பாரெலாம் படியளக் கும்காரணி
சித்தரஞ் சனிநடன வித்தகி யலங்காரி ஜீவரட் சகிமாலினி
சின்மயா னந்தபரி பூரணி சியாமளி ஸ்ரீபரா சக்தியுமையே
எத்தனுணர் வில்லாத பித்தனெனை யனுதினம் இரட்சிக்க வந்தருளுவாய்
இட்டமுடன் நாயன்மார் கட்டினி லமர்ந்தஸ்ரீ இராசரா சேசுவரியே

ஆகமமு மாமறையுமேவிய புராண முட னயஇதிகாச மிவைகள்
ஆராய்ந்து காணாத பேரேந்து மன்னையே அண்டங்க ளத்தனைக்கும்
போகமொடு யோகமிகப் பூத்துயிர்கள் மெய்ஞ்ஞான போதநிலை போணவைக்கும்
புங்கவி குணாதீத சங்கரி மனாதீத புவனநா யகிசுந்தரி
தாகமுறு தொண்டரின் சஞ்சலம் தீர்த்தின்ப சாகரம் காட்டி நிதமும்
சரணால யப்பணியி லுருகிவழி படுமரிய சம்பத்து நல்கு பவளே
இரவுபக லுனதுதிரு மலரடிதுதிக்கின்ற இன்பசுகந் தந்தருளுவாய்
இட்டமுடன் நாயன்மார் கட்டினிலமர்ந்தஸ்ரீ இராசரா சேசுவரியே.

இதயாதி புனிதமா நிதியால் நிறைந்தஊர் எனுமச்சு வேலிமுருகர்
இறைவியென மனமுருகி ஒருமரப் பலகைமிசை எழுதியநி னெருமுகத்தைப்
பதமா யமைத்தறிவு நிறைவோடு பூசிக்கப் பாங்காயமர்ந்ததாயே
பரவுமம் பிகைபாகர் தருமாறு முகமெனும் பண்பாளர் தொட்டெடுத்த
மதியேறு கோயிலிற் றிருவடி யமுத்தியநுள் வளர்கொலு விருந்ததாயே
வருமடியர் குறைபோக்கி யிருண்மல முறுத்தாது மருவுபிணி தீர்த்ததாயே
இதமாக நின்னுமை பதமாலை பாடிநல மெய்துவர மீந்தருளுவாய்
இட்டமுடன் நாயன்மார் கட்டினிலமர்ந்தஸ்ரீ இராசரா சேசுவரியே.

ஈகைமுத லேறுகொடை யன்புநிதி யாவுமுன தின்பக் கரம்விளங்க
ஏயகலை நாதவிந் தாயபொரு ளானமுடி விருபாத மிசைவிளங்க
போகங்க ளானசுக யோகங்களும் சகல புவனத்து வேதங்களும்
பூதங்களும் ஜெநன பேதங்க ளுங்கருணை பூத்தவிழி தனில்விளங்க
பாகமா நிறைமதி சேகரன் திருவுளப் பாங்கிலே பணிகள் செய்யப்
பயிலுநவ கோளர்பெறு மதிக்கட்ட ளைகளுன் பண்வாயி லேவிளங்க
ஏகநாயகியாகி வருமம்மையே யெமக் கிகபரசௌ பாக்கிய மருள்வாய்
இட்டமுடன் நாயன்மார் கட்டினி லமர்ந்தஸ்ரீ இராசரா சேசுவரியே

உயிராகி உடலாகி உளமாதிகரணங்கள் ஒருமித்த உணர்வுமாகி
　　உண்மையறி வானந்த முதலாய்ச் சஹஸ்ரார உச்சிவெளி யிடைவிளைந்த
பயிராகி ஐம்புலச் செயலொன்றி நின்றுவிழி பார்க்கவரு மழகியாகி
　　பந்தனை யொழிந்துவரு சிந்தனை தெளிந்தசுவைப் பக்குவப் பழமுமாகி
நயமான பேரின்ப வீட்டுறுதி தந்திடும் நமசிவய ஜனனியாகி
　　நாடுமந் திரமேழு கோடிகளு மொழிகின்ற நடமாடு சிவகாமியே
இயலான நின்றெண்டர் வழியோ டிணைந்தமன ஏகாந்த வாழ்வுதருவாய்
　　இட்டமுடன் நாயன்மார் கட்டினில் அமர்ந்தஸ்ரீ இராசரா சேசுவரியே

ஊறுதரு நோயகல நீறுதரு மாதவ முகுற்றிய மகாமாரியே
　　உற்றசிங் கத்துவரு மாவீர காளியே உணர்விலா மகிஷாசுரன்
நாறுதலை வீழவீ ரேழுலகு வாழவே நச்சம்பு தொடுதுர்க்கையே
　　நாழியிரு நெல்கொண்டு ஞாலமேல் லாந்தர்ம நாற்றிட்ட காமாட்சியே
ஆறுமுக னைத்தழுவி ஆசையொடு கந்தனென அமுதமுலை தந்த சிலையே
　　ஆனைமுக னுதயமுறை ஈசனெடு பிரணவத் தட்சரம் பார்த்த பிடியே
ஏறுவிடையேறிமறை பேசுகிளியேயுன்ற னிசைபேசு தமிழுருவாய்
　　இட்டமுடன் நாயன்மார் கட்டினில் அமர்ந்தஸ்ரீ இராசரா சேசுவரியே

எண்ணரிய புவனங்கள் நண்ணுமெழு பிறவிபுனைந் தியற்றுத இயற்கை வண்ணம்
　　இணையிலாத் தோற்றங்கள் கணமதிக மாற்றங்கள் இல்வாழ்க்கை ·செல்லுமுறைகள்
கண்ணினிறை ஓவியம் காதுநிறை காவியம் கருத்துநிறை தானந்தவம்
　　கனமான சங்கமத் தாவரத் திடைநிலவக் கண்காட்டி யிண்டமைந்தாய்
மண்ணுலகு முதலான அண்டங்கள் எங்குமுன் மலரடி நினைந்த உயிர்கள்
　　மாறிப் பிறந்துமலை யேறிச் சிறக்கவிதி மன்னனுக் காணையிடுவாய்
எண்ணுமனங் குவியாத எளியேனைக் கரையேற்ற எப்படித் திருவுள்ளமோ
　　இட்டமுடன் நாயன்மார் கட்டினில் அமர்ந்தஸ்ரீ இராசரா சேசுவரியே

ஏதுபிழை செய்தாலும் ஆதரவு காட்டுந்தாய் இசைவான தந்தையும் நீ
　　ஏற்றதுணை நீ யுறவு சுற்றுகுலம் நீ யாண்டும் இனிவான சமுதாயம் நீ
ஓதுகலை நீ யன்பி லூறுசுவை நீ பெருகு முணர்வாத மின்பநிலை நீ
　　ஓசைஒலி நீ இதய வாசமலர் நீ அதனில் உதிக்கின்ற ஞானமும் நீ
சூதுபுரி புலவேடர் தூளிபட மூலமேவுத் துலங்குமா ராதாரம் நீ
　　சூக்குமை தொடங்கியெழு காற்றிடை யடங்கிவளர் சோதிசுடர் நீயல்லவோ
ஏதுபல வாகியுழல் வேதனைவ ராமலெம திதயமிசை வீற்றிருப்பாய்
　　இட்டமுடன் நாயன்மார் கட்டினில் அமர்ந்தஸ்ரீ இராசரா சேசுவரியே

ஐயமில்லாத நவநிதியுண்டு பதியுண்டு அன்புநிறை வாழ்க்கையுண்டு
　　அறிவுடைய மகவுண்டு பெறுமதிக சுகமுண்டு ஆறுதல் நிரம்பவுண்டு
வையமிசை புகழுண்டு வாழ்வுதொழிற் பலனுண்டு மதியுண்டு கதியுமுண்டு
　　வளமுண்டு வண்மைசெறி யுளமுண்டு பூத்தசெல் வாக்குநல் வாக்குமுண்டு
மெய்யறிவு காணுகிற போக்குண்டு விண்வீட்டு வெளிக்கதவுத் திறப்புமுண்டு
　　மேலார் விருந்துண்டு சாவாமருந்துண்டு வேகாத தேகமுண்டே
எய்யுநகை ஐயன்மகிழ் தையன்மணி யேநின்னை ஏத்துமடி யார்தமக்கே
　　இட்டமுடன் நாயன்மார் கட்டினில் அமர்ந்தஸ்ரீ இராசரா சேசுவரியே

ஒப்பரிய சடைபுரள முடிமின்ன செவியிரண் டொளிவீசுதோ டெறிக்க
　　ஓங்கார வெண்ணீறு நன்னுதலிலே பொலிய ஒண்டிலக மொளிபரப்ப
செப்பிடுமென் கொடிமூக்கின் மணிஒளிரத் திருமார்பில் செல்வமங் கல்யமிளிர
　　மசங்கரத் தொடித்தவழ குங்குமத் தோளிலே தேனெழுகு மாலைதுவள
துப்பனைய செவ்வாயி னகைமலர, இருஞானம் தோன்றுதன பாரமசைய
　　தாயபட் டுடையாட, துடியன்ன இடையாட, தொழுபதச் சிலம்புமாட
எப்பொழுது முன்றன் திருப்பொலிவு காட்டுமெம(து) இறைவியே போற்றி போற்றி
　　இட்டமுடன நாயன்மார் கட்டினில் அமர்ந்தஸ்ரீ இராசரா சேசுவரியே

## போற்றி

ஓம்ஸ்ரீ சிவாயநம வடிவம்மையே போற்றி ஒன்றுபல வாகநின்ற
ஓம்ஸ்ரீ மகாதேவி நாகபூஷணி போற்றி உருவருவு மருவுருவுசேர்
ஓம்ஸ்ரீ மனோன்மணி தடாதகே போற்றிஅரு ளுயர்நாயன் மார்கட்டுவாழ்
ஓம்ஸ்ரீ இராசரா சேஸ்வரி திருப்பாதம் ஓங்குபுகழ் போற்றி போற்றி.

ஞானப் பிரகாச நன்மதியார் ஈழத்தின்
வானப் புகழை வகுத்திட்ட - தேனொத்த
செந்தமிழார் சாமி சிதம்பரனார் தொண்டுகளைத்
தந்தனரே செந்தமிழிற் றான்.

# செப்பறைச் சிதம்பர சுவாமிகள்

மு. ஞானப்பிரகாசம் பி. ஏ., பி. எஸ்ஸி.

*(முன்னாள், பரமேசுவரக் கல்லூரி அதிபர்)*

## யாழ்ப்பாணச் சான்றோர்கள்

சென்ற நூற்றாண்டில், வேதாகம நெறியில் நிலைபெற்று நின்று, சைவத்தமிழ்த் தொண்டு புரிந்த சான்றோர் பலரை, யாழ்ப்பாணம் பெற்றெடுத்திருக்கின்றது. அவர்களுட் பெரும்பான்மையோர், தாய்நாடாகிய தமிழ்நாட்டையே தமது தொண்டுக்குரிய திருநாடாகக் கொண்டார்கள், இன்றைய சூழ்நிலையில், அவர்கள் செய்த செயற்கரியசெயல்களைப்பற்றிச் சிந்தித்து, அவர்கள் வாழ்ந்த நெறியில் நாங்களும் வாழ முயலுவதே, எங்களுக்குரிய முதற்பெருங் கடமையாகும். யரழ்ப்பாணம் திருநெல்வேலி ஞானப்பிரகாசமுனிவர் அவர்கள் நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்கள், நீர்வேலி சிவசங்கரபண்டிதர் அவர்கள், கோவை சபாபதி நாவலர்அவர்கள், புலோலி மஹாவித்துவான் சதிரைவேற்பிள்ளையவர்கள், மட்டுவில் வேற்பிள்ளை ஆசிரியர் அவர்கள், வண்ணைநகர் சுவாமிநாத பண்டிதர் அவர்கள், நெல்லை அம்பலவாணநாவலர் அவர்கள், சூரியனார் கோயில் இலக்கணம் சுவாமிகள் அவர்கள், செப்பறைச் சிதம்பரசுவாமிகள் அவர்கள், இப்படி இப்படிப் பற்பல மஹான்களைப் பெற்றெடுத்துத் தமிழ்த்தாய் நாட்டுக்கு உபகரித்த யாழ்ப்பாணப் பூமியைப் புண்ணிய பூமியெனக் காணும் கண்களை முதலில் இறைவன் எங்களுக்கு அனுக்கிரகித்தல் வேண்டும் என்று, எல்லாம் செய்யவல்ல அந்த இறைவனைப் பிரார்த்தித்து இக்கட்டுரையை எழுதத் தொடங்குகின்றேன். இக்கட்டுரையில் யாழ்ப்பாணப் பெரியோருள் ஒருவராகிய செப்பறைச் சிதம்பர சுவாமிகளின் கதையை எமக்குத் தெரிந்த வகையில் எழுத முயலுகின்றேன்.

## இளமைப்பருவம்

சுவாமிகள் யாழ்ப்பாணத்திலே கொடிகாமத்தைச் சார்ந்த கச்சாய்ப் பகுதியில், தூய சைவ வாழ்வு வாழ்ந்து வந்த வேலாயுதம் என்னும் ஒரு பெருந்தவர்க்கு அருந்தவப் புதல்வராய்த் தோன்றினார். இவர் இளம்பருவத்தில் தமிழ் மொழிப்பயிற்சியும் சமயநூற்றேர்ச்சியும் உடையராய் விளங்கினார். தென்மராட்சி மாவட்டத்தைச் சார்ந்தவிடத்திற் பழைய பொலிஸ் அலுவலக விசாரணையாளர் சபாபதிப்பிள்ளை என்பாரிடம் தமிழ் இலக்கணம் பயின்றனர். மந்துவில் சுப்பிரமணியக் குருக்களிடம் சமயநூற் பயிற்சி பெற்றனர். இளமையிலேயே ஏற்ற மொழிப்புலமையும் கலைத்தேர்ச்சியும் பெற்ற நம் சுவாமிகள் பரதகண்டத்தின் இருதயத்தானம் எனக் கருதப்படும் கோயிலான சிதம்பரத்தைக் கண்டு பொன்னம்பலக் கூத்தரை வழிபடவேண்டுமென்ற பெருவிருப்புற்றனர். இவ்விருப்பு இந்தியாவுக்குப் புறப்படத் தூண்டியது.

## யாத்திரையும் க்ஷேத்திர வாசமும்

சிதம்பரம் சென்று அங்குச் சிலநாட்கள் தங்கிக் கூத்தப்பெருமானை வழிபட்டு இன்புற்றனர். அங்கிருந்து இறக்க முத்திதரும் காசியம்பதிக்குச் செல்லவேண்டுமென விரும்பினார். திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய்மலர்ந்துள்ள திருவங்கமாலைப் பாடல்களுக்கிணங்க இளம்பருவத்தினராகிய சுவாமிகள் சிதம்பரத்திலிருந்து கால்நடையாகவே புறப்பட்டு, வடதிசைக்கண்ணுள்ள் கறைக்கண்டன் உறை கோயில்களையெல்லாம் தரிசிக்கவேண்டும் எனக்கருதினார். திருக்காளத்தி, திருப்பருப்பதம் முதலிய தமிழ்நாட்டுக்கப்பாலுள்ள வடநாட்டுத் தலங்களைக் தரிசித்தபின்னர், கங்காநதி என்றென்றும் வலமாக வந்து சதாகால வணக்கம்புரியும் காசி விசுவநாதப் பெருமானைத் தரிசித்து இன்புற்றார். அங்குச் சில மாசங்கள் தங்கிப் பக்க இடங்களிலுள்ள தலங்களைத் தரிசித்து, தீர்த்தங்களில் தீர்த்தமாடி. வடநாட்டுச் சாதுக்களுடன் ஒன்றுபட்டுக் கலந்து உடனுறைந்து வாழும் பெரும்பயனும் பெற்று, க்ஷேத்திரவாசம் செய்தார். தமிழகத்திலுள்ள சிவஸ்தலங்களையும் ஒன்றுவிடாமற் சென்று தரிசனஞ் செய்யவேண்டும் என விரும்பியவராய், தமிழகத்திற்கு மீண்டு சில ஆண்டுகள் யாத்திரை வாசியாகக் காலங்கழித்தார். கடைசியில் சிதம்பரம் வந்து கூததப்பெருமானைத் தரிசனஞ் செய்துகொண்டு வாழ்ந்துவந்தார்.

### செப்பறைப் பதியை அடைதல்

சிதம்பரத்தில் வாழ்ந்து வருங்காலத்தில் முற்காலச் சோழமன்னர்களால் வார்த்து அமைக்கப்பட்டலான கூத்தப்பெருமான் திருவுருவம் ஒன்று இன்றும் தண்பொருநையாற்றடியில் அமைந்துள்ள செப்பறை என்னும் பதியில் அணிபெற்று விளங்குகிறது, என்பதறிந்து திருநெல்வேலிப் பகுதியைச் சார்ந்த செப்பறைப்பதியை நாடி அடைந்தனர். பொருநையாற்றுத் தூய நீராடிக் கூத்தனுறையும் கோயிலின் சந்நிதியைக் குறுகினர்.

"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்ததும்பி வெதும்பி உளளம்
பொய்தான் தவிர்ந்துனைப் போற்றி சய சய போற்றி என்றும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் எனைக்கண்டு கொள்ளே"

என்னும் திருவாசகச் செழும்பாடல்பாடி, நெக்கு நெக்குருகி பரவசமுற்று, வாய் விம்மி அழுது அயர்ச்சியுடன் வழிபட்டு நிற்கும் மெய்யன்பராகிய சுவாமிகளைக் கண்டனர், செப்பறைப்பதி மடாலய கர்த்தர் திரு. கனகசபாபதி தேசிகர் அவர்கள் சுவாமிகளின் தூய தோற்றத்திலும் அன்பு நிலையிலும் ஈடுபாடு கொண்டவராய்த் தேசிகர் அவர்கள், இராச வல்லிபுரத்திலுள்ள தம் மடத்திற்கு அவரை அழைத்துச் சென்று பலவாறு உபசரித்தும் பூசித்தும் வந்தனர். அம்மடத்தின் ஞானசாரிய பீடத்தைச் சுவாமிகளுக்கே வழங்கினர். தம்மையடுத்துவரும் சிவநேயச்செல்வர்கட்குச் சிவஞானபோதம் போன்ற மெய்ஞ்ஞான நூல்களையும் பெரியபுராணம், கந்தபுராணம் திருவிளையாடற் புராணம் முதலிய புராண நுட்பங்களையும் தேவார திருவாசகப் பாடல்களின் அருங்கருத்துக்களையும் சுவாமிகள் எடுத்து விரித்து விளக்கி வருவாராயினர். இராசவல்லிபுரத்தில் வேறோரிடத்தில் அமைக்கப் பெற்றிருந்த திருவள்ளுவர் மடத்திற்குச் சென்று அங்குப் பாடங்கேட்க வந்த கா, சுப்பிரமணியபிள்ளை ரா. பி. சேதுப்பிள்ளை போன்ற அறிஞர்கட்குச் சிவஞானபோதம் போன்ற சைவ சாஸ்திர நூல்களைக் கற்பித்து வந்தார்கள். அங்குப் பாடங்கேட்கவந்த அறிஞர்கள் பிற்காலத்தில் பேரறிஞர்களாகவும், பேராசிரியர்களாகவும் திகழ்ந்து அருந் தொண்டாற்றினர்கள் என்பதைத் தமிழுலகம் நன்கறியும். இங்ஙனம் ஒரு முப்பாண்டுகள் கூத்தப்பெருமான் வழிபாட்டிலும், சிவஞான போதம் முதலிய ஞானநூல்களை உணர்த்தும் ஞான சாரியப் பணியிலும் கழிந்தன.

### சமய நூற்றிரண்டும் பிறவும்

சுவாமிகள் செப்பறைப் பதியில் இருந்தகாலத்தில் "செப்பறை மான்மியம்" என்ற உரைநடை நூல் இயற்றினர். அரசன் சண்முகனர் எழுதிய தொல்காப்பியப் பாயிர விருத்திக்கு மறுப்புக்கள் எழுதினர். தேவார திருவாசகப் பதிகங்கள் சில வற்றிற்கு விளக்கவுரைகளும் எழுதியுள்ளார். எல்லாவற்றிற்கும் மேலாக வேதத்திலுள்ள ஸ்ரீ உருத்திரம்' எனப்படும் வேதசிரசைத் தமிழ் மொழியில் வடித்துத் தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ளார். 'ஸ்ரீருத்திரம்' வேதத்திற்கு இருதயம் போன்றது. வேதம் அனைத்துலகங்களையும் அனைத்துயிர்களையும் உள்ளடக்கித் தான் மேலெழுந்து வியாபித்து நின்று கோஷித்த பொழுது வெளிப்பட்ட அதிஅற்புத மந்திரத்தொகுதியே 'ஸ்ரீ ருத்திரம்' எனப்படும். இதன் சார்பாகச் செப்பறைச் சிதம்பர சுவாமிகள் வெளியிட்ட நூலின்பெயர் 'ஸ்ரீ ருத்திர அத்தியாய பத்யம்' என்பது. அன்பர்கள் கருத்தூன்றிப் படித்து மகிழவேண்டுமென விரும்பிக் குறித்த நூலிலிருந்து சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

(1) அநுவாகம் 4

இருக்கும் உருவுடை உமக்கு வணக்கம்
படுக்கும் உருவுடை உமக்கு வணக்கம்
துயிலும் உருவுடை உமக்கு வணக்கம்
துயிலா உருவுடை உமக்கு வணக்கம்
நின்ற உருவுடை உமக்கு வணக்கம்
சென்ற உருவுடை உமக்கு வணக்கம்
அவையிடை அமரும் உமக்கு வணக்கம்

(2) அநுவாகம் 10

உருத்திர ஒறுக்கலே எம்முதி யோரை
உருத்திர ஒறுக்கலே எமது பாலகரை
உருத்திர ஒறுக்கலே உயர்திருக் குமாரரை
உருத்திர ஒறுக்கலே உய்கருக் குழவியை
உருத்திர ஒறுக்கலே எமதுதா தையினை
உருத்திர ஒறுக்கலே எனதுமா தாவை

(3) அநுவாகம் 11

புவியில் வாழும் உருத்திர கணத்தர்
அவர்தமக் குணவங் கத்திர மாகும்
அவர்தமக் கஞ்சலி ஆக்குதும் கிழக்கே
அவர்தமக் கஞ்சலி ஆக்குதும் தெற்கே
அவர்தமக் கஞ்சலி ஆக்குதும் மேற்கே
அவர்தமக் கஞ்சலி ஆக்குதும் வடக்கே
அவர்தமக் கஞ்சலி ஆக்குதும் மேலே
உருத்திர கணங்கட் குளுற்றுதும் துதிபல
உருத்திர கணங்கள் உருத்துக சுகமிக

வேதமாகிய முதல் நூலின்கண்ணே யுள்ள கம்பீரமும், உன்னதமும் வேதகோஷ ஒலிச்சிறப்பும் சுவாமிகளின் மொழிபெயர்ப்பு நூலிலும் அப்படியே முற்றுமுழுவதாக நிழலிடுவதைக் காணும்பொழுது, சுவாமிகளின் அளப்பரும் பெருமையை நாங்கள் நினைக்கவே முடியாதவர்களாயிருக்கிறோம். செப்பறைப்பதியில் முப்பது ஆண்டுகள் கழிந்ததன் பின்னர் காசியப்பதியில் வாழ் நாளளவும் க்ஷேத்திரவாசம் செய்ய வேணடும என விரும்பி, புகைவண்டிமூலம் அங்குச் சென்றார்கள். அங்கு அவர் எண்ணம் நிறைவேறவில்லை. ஓராறு திங்கள் மாத்திரம் அங்கு வாசம் செய்த பின்னர் உடல்நலம் குன்றிச் சிதம்பரக்கூத்தரை வழிபடும் வேட்கையோடு தெற்கே திரும்பினர். அங்குத் தங்கியிருக்குங் காலத்தில், யாழ்ப்பாண அன்பர்கள் சிலர் சுவாமிகள் தங்கியிருப்பதற்கான உறையுள் அமைப்பதற்கு ஏற்ற பொருளுதவி செய்தனர். திருவருள் செய்த பேருதவி என்ற மகிழ்ச்சியுடன் செப்பறைப்பதியை மீண்டும் அடையவேண்டும் என்ற காதலோடு கால்நடையாகவே புறப்பட்டனர்.

## அருளுபதேசம் பெறுதல்

வழியில் தஞ்சாவூரை அடுத்த அன்னப்பன் பேட்டை என்ற பதியை அடைந்ததும் அங்குள்ள மடாலயத்தைத் தரிசிக்கச் சென்றார். அது தாயுமான சுவாமிகள் பெயரில் எடுக்கப்பட்ட மடாலயமாகும். அங்குத் தலைவராக வீற்றிருந்த தாயுமான பரமாசாரிய பண்டார சந்நிதியவர்கள், சுவாமிகளின் பரிபக்குவ நிலையைக் கண்டு அவரைத் தம்பால் ஈர்த்துத் திருவருள் நோக்கம் புரிந்து அருளுபதேசம் செய்தார்கள். அங்குச் சிலநாள்கள் தங்கிக் குருவழிபாடுசெய்து செப்பறைப்பதியை அடைந்தனர். அங்கு முன்போலவே தம்முடன் பழகிய நண்பர்கள் மாணவர்கள் முதலியவர்கட்கு மெய்ப்பொருளியல்களை விரித்துரைப்பாராயினர். அங்குச் சில ஆண்டுகள் கழித்து, மீண்டும் மூன்றுவது முறையாகச் சிதம்பரம் முதலிய தலங்களைத் தரிசிக்கப் புறப்பட்டார்கள். சிதம்பரத்தில் முன் கிடைத்த பொருள் கொண்டு செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில் தெருவில் ஒரு கட்டடம் வாங்கினார்கள்.

## சிவஞானத் திருத்தளி

மேற்படி கட்டடத்திற்குச் சிவஞானத் திருத்தளி எனத் திருப்பெயரிட்டு அதனகத்தே ஒரு சிறந்த சைவத்தமிழ் நூல் நிலையமும அமைத்தார்கள். அதிலிருந்து, சுற்றூர்களிலிருந்து வரும் சிவநேயச் செலவர்கட்கு ஞானோபதேசம் செய்வதும் 'வேதாந்தம் வேதாந்தம்' எனக்கூறி மாயாவாத முறைகளைப் பரப்பி வந்தவர்களுடன் வாதிட்டுச் சுத்த சைவசித்தாந்த நெறியிற்கண்ட உண்மைகளைப் புலப்படுத்துவதும் ஆகிய அருட்பணிகளைச் செய்து வந்தார்கள். தமது வயோதிப நிலையிற்கூடச் சுவாமிகள் மீண்டும் ஒருதடவை காசிக்குச் சென்று சிதம்பரத்திற்கு வந்தனரென்றால் அவரது தூயவராகிய நிலையை என்னவென்று எடுத்து விவரிப்போம்.

## சிவனடிப்பேறெய்தல்

சிதம்பரம் செப்பறை ஆகிய இரண்டு சைவ கேந்திர நிலையங்களைத் தேர்ந்தெடுத்து, ஞானத தொண்டும் தமிழ்த்தொண்டும் ஆற்றிவந்த சுவாமிகள் தமது தள்ளாத வயசில் ஒரு தினம் செப்பறையிலிருந்து சிதம்பரம் செல்கையில், தமது குருமூர்த்தியை வணங்கவிரும்பித் தஞ்சாவூர் சென்றனர். அன்னப்பன் பேட்டை மடத்தின் தலைவராகிய தாயுமான பண்டார சந்நிதிகளின் முன்னர்ச் சென்று சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிய பின்னர் வழமைபோலத் தமது ஆன்மார்த்த சிவபூசை வழிபாடுகளைத் தொடங்கினர். அவ்வாறு சிவபூசையை நிறைவேற்றி,சிவத்தியானத்திலமர்ந்து சிவபிரானது திருவடிப் பெருமைகளை நினைந்து நினைந்து உருகிப் பெருகும் நிலையிலேயே சிவனடிப் பேறெய்தியவராயினர்.

## முடிவுரை

யாழ்ப்பாணம் எனப்படும் எங்கள் புண்ணியபூமியில் தோன்றி, திருநெல்வேலி, சிதம்பரம், ஆகிய இருசைவ கேந்திர நிலையங்களில் சைவத்தமிழ்த் தொண்டுகள் ஆற்றி. தஞ்சாவூர் எனப்படும் கலைச் செல்வம் நிறைந்த செந்தமிழ்ப் பூமியில் பரிபூரணம் எய்திய செப்பறைச் சிதம்பர சுவாமிகளின் திருவடிகளை வாழ்த்தி வணங்குவோமாக. சுவாமிகளின் திருவுருவத் தோற்றத்தையும் அன்பு நிலையையும் பிரதிபலிக்கும் பின்வரும் பாடலைப் படித்து மகிழ்வோமாக,

தேவாரம் பொழியும் வாயும் சிவ சிவ என்னும் சொல்லும்
ஓவாதெம் பெம்மான் தன்மேல் ஓட்டெடுத் தோடும் அன்பும்
காவாதே காக்கும் இலிங்கம் கைவிடா விடைப் பெம்மானும்
நீவாத நீறும் நூலும் நேர்படக் காண்பதென்றே.

சீதா ராம சாஸ்திரிகள் சிந்தனை அறிவுத் தெளிவுடையார்
வேதா மகிழும் வாணியருள் விளங்கப் பெற்ற அறிவாளர்
ஓதா வடநூல் ஒன்றுண்டோ உண்மை இஃதோர் புகழ்ச்சியிலே
வேதா கமங்கள் துளைந்தாடி விரிப்பர் சத்தி விறலெல்லாம்.

# வேதாகம புராணங்கள் ஏத்திடும் வித்தகி

வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள்

முழு முதற் கடவுளாகிய சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் புரிந்தருளுகின்றார் எனச் சைவ சாஸ்திரங்கள் விளக்குகின்றன. அப்பரமேசுவரன் இச்சாசக்தி கிரியாசக்தி ஞானசக்தி சுவரூபமாக விளங்குகின்றார். அறிவும் இச்சையும் அவருள் மறைந்து நிற்கின்றன. கிரியா ரூபமான சக்தி, பிரபஞ்ச நலனைக் கருதி நான்கு வகையாகப் பிரிந்து இயங்குகின்றது. சகல ஜீவான்மாக்களுக்கும் போக போக்கியங்களை அருளும் சக்தி உமையம்மையாகும். பிரபஞ்சத்தை நிலையான முறையில் இயக்குவிக்கும் சக்தி புருட வடிவத்தில் காட்சி அளிக்கும் விஷ்ணுவாகும். தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கி வளரும் நேரம் அதர்மத்தை அழித்து, தர்மத்தை ஸ்தாபிக்கும் சக்தி காளியாகும். நல்லவர்கள் மறைந்து வாழத் தீயவர்கள் மேலோங்கி நிற்கும்போது போரை மூட்டித் தீயவர்களை அழித்து நல்லவர்களை வாழச் செய்யும் சக்தி துர்க்கையாகும். இதனை ஸ்மிருதிநூல் பின்வருமாறு கூறுகின்றது.

"ஏகைவ சக்தி: பரமேசுதாஸ்ய
பிரயோஜனுர்த்தாய சதுர்விதாபூத்
போகே பவானீ புருஷே விஷ்ணு:
குரோதேச காளீ ஸமரேச, துர்கா"

இவ்வாறு சிவபெருமான் நான்கு வகையான கிரியா சக்திகளினூடாகப் பிரபஞ்ச கிருத்தியங்களை நடாத்தி வருகின்றார்.

சிவ சக்தியைப் பிரகிருதி புருஷன் என்று கூறுவர். பிரகிருதியை மாயை என்றும், புருஷனை மாயி என்றும் விளக்கம் கூறுவார்கள். மாயையைத் தன்னுள் அடக்கி, மாயி பிரபஞ்சம் முழுவதையும் வியாபித்து அருளுகின்றது என்று பிர்ம வைவர்த்த புராணம் கூறுகின்றது.

"மாயாம்து பிரகிருதிம்வித்தி மாயினம்து மகேசுவரம், தஸ்ய அவயவ பூதைஸ்து வியாப்தம் ஸர்வமிதம் ஜகத்"

ஆகவே இவனுல் சிவசக்தியின் ஒற்றுமைப்பாடு தெளிவாக அறியப்படுகின்றது. அந்த மாயா ரூபியான சக்தியே சிவத்தின் திருவருளாகும். திருவருளுக்குப் பாத்திரமானவன் சிவ ஸாயுஜ்ய பதவியைப் பெறுகின்றான், இதனை மணிவாசகப் பெருமான் "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி," என்ற வசனத்தால் விளக்கிக் காட்டியுள்ளார். அப் பரமேசுவரனுடைய திருவருட் சக்தியாகிய உமையம்மையின் துணையால் சிவபத முக்தியைச் சீவான மாக்கள் அடைகின்றன என்பதே இதன் விளக்கமான கருத்து. இக்கருத்தைச் சங்கர பகவத் பாதாள் இராஜஇராஜேசுவரி அஷ்டகத்தின் பலசுருதியில் "அந்தி ஈசமோட்சப்ரதா" என்ற வாக்கியத்தால் தெளிவு படுத்தியிருக்கின்றார். அந்தி - பலபல பிறவிகளில் பலபல தேவர்களை வழிபட்டு அதன் புண்ணிய வசத்தால் தேவியை வழிபடும் அடியார்களுக்கு அப்பிறப்பே முடிவாகி அப் பிறவியின் முடிவிலேயே, ஈச மோட்சப்ரதா - சிவபத முக்தியை அருளுபவள் பராசக்தி, என்பதே இவ்வாக்கியத்தின் தெளிவான கருத்தாகும். தேவியை வழிபடும் எண்ணம் கடைசிப் பிறப்பில்தான் உண்டாகும் என்று லலிதாஸஹஸ்ர நாம பல சுருதியில் "சரமே ஜந்மனி" என்ற வாக்கியத்தால் வலியுறுத்தப் பட்டிருக்கின்றது. சிவபெருமானின் திருவருள் கிடைத்துவிட்டது என்பதே இதன் கருத்தாகும். சக்தி வழிபாடு செய்து அன்னையின் அருளைத்

துணைக்கொண்டு சீவான்மாக்கள் சிவமுக்தி பெறு கின்றன என்பதே சாஸ்திர முடிபான கருத்தாகும்.

பறவை மிருகம் முதலியன யாவும் பிறப்பெடுத்ததும் முதலில் தாயை உணர்ந்துகொள்ளுகின்றன. ஆனால் அவை தந்தையை உணர்ந்து கொள்ளமாட்டா. மனிதன் பிறவி எடுத்ததும் தாயை உணர்ந்து கொள்ளுகிறான். பின் தாய் உணர்த்தத் தந்தையை உணர்ந்து கொள்ளுகிறான். ஆகவே, மானுடப் பிறவி மிக மேலானது. "ஜந்தூனும் நரஜன்ம துர்லபமிதம்" பிறப்புக்களுள் மானிடப் பிறவி கிடைத்தற்கரிது என்பது சான்றோர் வாக்காகும். தோற்றத்தில் தோன்றிய முறைபோல முடிவிலும் அவ்வாறே அமைந்துள்ளது, "தோடுடைய செவியன்" என்ற தமிழ் மறையாம் ஆதி வாக்கும் இக் கருத்தை வலியுறுத்துகின்றது. இறைவி இம்மையில் சகல போக பாக்கியங்களைக் கொடுத்து முடிவில் குரு வடிவமாக வந்து சிவஞானத்தை அருள் புரிந்து சிவஸாயுஜ்யத்தை அளிக்கின்றாள் என்பதே ஆகம சாஸ்திர முடிபாகும்.

"சிவஞானப்ரதாயின்யை நம:" என்று லலிதா ஸஹஸ்ர நாமத்தில ஒரு அர்ச்சனையுள்ளது. சிவஞானத்தை அளிப்பவள் என்பதே அதன் கருத்தாகும்.

பேரின்ப வாழ்வுக்கு அடிப்படையானது ஞானம். மகேசுவரனை உபாசித்து ஞானத்தைப் பெறவேண்டும். அதற்குரிய மந்திரம் பஞ்சாட்சரமாகும். அதனை உபதேசித்து விளக்குவது குருவின் வாக்காகும். இக்கருத்தைப் பின் வரும் பாட்டு விளக்குகின்றது.

"மோட்சஸ்ய மூலம் யத்ஞானம்
தஸ்ய மூலம் மகேசுவர:
தஸ்ய பஞ்சாட்சரோ மந்திர:
மந்திர மூலம் குரோர்வச:"

சிவத்தின் திருவருட் சக்தியே குருவாக வந்து உபதேசம் செய்கின்றது என்பது சைவ சாஸ்திரக் கோட்பாடாகும்.

கவிச் சக்கரவர்த்தி காளிதாசன் தேவி ஸ்தோத்திரத்தில் இக் கருத்தை அழகாக எடுத்துக் கூறியிருக்கின்றார். "தயமான தீர்க நயனும் தேசிகரூபேண தர்சிதாப்யுதயாம்." அன்னை பராசக்தி கருணை நிறைந்த நீண்ட கண்களையுடையவள்; குரு வடிவமாக வந்து எல்லா நன்மைகளையும் ஆன்மாக்களுக்கு அருளுபவள். வேதம் உபநிடதம் ஆகமம் இவைகள் தேவியின் பெருமையை வெகுவாகப் போற்றித் தேவி வழிபாட்டை முன்னிட்டுச் சிவ வழிபாட்டை விளக்குகின்றன.

## வேதம்

இருக்கு வேதம் பத்தாம் மண்டலம் 125ஆம் சூக்தம்.

1. "அஹம் ராஷ்ட்ரீஸங்கமனீ வஸூநாம்,
சிகுதுஷி பிரதமா யக்ஞியா நாம்
தாம்மா தேவா வியதது: புருத்திரா
பூரிஸ்தாத் திராம் பூரி ஆவேசயந்தீம்

2 மயா ஸோன்ன மத்தியோ விபச்யதி
ய: பிராணிதியாம் சுருணோதி உக்தம்
அமந்தவ: மாம்தே உபக்ஷியந்தி சுருதி
சுருத சிரத்திவம் தேவதாமி"

(அஹம்) என் உள்ளத்தில் கலந்து நிற்கும் பராசக்தி (சிகிதுஷி) சிவப் பிரம்மத்தை அறிந்திருப்பவள். பிரம்மா. விஷ்ணு, உருத்திரன். மகேசுவரன். ஸதாசிவன், நாதம், பிந்து. சக்தி சிவம் என்ற ஒன்பது தத்துவங்களுள் சக்தி தத்துவம் சிவ தத்துவத்தின் அருகில் இருத்தலால் என்றும் சிவப்பிரம்மத்தை அறிந்திருப்பவள் என்பதே இதன் விளக்கமாகும். (யக்ஞியாநாம் பிரதமா) வேள்விக்குரிய பொருள்களுள் முதற்பொருளாக விளங்குபவள். வேள்வி செய்ய விரும்பும் ஒருவர் அதற்குரிய பொருள்களைச் சேகரிக்கவேண்டும். இல்லாளுடன் இல்லற தர்மம நடத்துபவர் வேள்வி செய்ய வேண்டும் என்று வேதம் விதித்துள்ளது. ஆகவே, வேள்விக்குரிய பொருள்களுள் இல்லாள் முதன்மை ஸ்தானம் பெற்றவளாகின்றாள். சிவபெருமானுக்கு நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், யஜமானன் என்ற எட்டு மூர்த்தங்களுள் யஜமானன் என்ற மூர்த்தமாகிய சிவத்திற்குச் சக்தி முதற் பொருளாக விளங்குகின்றாள். (பூரிஸ்தாத்திராம்) பிரபஞ்ச வடிவமாக எங்கும் விளங்குபவளும் (பூரி ஆவேசயந்தீம்) சகல ஜீவராசிகளை வாழச்செய்ப

வளும் (மாம்) சிவ பாவனையில் விளங்கும் சீவ னோடு கலந்து நிற்பவளுமாகிய அந்தப் பரா சக்தியை (தேவா: புருத்திரா வியதது:) தேவர்கள் முன்னதாகவே அறிந்துள்ளனர். (ய: விபச்யதி) எந்தச் சிவஸ்வரூபம் யாவையும் காண் கின்றதோ (ய: ப்ராணிதி) எந்தச் சிவஸ்வரூபம் மூச்சு விடுகின்றதோ, நான்கு வேதங்களும் புராணங்களும் இதிகாசங்களும் உபநிடதங்களும் சிவபெருமானின் மூச்சுக் காற்றுக்கள் என்று பிரகதாரண்யக உபநிடதம் விரித்துக்கூறுவதை வேதம் சுருக்கிக் கூறியிருக்கின்றது. (ய: உக்தம் சுருணோதி) எந்தச் சுவஸ்வரூபம் எனது தோத்திரத்தை ஆதரவுடன் கேட்கின்றதோ (ஸ மயா அன்னம் அத்தி) அந்தச் சிவஸ்வரூபம் சக்தியோடு கலந்து என் உள்ளத்தில் நின்று சகல அனுபவங்களையும் அனுபவிக்கின்றது. (மாம்) சிவத்துடன் கலந்து என் உள்ளத்தில் உறைந்து நிற்கும் சக்தியை (அமந்தவ: தே) அறிந்துகொள்ளாத ஜீவான் மாக்கள் (உபக்ஷீ யந்தி) துயரக் கடலில் மூழ்கின்றன. (சுருத) புகழ் பெற்ற ஜீவான்மாவே (சுருதி) நான் சொல்வதைக் கேள். (சிரத்திவம்) அந்தச் சிவப் பிரம்மஸ்வரூபத்தைச் சிரத்தையின் மூலமாகத் தான் அறியமுடியும். பிரணவத்திற்குச் சிரத்தை மேதை என இரு சக்திகள் உண்டு. சிரத்தா ரூபமான சத்தியினூடாகப் பிரணவ ரூபமான சிவஸ்வரூபத்தை அறியமுடியும் என்பதே இதன் விளக்கமாகும். (தேவதாமி) உனக்கு இதனை எடுத்துக் கூறுகிறேன். இவ்விரு பாட்டுக்களும் சக்தியின பெருமையை விளக்கிச் சக்தி வழி பாட்டின் சிறப்பையும் விளக்கியுள்ளன.

## யசுர்வேதம்

யசுர்வேதத்தில் தேவியைப் போற்றும் மந் திரப் பகுதிகளுள் இரண்டு மிகப் பிரசித்தி வாய்ந்தவை, ஒன்று ஸ்ரீ ஸூக்தம், மற்றது துர்காஸூக்தம். ஸ்ரீ ஸூக்தத்தில் முதலாவது மந்திரம் ''ஹிரஜண்யவர்ணும் ஹரிணீம் ஸுவர்ண ரஜதஸ்ரஜாம் சந்திராம் ஹிரஜண்மயீம் லக்ஷ்மீம் ஜாதவேதோம ஆவஹ'' பொன் நிறம் வாய்ந்த வளும் சகல பாவங்களை நீக்குபவளும் பொன் மாலையும் வெள்ளி மாலையும் அணிந்திருப்பவளும் சந்திரன்போல் மகிழ்ச்சி தருபவளும் மக்களுக்கு ஏராளமான செல்வத்தை வைத்திருப்பவளுமான மகாலட்சுமியை ஓ! அக்நி பகவானே என்னு டைய நன்மையின் பொருட்டு அழைத்துவாரும். இது வெளிப்படையான கருத்து. பிறவியெடுத்த சீவான்மாக்கள் யாவையும் அறியும் ஞானருபி யான பேரொளியே! பொன் மேனியனுடன் இரண்டறக் கலந்து நின்று பிரித்தறிய முடியாத பொன்மேனி பெற்றவளும் மும்மலங்களை நீக்குப வளும், சத்துவகுணமும், திருவருளும் நிறைந்தவ ளும அடியவர்களுக்கு அருள்செய்ய மலர்ந்த முகம் பொருந்தியவளும், சகல போகச் செல்வங் களை அளிப்பவளும் ஆகிய அன்னை திருவருட் சக்தியை எனது ஆன்ம ஈடேற்றத்திற்காகத் தாங்கி வருவீராக. இது மறைபொருளாகும். திருவருட்சக்தியை முன்னதாக வழிபட்டுச் சிவப் பிரம்மத்தை அன்னையின் அருளால் அறிந்துபின் வழிபடல் வேண்டும் என்ற கருத்தை இம்மந்திரம் அழகாக விளக்குகின்றது.

தேவியைப் போற்றும் மற்றொரு மந்திர பாகம் துர்காசூக்தமாகும். இதில் ஆறு மந்திரங் கள் உள்ளன. இரண்டாவது மந்திரம் தேவி யைப் போற்றுகின்றது.

> ''தாமக்நிவர்ணும் ஜ்பஸா தவலந்தீம்
> வைரோசநீம் கர்மபலேஷு ஜுஷ்டாம்
> துர்காம் தேவீம் சரணமஹம் ப்ரபத்யே
> ஸுதா ஸிதா ஸேநம:''

மின்னலொளி பொருந்தியவளும், சிவதத்து வத்திற்கு அருகில் நின்று ஒளியுடன் பிரகாசிப்ப வளும், பேரொளி வாய்ந்த சிவத்தில் மலர்ந்து நிற்பவளும், சீவான்மாக்களுக்குக் கர்மபலனை அளிப்பதற்காகச் சிவனைச் சேவித்து வருபவளும், மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்திபு டன் உள்ளத்தில் ஆராதிக்கப்படுபவளும், சுயம் பிரகாசம் உடையவளுமான அன்னையைத் தஞ்ச மென அடைகின்றேன். சகல ஆன்மாக்களுக் கும் போக போக்கியங்களை அளித்து முடிவில் பிறவிக் கடலைத் தாண்டுவிப்பவளே, நானும் அவ்வாறு தாண்டுவதற்காக உனக்கு வணக்கம்.'

ஏனைய ஐந்து மந்திரங்களும் சிவபரமாக அமைந்துள்ளன. இருந்தும் துர்காசூக்தம் என்று தேவியின் பெயரால் அழைக்கப்படுகின்றது. சிவ மும் சக்தியும் அபின்னமானவையாதலால் தேவி பாவனையை முன்னிட்டுச் சிவ வழிபாடு செய் கின்றேன் என்பதே இதன் உட்பொருளாகும்.''

## உபநிஷதம்

ஒரு சமயம் தேவரும் அசுரரும் கடும்போர் புரிந்தனர். இறைவனருளால் தேவர் வெற்றி பெற்றனர். மக்கள் தேவர்களைப் போற்றினர். இவ்வெற்றிக்குக் காரணம் தாங்களே என்று தேவர்கள் கூறத் தொடங்கினர். அவ்வமையம் தொலைவில், பேரொளியொன்று தோன்றியதைக் கண்டனர். தங்களை அழிக்க வந்த ஒரு இயக்கனேவென்று கண்டு அஞ்சினர். தேவர் தலைவனாகிய இந்திரன் அதனை அறிந்துவர அக்கினியை அனுப்பினன். அக்கினிதேவன் அங்குச் சென்றான். அப்பெருஞ்சோதி நீ யார் உனது வலிமை யாது என்று வினவியது. என் பெயர் அக்நி. நான் யாவையும் எரிக்கும் வலிமையுடையவன் என்று அக்கினிதேவன் கூறினன். அங்ஙனமாயின் இத்துரும்பை உனது வலிமையால் எரிப்பாயாக என்று அப்பரஞ்சோதி கூறியது. அக்நிதேவன் தன் முழு வலிமையைச் செலுத்தியும் எரிக்க இயலாது தோல்வியுற்றுத் திரும்பிச்சென்றான். இந்திரன் வாயுதேவனை அனுப்பினன். வாயுதேவன் அங்குச் சென்றான். நீ யார் உனது வலிமை யாது என்று பரஞ்சோதி முன்போலவே வினவியது. என் பெயர் வாயு. நான் யாவையும் தூக்கிச் செல்லும் வலிமையுடையவன் என்று வாயுதேவன் கூறினன். அங்ஙனமாயின் இத்துரும்பை எடுத்துச் செல்வாயாக என்று அப்பரஞ்சோதி கூறியது. வாயுதேவனும் தன் முழு வலிமையைச் செலுத்தியும் தூக்க இயலாது தோல்வியுற்றுத் திரும்பிச் சென்றான். இந்திரன் தானே நேரில் அறிந்துகொள்ளப் புறப்பட்டுச் சென்றான். அவ்வமையம் அப்பரஞ்சோதி மறைந்தது. வேறு ஒரு மின் ஒளி தோன்றியது. அதுவே சக்திஸ்வரூபம். மிக அழகாகச் சோபிக்கின்றாள். சிவமும் சக்தியும் அபின்னமானதால் பொன்மேனியுடன் விளங்குகின்றாள். பரமேஷ்டி என்பவர் மூன்று வேதத்தின் ஸாரமாக அ, உ, ம, என்று மூன்று எழுத்துக்களை எடுத்து ஒன்று சேர்த்து ஓம், என்ற பிரணவத்தை உருவாக்கித் தந்தார். அந்த ஓம் என்ற பிரணவமே சிவஸ்வரூபம். அவ்வேதங்கள் விளக்கும் வேத ஸாரமே சிவம் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டினர். சிவ அபின்னமானது சக்தி. ஸாமகானத்தில் மிகுந்த விருப்பமுடையவர் சிவபெருமான் ஸாமவேதத்தின் சாரமாகிய ம, என்னும் எழுத்தை நடு மணியாகக்கொண்டும் கிரியா வழிபாட்டை விளக்கும் யஜுர் வேதசாரமாகிய உ, என்னும் எழுத்தை ஆதியாகக்கொண்டும் துதி வடிவமாக அமைந்த இருக்குவேத ஸாரமாகிய "அ" என்னும் எழுத்தை ஈருகக்கொண்டும் அமைந்த உமா என்று பெயர் தாங்கி நிற்கின்றாள். அந்தப் பராசக்தியைக் கண்டு அடி வணங்கி, தாயே! சகல ஆன்மாக்களிடத்திலும் ஒரே மாதிரியாக அன்பு செலுத்துபவளே, ஆன்மாக்களின் தகுதியறிந்து அளந்து போக பாக்கியங்களை அளிப்பவளே, அதனாலேயே உன்னை உலகம் மாதாவென்று அழைக்கின்றதன்றோ. (மா - அளத்தல், தா - விகுதி) நான் கண்ட பொருள் யாது என்று இநதிரன் வினவினன். மகனே! நீ முன்பு கண்ட பொருள் சிவம். அவன் அருள்தான் உங்கள் வெற்றிக்குக் காரணம், என்று கூறி மறைந்தாள். இக்கதை கேன உப நிடதத்தில் உள்ளது.

"இந்திர : அதிதராமிவ அன்யான் தேவான்
ஸஹி ஏனம் நேதிஷ்டம் பஸ்பர்ச
ஸஹி ஏனம் பிரதமோ விதாஞ்சகாரபிரம்மேதி"

இந்திரன் மற்றத் தேவர்களைவிட மேலானவன். ஏனெனில் அவன்தான் சிவத்தின் அருகில் சென்றான். சக்தியின் அருளால் முதலில் சிவத்தை அறிந்துகொண்டான் சக்தி நிபாதம் பெற்றான். அக்நியும் வாயுவும் அதனைப் பெறவில்லை. ஆயினும், சக்தியின் அருள்பெற்ற இந்திரனை ஆசிரயித்து நின்றனர். ஆகவே இரண்டாவதாக அறிந்துகொண்டனர். மற்றைத் தேவர்களைவிட இம்மூவரும் மேலானவர். இக்கதை சக்தியை வழிபட்டு அவளருளால் சிவத்தை வழிபட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

## ஆகமம்

ஆகம சாஸ்திர கிரியா பத்ததியில் "சக்தி ஆதி சக்திபுர்யந்தம் அப்பியர்ச்சிய" என்ற வாக்கியமுள்ளது. சக்தியை ஆதியாகக்கொண்டு சக்தியை முடிவாகப் பூசித்து என்று கருத்து - ஆதார சக்தயே நம: என்று பூசை தொடங்கிச் சக்தி மண்டலாதிபதயே பிரகிருத்யை நம: என்

பது வரையிலும் பஞ்சாஸநார்ச்சனா பூஜையை முடித்து அதன்மேல் மூர்த்தித் தியானம் செய்ய வேண்டும் என்பது விளக்க உரையாகும். சக்தி தத்துவத்தின்மேல் சிவ தத்துவம் ஸ்தாபிக்கப் படுகின்றது. இதன் மூலமும் சக்தியை முன்னிட்டே சிவ வழிபாடு செய்யவேண்டும் என்று விளக்கம் கிடைக்கின்றது.

சகல ஜீவ தயாபரனாகிய சிவபெருமான் முனிவரும் மந்திர வழிபாட்டினரும் ஞானிகளும் யோகிகளும் தியானம் செய்து பூஜித்து நலம் பெறும் காரணமாகச் சுத்த மாயையினால் பல ரூபங்களைத் தாங்கினார் என்று சுப்பிரபேதம் கூறுகின்றது.

“யதீநாம் மந்திரிணாம் சைவயோகிநாம்
ஞானினாம் ததா
தியான பூசாநிமித்தம்ஹிதநூர்
கிருஹ்ணாதி மாயயா”

சிவசக்தி ஸ்வரூபமும் கார்யவேறு பாடுகளைக் கொண்டு இலக்குமி, சரசுவதி, சாவித்திரி, துர்கை என்னும் பல ரூபங்களைத் தாங்கியுள்ளது என்று காளிகாபுராணம் கூறுகின்றது.

“மாயைய கா பின்ன ரூபேண
கமலாக்யாஸரஸ்வதீ
ஸாவித்திரீ ஸாச யந்தியாச
பூதாகார்யஸ்ய பேதத:”

பராசக்தியின் பலவகை ரூபங்களுள் லலிதா என்று பெயர் தாங்கிய உருவத் திருமேனி பூர்ண கலை நிறைந்தது என்று தேவி பாகவதம் கூறுகின்றது. லலிதா பரமேசுவரி சிவ பூர்ணத்துவம் பெற்றவள். ஞானாக்கினி குண்டத்தில் தோன்றிக் காமேசுவரனைத் தலைவனாகப் பெற்றமையால் சக்தி பூர்ணத்துவம் பெற்றது. பெருமை வாய்ந்த பரமேசுவரி ஒரு சமயம் தன்னிடம் அன்பு செலுத்தும் வசினீ முதலிய தேவதைகளை நோக்கி என்னுடைய பெயரிட்டு ஆயிரம் நாமாக்கள் பொருந்திய ஸ்தோத்திரங்களைப் படியுங்கள் என்று ஆணையிட்டருளினாள். அவர்களால் லலிதா ஸஹஸ்ரநாமம் என்ற நூல் பாடப்பட்டது. இதில் வேதாகமக்கருத்துக்கள் நிறைந்துவிளங்குகின்றன.

மனிதரைத் தலைமுதல் பாதம் ஈறாகவும் தேவரைப் பாதம் முதல் சிரசு ஈறாகவும் வர்ணித்தல் வேண்டும் என்ற மரபுக்கு மாறாகப் பராசக்தியின் வர்ணனை, சிரசு முதலாகக் காணப்படுகின்றது. சித் என்னும் அக்நி குண்டத்தில் தேவி தோற்றமளிக்கும்பொழுது ஞானிகள் கண்ட காட்சி படிப்படியாக முறைப்படுத்தி விளக்கியிருக்கின்றது. இதனைப் பக்தியுடன் பாரயணம் செய்யும் பொழுது இந்த அனுபவக்காட்சியைப் பக்தர்கள் காண்பார்கள்.

ஆகவே, உலக மாதாவாகிய இராஜராஜேஸ்வரியை வழிபட்டு இம்மையிலே சகலபோக பாக்கியங்களுடன் வாழ்ந்து மறுமையிலே பேரின்ப வாழ்வைப் பெற்றுய்வோமாக.

[‘அன்னை லலிதாம்பிகை அருட் பேராயிரம் (லலிதாசஹஸ்ர நாமம்’ மொழி பெயர்ப்பு) என்ற நூலுக்கு அளித்த சிறப்புப் பாயிர அநுவாதம் சாஸ்திரிகளின் அநுமதியோடு வெளியிடப்படுகின்றது.[

## மலர்க் கழல்கள்

செய்யதிரு மேனிஒரு பாதிகரி தாகத் தெய்வமுதல் நாயகனை எய்த சிலைமாரன்
கையின்மலர் பாதமலர் மீளுமணு காமல் கன்னிதன் மலர்க்கழல்கள் சென்னிமிசை வைப்பாம்.

— கலிங்கத்துப் பரணி

கந்த வனத்தது பாட்டு
கனியுறு தேன்சுவைக் கூட்டு
சிந்தையை அவற்றிடை நாட்டு
தெளிவுறு, மடைமையை ஓட்டு.

# கொஞ்சிநெஞ் சணைக்கின்ற தாய்

கவிஞர் வி. கந்தவனம், பி. ஏ.

அறியாத ஊருக்கும் அணுகாத பேருக்கும்
அன்னையே காப்பாயென
　　அன்புடன் கேளாது மழுதுநின் றேத்தாது
　　மலைகின்ற யாவருக்கும்
குறையேது மில்லாது நிறைவாக வருள்செய்து
கூடிநின் றாள்கின்றதாய்
　　கூப்பிட்ட குரலுக்கு முதலோடி வந்தெம்மைக்
　　கொஞ்சிநெஞ் சணைக்கின்ற தாய்
அறிவாளர் கலைவாணர் அரிதான பெருவீரர்
அமைகின்ற அழகார்பதி
　　அறமோங்கு தொல்பதி நாயன்மார் கட்டிலே
　　அற்புதம் பலகாட்டவே
செறிவாக அடியார்கள் புடைசூழத் திகழ்கின்ற
திரிலோக திரிசுந்தரி
　　ஸ்ரீராச ராசேசு வரிபேய்ச்சி யம்பாளைத்
　　தினம் போற்று மடநெஞ்சமே.

---

## முத்தந் தருக

உருகியுருகி நெக்கு நெக்கு ளுடைந்து கசிந்திட் டசும்பூறு
　　முழுவ லனபிற் பழவடியா ருள்ளத் தடத்தி லூற்றெடுத்துப்
பெருகு பரமா னந்த வெள்ளப் பெருக்கே சிறியேம் பெற்றபெரும்
　　பேறே யூறு நறைகூந்தற் பிடியே கொடிநுண் ணுசுப்பொசிய
வருகுங் குமக்குன் றிரண்டேந்து மலர்ப்பூங் கொம்பே தீங்குழலின்
　　மதுரங் கனிந்த பசுங்குதலை மழலை யரும்பிச் சேதாம்பன்
முருகு விரியுஞ் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே
　　முக்கட் சுடர்க்கு விருந்திடுமும் முலையாய் முத்தந் தருகவே.

— குமரகுருபரசுவாமிகள்

நாயன்மார் கட்டிலகும் நங்கை மகேஸ்வரியார்
ஆயன் சகோதரியை அன்பாகத் — தோயும்
உளத்தெழுந்த பத்தியினுல் உள்ளினரே நல்ல
வளத்தமிழில் வாழியிசை வான்.

# தேவியே நின்னருளைத் தா

**வித்துவான் திருவாட்டி மகேஸ்வரி இராசேந்திரம்**
*( ஆசிரியை, செங்குந்த இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம். )*

ஆவின் வினையகற்றி ஆதி பரம்பொருளைத்
தாவி அடையத் தவிக்கின்றேன் — பாவியேன்
பாவினுற் பாடிப் பரவிநின் றேத்துதற்குத்
தேவியே நின்னருளைத் தா. 1

சீலப் பெருமகளே செம்மணியின் நாயகியே
ஞாலத்தே உன்னையலால் நான்வேண்டேன் — வேலொத்த
நின்விழியின் நோக்கும் நினதருளும் நல்லறமும்
பன்னரிய மாதவமுந் தா 2

பித்தனே டாடியே பேய்ச்சி எனப்போற்றும்
வித்தகியே நின்னருளை வேண்டினேன் — மெத்தவே
செம்மணியாம் நின்பதியிற் செல்வந் தழைத்தோங்க
அம்மணிநீ ஆக்கம் அருள். 3

மூலப் பழம்பொருளே மூத்தோனின் நாயகியே
ஞாலத்தின் தாயேயெம் நர்த்தகியே! — காலமெலாம்
தண்ணளிமிக் கோங்கித் தருமம் நிலைபெறவே
வண்ணமலர்த் தாளிணையைத் தா. 4

---

### அமர்ந்திருக்கும் அன்னை

ஈசனருள் இச்சையறி வியற்றல் இன்பம்
இலயமோடு போகமதி காரம் ஆகித்
தேசருவம் அருவுருவம் உருவம் ஆகித்
தேவியொடு தேசமொடு செல்வம் ஆகிப்
பேசரிய உயிரையெலாம் பெற்று நோக்கிப்
பெரும்போகம் அவையளித்துப் பிறப்பு மாற்றி
ஆசகலும் அடியருளத் தப்பன் தன்னே
டமர்ந்திருக்கும் அன்னையடி சென்னி வைப்பாம்.

— சிவஞானசித்தியார்

பன்னரிய வேதங்கள் சிவாக மங்கள் பகர்தமிழின் ஆங்கிலத்தின் பலவாம் நூல்கள்
தொன்மைபெறு நெறிமுறைகள் வீதிகள் யாவும் துகளறவே கற்றுயர்ந்த தூய்மை யாளர்
வன்னமுற விஞ்ஞான முறைகள் காட்டி வாதிட்டிங் குண்மையினை வகுக்க வல்லார்
பொன்னனையர் பாலசுந்தரக் குருக்கள் கோயிற் புகழ்க்குடத்து முழுக்காட்டைப் புகல்வர் கேளீர்

# கும்பாபிஷேக தத்துவங்கள்

பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் பி. ஏ. (சிறப்பு)

கும்பாபிஷேகத்தைப் பற்றியும் அதன் தத்துவத்தைப் பற்றியும் எழுதப்புகுமுன் சைவாலயங்களைப் பற்றியும், அவற்றின் அமைப்பைப் பற்றியும், அவற்றில் நிகழும் நித்திய நைமித்தியங்களைப் பற்றியும், அவை சைவமக்களின் நித்திய வாழ்க்கையுடன் பிரிப்பின்றி வேறறக் கலந்து நிற்கும் தகைமையினையும் ஒரு சிறிது விளக்கிறுற்றுன் எடுத்துக் கொண்ட விஷயம் படிப்போர்க்குப் பயனளித்தல் கூடுமாதலின் சில வசனங்கள் முன்னுரையாகக் கூறுதும்.

இன்று நாம் அறிந்த சமயங்களுள், சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டும், வேத சிவாகமங்களைப் பதிவாக்கென விசுவசித்து மொழுகும் சமயம் சைவ சமயமொன்றே என்பது ஒருதலை. யோனிவாய்ப்பட்டுத் தோன்றினுர் வழி வந்த ஏனைய மதங்களைப் போலாது, பிறந்த நாட்தொட்டு இறக்கும்வரை, படுக்கைவிட்டெழுந்த நேரந்தொட்டு நித்திரைக்குச் செல்லும்வரை, எம்வாழ்வோடு பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்துள்ள சமயம் சைவ சமயம் ஒன்றே.

இத்தகைய சிவநெறியின்கண் விளங்கும் பல்வேறு சிறப்பியல்புகளுள் எம் திருக்கோயிலமைப்பும், திருக்கோயில் வழிபாடும் மிகமிக விசேடமானவை. ஒரு சிறிது விளக்கின் சைவ சமயத் திருக்கோயிலமைப்பு ஏனையமதத் தேவாலயங்களினின்று முற்றிலும் வேறுபாடுடையது. எம்மாலயங்களில் நடக்கும் அபிஷேகம், ஆராதனைகள் என்றித் தொடக்கத்தனவெல்லாம் ஏனையோர்க்குப் புதியவாம். எம்திருக்கோயிலின்கணுள்ள மடைப்பள்ளி, திருப்பள்ளியறை போல்பவை வேற்றுச் சமயத்தவர்க்குச் சிந்தனைக்கும் அப்பாற்பட்டவை. சைவாலய வழிபாடு கூடுதல் தனித்தும் (mainly individual) சிறுபான்மை கூட்டாகவும் (congregational) செய்யப்படுவதாம். எம்சிவநெறியின்கண் விதந்தோதப்படும் விரதம், நோன்பு, ஜபம், அர்ச்சனை முதலியனயாவும் எமக்கே தனி. பிரதிஷ்டை, மஹோற்ஸவம், பிராயச்சித்தம் என்பவற்றைப்பற்றிக் கூறவேண்டியதில்லை.

**ஆலயம் : அதன் தத்துவம்:**

யாம் முற்கூறியவாறு தனிச் சிறப்புடைய எம் திருக்கோவில்களே, ஆலயம் என்னும் சொல்லுக்குப் பொருத்தமானவை. ஆன்மாக்களிலயப்படும் இடமே ஆ - லயம் எனப்படும். சர்வவியாபியாகிய இறைவன் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு எழுந்தருளியிருக்கும் இடம் குரு-லிங்க - சங்கமம் என்னும் மூன்றுமாம். அவற்றுள்ளும் ஆலயங்களிலேயே எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்களால் விதிப்படி பிரதிட்டை செய்யப்பட்டு எழுந்தருளியிருக்கின்றுன்.

ஆலயத்தின் பரியாய நாமங்களுள், தேவகிருகம், தேவாலயம், தேவகுலம், தேவாயதனம், க்ஷேத்திரம், சைத்யம், கோவில் என்பன சில. இவை இறைவன் இல்லம். இறைவன் கோட்டம், இறைவன் உறையுள் என்றெல்லாம் பொதுவாகப் பொருள்படும். "பிராஸாதம்" என்னும் சொல் 'சில்பரத்தினம்" என்னும் நூலின்படி திருக்கோவிலைக் குறிக்க எழுந்த அழகிய சொல்லாம். தேவர்களதும் மக்களதும் உள்ளங் கவர்ந்து மகிழ்ச்சியூட்டுவதனுல் இப்பெயர்த்தாயிற்று. அரசர்களும் தெய்வங்களும் வதியும் இடம் பிராஸாதம் என நிகண்டு கூறும்.

"விமானம்" என்னும் சொல்லே ஆதியில் ஆலயத்தைக் குறிக்க எழுந்தது. இன்று அது கருவறையின் மேலுள்ள சிகரத்தையே குறிக்கின்றது. இது சிறந்த தத்துவக் கருத்துக்களைத் தன்னுளடக்கியது. அமரகோசம் என்னும் வடமொழி நிகண்டு நூல் தேவர்களது ஊர்திவிமானம் என்று கூறும். புஷ்பகவிமானம் எடுத்துக்காட்டாகும். தேரின் அம்சங்களைக் கொண்டு விமானம் அமைந்திருக்கின்றது என்பதே இந்திய சிற்ப நூல்கள் கூறும் உண்மையாம்.

இச்சொல் "மா" (அள) என்னும் வினை அடியாகப்பிறந்து 'வி' என்னும் உபஸர்க்கத்துடன் கூடி "விசேடமான அளவு" என்னும் பொருள்பட நின்றது. பெருமைக்கும், நுண்மைக்கும், பேரருட்கும், பேற்றினருமைக்கும் ஒப்பின்மையுடையவ

னும், முற்றறிவுடையவனுமாகிய கடவுள் தன்னைச் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய ஆன்மாக்கள் ஓரளவு அளவிட்டறிய வேண்டும் என்னும் பெருங் கருணையினலே ஆலயநிர்மாணத்தை ஆகமங்களில் விதித்தான். ஆலய அமைப்பின் ஒவ்வோரம்சமும் அவனது இயல்புகளை உணர்த்தி நிற்கும். இவ்வுண்மையை உன்னுந்தோறும் அவனது கருணையை நினைத்து ஆனந்த பாஷ்பம் சொரியும்.

## ஆலய அமைப்பின் நோக்கம்:

இறைவன் சர்வவியாபி. அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பரம்பொருளாகச் சரம், அசரம் ஆகிய எல்லாப் பொருளிலும் பிரிப்பின்றி நிற்கும் பொருளுக்குத் திருக்கோயில் அமைத்தல் சாலுமா எனச் சிலர் வினவலாம். இறைவனை நாற்புறமும் சுவரெழுப்பிக் குறுகிய பரப்பினதாகக் கோவில் சமைத்து அதனுள் அடக்கலாமா? சிறு எல்லைக் குட்பட்ட கோவிலையே அவன் உறைவிடமாகக் கொள்வது எத்துணைப் பொருத்தம்? ஐந்து இருத்தல் நிறையுள்ள சுவாமிக்கு ஐந்து தொன நிறையுள்ள தேர் எதற்கு? என்றெல்லாம் வினக்கள் எழும் காலம் இது. இவ்வினக்களுக்குப் பல ஞானிகள் பலவாறு விளக்கம் கொடுத்துள்ளனர். இறைவன் திருவருள் எங்கும் வியாபித்துள்ளது. எனினும் அதனைப் பெறுவதற்கு முக்காலம் உணர்ந்த ஞானிகள் பல முறைகளைக் கையாண்டுள்ளனர். அதனைத் தெய்வத்தன்மை பொருந்திய விருட்சங்களிலும், மலைகளிலும், நீர்நிலைகளிலும், மூர்த்திகளிலும், இடங்களிலும், பக்தர் பெறமுடியும்.

"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொழுபவர்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்றும் தாயுமான சுவாமிகள் கூறியுள்ளார்.

எங்கும் வியாபித்திருக்கும் இறைவன் திருவருளைத் திருக்கோயிலிலே மந்திரபூர்வமாகப் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் உருவத்திருமேனிகள் மூலமே பெறலாம் என்பதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கங்களுள் ஒன்று பின்வருமாறு.

பசுவினது உடம்பெங்கணும் குருதி பரந்தோடுகின்றது. அது சூல்கொண்டு கன்றை ஈன்றதும் அக் குருதி பக்குவமடைந்து பாலாகப்பரிணமிக்கின்றது. அப்பால்தானும் அதனுடைய எல்லா உறுப்புக்களிலிருந்தும் பெற முடியாது. பாலைப் பெறுதற்குரிய அதன் முக்கிய உறுப்புக்கள் முலைகளே. அங்ஙனமே பசுவாகிய உலகமெங்கணும் பரந்து விளங்கும் இறைவனது கருணையாகிய பாலைச் சுரப்பதற்கு உருவத் திருமேனிகொண்டு எழுந்தருளியுள்ள முக்கியஸ்தானம் திருக்கோயிலேயாகும். எனவே திருக்கோயில் நாட்டின் முக்கிய உறுப்பாகும். இதனலன்றோ ஆலயங்களை ஊர் நாப்பண் கொண்டு நகர் நிர்மாணம் செய்யுமாறு ஆகமங்கள் நுவலுகின்றன.

இவ்வுண்மையை இக்கால விஞ்ஞானரீதியிலும் விளக்கலாம். உலகெங்கணும் பரந்திருக்கும் ஒளிக்கதிர்களை நாம் எவ்விடத்தும் இலகுவில் பெற முடியாது. மின்துறையிற் கைதேர்ந்த விஞ்ஞானிகளாற் கட்டப்பட்ட மண்டபங்களிலே முறைப்படி தாபிக்கப்பட்ட எந்திரங்களிலிருந்து உற்பத்தியாகி வரையறுக்கப்பட்ட மின்சக்தியைப் பரப்பும் மின்விளக்குகள் மூலமே நாம் ஒளியைப் பெற முடியும். இங்ஙனமே உலகம் முழுவதும் வியாபித்துள்ள ஒலிக்கதிர்களைப் பெறுவதற்கும் அவ்வச்சக்தியுடைய பொறிகளின் உதவியையே நாடுகிறோம். மின் நிலையத்தின் உதவியின்றி ஒளி பெறவும், ஒலிக்கருவியின்றிச் செய்தியறியவும் முடியுமேல் ஆலயமின்றி ஆண்டவனருளைப் பெறுதலும் சாலும் என்க.

## ஆலய அமைப்பு :

சைவாலயங்கள் புருஷ ரூபத்தில் அமைந்தமை விசேடதத்துவம் வாய்ந்தது. ஏனைய மதத்தவரின் தேவாலயங்கள் அவரவர் வணக்க முறைக்கியைய மண்டபங்களாக அமைந்தவை. ஆனல் காயமே கோயிலாகக் கண்ட சநாதநமக்களின் கோயில்களிலோ ஒரு மனிதன் படுத்திருக்கும் பாங்கில் அமைந்தவையாகக் காணப்படும். வணக்கத்திற்கும், ஆன்ம ஈடேற்றத்துக்கும் உரியனவாகிய சைவாலயங்களின் இத்தகைய அமைப்பே சிவநெறியின் தனித்துவத்தைக் காட்டும். மேலும் தென்னுடைய சிவனும் எந்நாட்டவர்க்கும் இறைவனுமாகிய எம்பிரானுக்குத் தென்னுட்டிலும் இலங்கையிலுமே கலைகளுக்கு நிலைக்களனுக விளங்கும் திருக்கோயில்கள் எழுந்தமை அற்புதம்! அற்புதம்!! அுமட்டோ! சங்கீதம், நாட்டியம முதலிய கலைகள வளர்ச்சியுற்ற திருக்கோயில்களில் நுண்கலைகளுட் தலையாய கட்டடக் கலையும், சிற்பக்கலையும், ஓவியக்கலையும், சிறந்தோங்கியமை பாரதக்கலைகளின் பெருமையையே குன்றின்மேலிட்ட விளக்கெனக் காட்டும்.

## கும்பாபிஷேகம் :

கும்பாபிஷேகம், குடமுழுக்கு, பிரதிட்டை என்பன ஒரு பொருட் கிளவிகள். மேற்கூறியவாறு அருவுருவாகிய இலிங்கத்தையோ, உருவத்திருமேனியாகிய மூர்த்தியையோ பிரதிட்டை செய்வதற்குக் கர்ப்பக்கிருகம் (கருவறை) அர்த்த மண்டபம் என்னும் இரு மண்டபங்களும் பூர்த்தியாதல் வேண்டும். இவ்விரு மண்டபங்களும் நிறைவுறுவிடின் மூர்த்தியை ஸ்தாபித்தலோ, கும்பாபிஷேகம் செய்தலோ முடியாததாம்.

**பிரதிட்டையின் தத்துவம் :**

பிரதிட்டையாவது யாது? பிரதிட்டைக்குரியது எது? பிரதிட்டையின் தத்துவம் என்ன? என்பவை மேலெழுங் கேள்விகளாகும். பிரதிட்டை என்ருல் "ப்ர - திட்டை" எனப்பிரிந்து விசேடமான நிலை நிறுத்தல் எனப் பொருள்படும். அதாவது மந்திரம், தந்திரம், கிரியை, பாவனை என்பவற்றில் வல்லவராய் விதிப்படி ஆசாரியத்துவம் பெற்றவராயுள்ள சிவாசாரியர் லிங்கத்தையோ அன்றேல், பொன் முதலிய லோகங்களினுலோ, அல்லது கல், மரம், சுதை என்பவற்றினுலோ, செய்யப்பட்ட மூர்த்தியை விதிப்படி தாபித்தலாம். இதன் உண்மையைச் சிறிது நோக்குவாம்-

"பிரும் ஹண ஆகாச: ஸம்பூத:
ஆகாயாத் வாயு:
வரயோ ரக்நி:
அக்நே ராப:
அத்ப்ய: பிருதுவி |

என்பது தைத்திரீய உபநிடதம். அதாவது பிரமத்திலிருந்து ஆகாசம் தோற்றியது. ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்கினியும், அக்கினியிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து பிருதுவியும் முறையே தோன்றின என்பதாம்.

சைவசித்தாந்த கலாநிதியாகிய மணிவாசகப் பெருந்தகையாரும் "போற்றித் திருவகவலிலே"

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்ருய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்ருய் விளைந்தாய் போற்றி"

எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

அன்பின் மூலத்திலிருந்து வான்தொடங்கி மண்வரையும் இழிந்து அவ்வவற்றின் தன்மைகளாவன் எம்மிறைவன். நாற்றமும், சுவையும், ஒளியும், ஊறும், ஓசையும், என்னும் ஐந்து தன்மைகளும் உடையவன். அத்தன்மைகள் முறையே மண்ணுக்கும், நீருக்கும், நெருப்புக்கும், காற்றுக்கும், வானுக்கும் உரியவை எனச் சிறப்புப்பற்றிக் கூறப்படும். அங்ஙனமேனும், மண்ணில் அவ்வைந்து தன்மைகளும், நீரில் நாற்றம் ஒழிந்த ஏனைய நான்கு தன்மைகளும், தீயில் நாற்றம் சுவை ஒழிந்த மூன்று தன்மைகளும், காற்றில் நாற்றமும் சுவையும் ஒளியும் ஒழிந்த ஏனையிரண்டு தன்மைகளும், வானில் நாற்றமும், சுவையும், ஒளியும், ஊறும் ஒழிந்த ஒரேயொரு தன்மையும் உளவென்க. இவற்றின் விளக்கத்தைப் பண்டிதமணி பாரதியாரின் திருவாசக ஆராய்ச்சிப் பேருரையுட் கண்டு தெளிக. விரிக்கிற்பெருகும்.

**கும்பாபிஷேகக் கிரியைகள் :**

கும்பாபிஷேகத்தின்போது இடம்பெறுங் கிரியைகளை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை பூர்வாங்கக் கிரியைகள், விசேடக் கிரியைகள் என்பன. பூர்வாங்கக் கிரியைகளுள்ளே இறைவனுக்குச் செய்யும் விவாகாதி சுபகருமங்களிலே இடம்பெறுங் கிரியைகளும், சங்காபிஷேகம், மஹோத்ஸவம் என்பவற்றிலே இடம்பெறும கிரியைகளும் அடங்கும். அவைதாம் அநுஜ்ஞை. கிராமசாந்தி வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரகணம் (மண் எடுத்தல்) அங்குரார்ப்பணம் (முளையிடுதல்) இரக்ஷாபந்தனம், கடத்தாபனம். யாகபூஜை முதலாயின. பிரதிட்டைக்குரிய விசேடமான கிரியைகள். மூர்த்தி, ஸ்தூபி என்பவற்றைப் பிரதிட்டை செய்தல், திரிகண்ட நியாஸம், ஸ்பரிசாகுதி, அஷ்டபந்தனம் செய்தல் என்பனவாம்.

**யாக பூசை :**

சம்புரோக்ஷணப் பிரதிட்டையின்போது மூர்த்தியிலிருந்து ஆகர்ஷிக்கப்பட்ட கலைகளோடு கூடிய கடத்தை வேதிகையின் மீது வைத்ததும் யாகபூசை தொடங்கும். கண் முதற் புலனுற் காட்சியுமில்லோனுய் விளங்கும் இறைவனை விக்கிரகத்தில் வெளிப்பட வைத்தற்காகச் செய்யும் கிரியையே கும்பாபிஷேகக் கிரியையாம். பஞ்சபூதமயமான இறைவனைப் பஞ்சபூதங்களின மூலமாகவே சாந்நித்தியமடையச் செய்வதே கும்பாபிஷேகம் காட்டும் தத்துவப் பொருளாகும். எங்ஙனமெனில்,

ஆகாச வெளியில் அமைவது யாகசாலை. அங்கு உச்சாரணம் செய்யப்படும் மந்திரங்கள் வாயுதத்துவத்தைக் குறிப்பன. இவ்வாயு அங்கு ஓம குண்டங்களில் வளர்க்கப்படும் தேயுவுடன் (அக்கினி) சேர்ந்து வேலை செய்கின்றன. சிதாகாசமானதும் சிவஸ்வரூபமானதுமான யாகசாலையில் சிவமந்திரோச்சாடனமான நாதஒலி சேர்ந்து ஓம குண்டங்களில் சுவாலித்தெரியும அக்கினியானது வேதிகையில் வைக்கப்பட்டிருக்கும் நீர் நிறைக்கப்பட்டிருக்கும் கும்பங்களோடு சந்தானம் செய்யப்படுகின்றது. இங்ஙனம் யாக பூசையின்போது நான்கு பூதங்கள் இணைகின்றன. பின்னர் நாலீ சந்தானம் மூலமாகக் கழிவறையில் எழுந்தருளியிருக்கும் சிலாரூபமான - பிருதிவிமயமான மூர்த்தியுடன் இணைக்கப்படுகின்றன. ஆதலின் ஆகாயம் வாயுவுடனும், வாயு அக்கினியுடனும், அக்கினி நீருடனும், நீர், மண்ணுடனும் படிப்படியாகச் சேர்க்கப்படுகின்றன. இங்ஙனம் விண்ணில் காட்சிக்கரியனுயிருந்த இறைவன் மண்ணிற் காட்சிக் கெளியனுய் அடியார்க்கடியனுய் மாற்றப்படும்

நிலையே பிரதிட்டை அல்லது கும்பாபிஷேகம் குறிக்கும் நிகழ்ச்சியாகும்.

**யாகபூசையின் சிறப்பம்சங்கள் :**

யாக பூசையின்போது நிகழும் சிறப்பு நிகழ்ச்சி "சிவோகம்பாவனை" என்னும் ஆத்ம பூசையாகும். இது பூசைகள் யாவற்றினும் இடம்பெறுவதொன்றாயினும் கும்பாபிஷேகக் கிரியையில் மிகமிக முக்கியமானது. சிவாசாரியர்கள் முதலில் இறைவனைப் பூசிக்கும் கையைச் சிவஹஸ்தமாக்கல் வேண்டும். அங்ஙனமாக்கப்பட்ட கையினலே தாம் பூசிக்கவிருக்கும் மூர்த்தியின் மந்திரங்களைத் தம்முடலிலே பதித்துத் தம்மை அம்மூர்த்தியாக்கிக் கொள்ளல் வேண்டும். இங்ஙனம் தங்கள் கையைச் சிவன் கையாக்கி, பின்னர் தம் சரீரத்தைச் சிவசரீரமாக்கல் வேண்டும். இங்ஙனம் சிவஸ்ரூபனை சிவாசாரியர் கும்ப பூசையைத் தொடங்கவேண்டும். இவ்வுண்மை, சைவசித்தாந்தச் செந்நெறியின் பேருண்மையை விளக்குவது. காண்பான், காட்சி, காட்சிப்பொருள் ஆகிய மூன்றும் ஒன்றுவதே பூசனைக்கு இன்றியமையாதது. சண்டேசுவர நாயனர் மனம் மொழி மெய் என்னும் மூனறும் ஒன்றித்த நிலையிலிருந்தமையாலேயே தந்தையார் காலை வெட்டிய பாவம் அவரைச் சாரவில்லை. இவ்வடிப்படையில் நாம் யாகசாலையை நோக்கும்போது வேள்வியும் சிவசொரூபம்; வேள்விச்சாலையும் சிவசொரூபம்; கும்பங்களும் சிவசொரூபம்; சிவாசாரியரும் சிவசொரூபி என்னும் பேருண்மை தெற்றெனப் புலப்படும்.

**பரிசாகுதி செய்தல்**

ஸ்பர்ஸம் என்றல் தொடுதல் என்பது பொருள். ஆகுதி என்றல் ஆவுதி அல்லது ஓமம் செய்தல் என்பது பொருள். எனவே பரிசாகுதி என்றல் கும்பத்தையும் பிம்பத்தையும் தொடுதல்மூலம் ஆவுதி செய்தல் என்பது பொருள். அக்கினி, கும்பம், பிம்பம, என்னும் மூவகையிடத்துமுள்ள மூர்த்தியை நாடிச் சந்தானம் செய்து அதன் வழியாக அக்கினியில் பூர்ணகுதியை "ஸ்வா" என்றும் பிம்பத்தில் 'ஹா' என்று விடுதல் வேண்டும். அவ்வமையம் சிஷ்யன் சாந்திகும்பத்துடனும் ஆசாரியரும் மூர்த்ததிபர்களும் சுருக்கு சுருவம் என்பவற்றுடனும் குண்டத்திலிருந்து பிம்பத்துக்கும், பிம்பத்திலிருந்து கும்பத்துக்கும் செல்லல் வேண்டும். இங்ஙனம் முதல் முறை பிம்பத்தைச் சாந்தி கும்பத்தினல் தெளித்து. அட்ட மூர்த்திகளைப் பூசித்தல் வேண்டும். பின்னர் மூர்த்தியைப் பிரமபாகம், விஷ்ணுபாகம், ருத்ரபாகம் என மூன்ருகப் பிரித்தல் வேண்டும், இங்ஙனம் பிரித்தல் "திரிகண்டநியாசம்" எனப்படும். இங்ஙனம் மூன்ருகப் பிரிக்கப்பட்ட பிரம, விட்டுணு, ருத்ர பாகங்களில் தனித்தனி கலைகளைப் பூசித்துக் குண்டத்தில் "ஸ்வா" என்றும் மூர்த்தியில் எஞ்சிய நெய் கொண்டு 'ஹா' என்றும் பூர்ணகுதி செய்தலே "பரிசாகுதி" எனப்படும.

பரிசாகுதியின்பொழுது பதிக்கப்படும் ஆறு கலைகளும் விசேடக் கருத்துடையவை.

(1) அவற்றுள் நிவிர்த்திகலை மண், பெண், பொன் என்னும் பற்றுக்களிலிருந்து ஆன்மாக்களை நிவிர்த்தி செய்தற்குரியது.

(2) பிரதிட்டாகலை அங்ஙனம் நிவர்த்த செய்யப்பட்ட ஆன்மாக்களை மீளப் பிரபஞ்சத்தை நோக்காவண்ணம் நிலை நிறுத்துவது.

(3) வித்தியாகலை அங்ஙனம் நிறுத்தப்பெற்ற ஆன்மாக்களுக்கு அனுமான ஞானம் ஆத்மஞானமின்றிச் சிவானுபூதி ஞானத்தைப் பயப்பது

(4) அங்ஙனம் சிவானுபூதி ஞானம் பெற்ற ஆன்மாக்களுக்கு விருப்பு வெறுப்பு, சங்கற்பம், என்பனவற்றைச் சாந்தமாக அளிப்பது.

(5) சாந்தியதீதகலை என்பது சாந்தமாய் நின்றதற்கப்பாற் பட்டது.

(6) அத்துவா என்பது வழி. மூவகை ஆன்மாக்களுக்கும் உள்ள மலபந்தத்தை அறுத்துச் சிவஞானத்தை உண்டாக்கி, சர்வஞ்ஞத்துவத்தை விளக்கி ஜனனத்திற் புகாதபடி முத்தியிற் கூட்டும்வழி.

மேலே கூறியவாறு எல்லா மூர்த்திகளுக்கும் பரிசாகுதி செய்தல் வேண்டும். **அம்பாளுக்குப் பரிசாகுதி செய்யும்பொழுது கிரியாசக்திபாகம், ஞானசக்திபாகம், இச்சாசக்திபாகம் என மூன்ருகப் பூசித்தல் வேண்டும்.**

**பரிசாகுதியின் உட்பொருள்**

சிவசக்தியே சிவனுக்குத் தேகமானதாலும் சிவசக்தியைக் கொண்டே சிவபிரான் ஐந்தொழிலாடல் செய்வதாலும் சிவசக்தியைக் கொண்டே சிவவியாபகம் வருவிக்கவேண்டியுளதாலும், அச்சக்தி சொரூபமே நெய்த்தாரையாதலாலும் சுருக்கிலுள்ள நெய்யிலே பாதிநெய்யை அக்கினியிலே ஓமம்செய்து பாதிநெய்யைக் கொண்ட சுருக்கைக் கையிற்றங்கி நாடீசந்தானம் வழியாக அக்கினி கும்பங்களிலுள்ள தேஜசைப் பிம்பத்திலும் சந்தானப்படும்படி பிம்பசமீபம் சென்று சுருக்கிலுள்ள அப்பாதி நெய்யாகிய சிவசக்தியினலே சிவபிம்பத்திலே நெய்யை விட்டு ஒவ்வொரு பாகத்திலும் அந்தச் சிவதேஜசைச் சந்தானப்படுத்துதலாம். அந்தப் பாதிநெய் அங்குமிங்குமாக ஓமம் செய்வதாயிற்று

**சுருக்குச் சுருவமும்**
**அவையுணர்த்தும் பொருளும்**

சுருக்கின் மேற்பாகத்தில் சிவம் உண்டு. கீழ்ப்பாகத்திலே நெய்த்தாரை விழும். சிருக்கின் துவார

முகத்தினின்று விழும் தாரையையே சிவசக்திமயமாக எண்ணிச் சிவசக்தியைத் தேகமாகக்கொண்டு இருக்கின் மேலிருக்கும் சிவனது வியாபாகத்தைத் தீபம் அணையாது இருக்கவே அத்தீபத்திலிருந்து மற்றோர் தீபம் தோற்றுவதுபோல, பிதுரிகண்ட நியாசத்திலே பிரமா விட்டுணு ருத்ரம்ச முடையதுமான பிம்பத்திலே அக்கினி, கும்பம் என்பவற்றிலிருந்து நெய்த்தாரை மயமான தேகத்தைக் கொண்டு சிருக்கின் வழியாலே வருமாறு நெய்யை உகுத்து அந்தப் பிம்பத்திலே சிவனது வியாபாகத்தைத் தாபித்தல். இதுவே பரிசாகுதி.

### காமிகாகமம் கூறும் பொருள்

தனது தண்டத்தையே மத்திம நாடியுடையதாயும், வேத்திரத்தையே இருதயகமலமாக உடையதாயும் கண்டோர்த்துவ பாகத்தையே தாலுரந்திரமாக உடையதாயும் தாரையாக நெய்விழுகின்ற ரந்திரத்தின் மேற்பாகமாகிய முகத்திலே நெய்த்தாரை மயமாகிய சிவசக்தி பதிதலை உடையதாயும் 36 அங்குல நீளமான சிருக்கு முழுவதிலும் சிவபிரானுடைய வியாபாக முள்ளதாயும் நினைத்து, சிருக்கிலே ஒவ்வொருமுறையும் ஒவ்வொரு பாகத்திலும் தத்துவ தத்துவேசுவரரையும், மூர்த்தி மூர்த்தீசுவரையும் பூசைசெய்தலோடு சிருக்கிலே நெய்யை நிறைத்துச் சிவசக்திமயமாகிய நெய்யை அக்கினியிலே பாதி ஓமம்செய்து சிவசக்திமயமாகிய பாதி நெய்யைச் சிவசக்திமயமான தேகமாகிய இருக்கு, சுருவங்களோடு அக்கினி கும்பம் மூலம் சிவசக்திமயமாகிய பிரம விஷ்ணு ருத்திராம்சமுடைய கடவுளைக் கிரகித்து இலிங்கத்திலாவது பிம்பத்திலாவது ஒவ்வொருபாகத்தும் சாந்தி கும்பத்தினால் சுத்தப்படுத்திச் சிவசக்தியாகிய நெய்யை ஒழுக்குதலால் பரிசாகுதி எனப்படும். பிரம விஷ்ணு ருத்திராம்சங்களைச் சிவசக்திமயமாகிய இலிங்கத்திலே அல்லது பிம்பத்திலே சேர்த்தல் ஆகும். இம்மூவர்களையும் இணைத்தல் மூலம் சிவசக்தியால் சிவசாந்நித்தியம் ஏற்படும். இக்கிரியையில் சாந்தி கும்பத்தின் இடம் மிகமிக முக்கியமானது; சகல தோஷங்களையும் நீக்க வல்லது.

### தச தரிசனம்

கும்பாபிஷேகமும் நியாசங்களும் முடிந்தபின்னர் தச தரிசனம் நிகழ்த்தப்படும். அவை பின்வருமாறு:

1. கன்றோடு கூடிய பசு
2. யுக்ம ஆசார்யர்கள்
3. யுக்ம சாமரம்
4. சுமங்கலிப் பிராமணப் பெண்கள்
5. உருத்திரகணிகை
6. பூரணகும்பம்
7. தீபம்
8. கண்ணாடி
9. அரசன் அல்லது தர்மகர்த்தா
10. மகாபக்த ஜனங்கள்

இவைகளைப் பத்துமுறை திரையிட்டுத் தனித்தனி பஞ்சாராத்திரிகம் செய்து தரிசனம் கொடுத்தல் வேண்டும். கும்பாபிஷேகம் முடிந்ததும் அன்றிரவு அல்லது நல்லமுகூர்த்தத்தில் இறைவனுக்குத் திருக்கல்யாணம் நிகழ்த்தப்பெறும். இதுவும் சிறந்த சைவசித்தாந்தக் கருத்துக்களை யுடையது. விரிவஞ்சி விடுத்தாம்.

### முடிவுரை

இதுகாறுங் கூறியவற்றால் எங்கும் எவையும் எரியுறுநீர்போல் ஏகந்தங்கும் பரம்பொருளின் அருளை ஆன்மாக்கள் பெறவேண்டுமானால், அது திருக்கோயிலின்கண் பிரதிட்டை செய்யப்பட்ட மூர்த்திகளின் மூலமே பெறுதல் சாலும் எனவும், அவற்றை இறைவனே ஆகமங்களில் விதித்துள்ளான் எனவும் கண்டோம். சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய மக்கள் அநாதிமுத்த சித்தனை வணங்கி உய்திபெறுதற்குரிய வழிகளைச் சிவாகமங்களிலே விதித்துள்ளான்.

இச்சிவாகமங்கள் அறிவுக்கருவூலங்கள். இறைவன் மக்கள் உடநலம் பேணும முறைகளையும், ஆன்மநலம் பேணும் கிரியைகளையும் பிரதியுபகாரங் கருதாது திருவாய்மலர்ந்துள்ளான். கும்பாபிஷேகத்துக்குரியனவாக விதிக்கப்பட்ட திரவியங்களும் ஏனைய பொருள்களும் சிறந்த நன்மை பயப்பன. இவை ஆயுர்வேதம், விஞ்ஞானம், முதலிய கலைகளைத் தம்மகத்தே கொண்டுள்ளமை பெருவியப்பளிக்கின்றது. உதாரணமாக, பஞ்சகவ்வியத்தின் மகத்துவததைப்பற்றி மேனாட்டு ஜேர்மன் உருஷிய விஞ்ஞானிகள் இன்றும் தம் ஆராய்ச்சியை நிகழ்த்தியவண்ணமுள்ளனர். யாகசாலையிலே ஓமகுண்டங்களிலே இடப்படும் நெய், ஹவிஸ் முதலிய வற்றின் மூலம் மழைமுகில்கள் ஆகர்ஷிக்கப்படுகின்றன என ஜேர்மன் விஞ்ஞானி கூறிய மையை எம்மவர் நோக்கின் எம் சைவாலயக் கிரியைகளின் உண்மை ஓரளவு புலனாகும். மேலும் கும்பத்துக்குமேல் வைக்கப்படும் மாவிலை தருப்பை என்பனவும் விஞ்ஞான ரீதியில் அதிசயிக்கத்தக்க பலன்களையுடையவை என்பது ஆராயின் விளங்கும்.

இன்னோரன்ன சிறப்புக்களையுடைய எம் ஆகமக் கிரியைகளைச் சைவமக்கள் பயபக்தியோடு பேணி இறைவனருளுக்குப் பாத்திரமாவாராக.

சுபம்

சிவசம்பு கவிதை வல்லார் செந்தமிழ்ப் பயிற்சி மிக்கார்
பவமுறும் வழியை மாற்றும் பரையிவள் கதையை நூறு
நவமுறு பாடலாலே நாட்டிடும் வேட்கை மிக்கார்
சுவையுற அன்னார் தந்த சுந்தரக் கவிதை காண்போம்.

# ஸ்ரீ இராஜராஜேசுவரி இரசனை

நாயன்மார்கட்டு, வெ. சிவசம்பு

சின்னஞ் சிறுவய திற்பள்ளி கொள்ளுஞ் சிலாக்கியத்தால்
முன்னந் தவறி முழுமூட னாகியம் முற்பவத்தில்
மன்னும் ஒருசிறு மின்னுங் கொடைத்திறன் மீதுறலால்
என்னம் பிகைபதம் போற்ற வொருதிறம் எய்தினனே. 1.

வற்றாத அன்பு வழுவாத நோன்பு வரன்முறைகள்
முற்றா யியம்பு முதுநூ றெரிந்தா ளெனைப்பயந்த
நற்றாய் நவின்ற நயமோர்ந் துனக்கு ரசனைசொல்லல்
கற்றே யிலாத கசடர்க் குறுத்தல் கருத்திலதே. 2.

கொட்டில் தனில்மண் சுவர்கொண்ட மேடை தனிலமர்ந்து
மட்டில் அருள்தந்த மாதினைத் தைப்பொங்கல் பங்குனியார்
முட்டிய சித்திரைப் பூரணை யாந்தினம் கிட்டிநின்று
பட்டியல் பானகம் நீர்மோர் பருக்கப் பயிற்றுவரே. 3.

தாமோ தரிப்பெயர் கொண்டவர் தம்மாற் சமைத்து வைத்த
தாமோ எனச்சிலர் கேட்டு மயல்கொளத் தன்னேரிலாத்
தாமோ தரற்கவ் வழியினிற் போந்த துரவடிவேல்
தாமோர் தனிவணக் கஞ்செயத் தந்த தயைவடிவே. 4.

புற்றிற் கிடந்து புதுமைகள் செய்த புனிதவதிக்
கற்றைப் பொழுதொரு கற்கோயில் கொள்வா ரிலரெனினும்
பற்றிற் குறையுள தோவெனப் பாரோர் பலர்பகர
ஒற்றைப் பிறைநுதற் கண்கொண்டு காத்தா ளுளமிதுவே. 5.

மண்ணிற் புதைந்திருந் தண்ணித் தவர்க்கருள் மாரிபெய்த
ஒண்ணித் திலமின்றும் ஓங்கார மாகி ஒளிவிளக்கப்
பண்ணித் தரப்பணித் தாள்திரு ஞானசம் பந்தனுக்கே
எண்ணிற் றவமுடை யார்க்கே தவமெனும் மாமறையே. 6.

மதிசே கரன்வெயி லுகந்த வனகாட் டரசடியான்
பதிபே சரும்சித்தி விநாயகன் பாங்கா யமையவருட்
கதிசே ரடியவர்க் காக்க விநாயகன் காணிபுக்கோய்
நிதியோ படைத்திலம் நின்றா ளருச்சனை நேர்வதற்கே. 7.

குடிசைப் பதிவிட்ட கூனற் கிழவி குடிவிளங்க
முடியுற் றிடுமா லயமாக் குவித்த முதுகிழவி
அடியுற் றழுகும் அடியா ரிதயாம் பரத்துணின்று
படியுற் றிடுமொரு பக்குவஞ் செய்தாள் பரமுறவே. 8.

பித்தா வெனப்பேசி வைத்தார்க் கிரங்கிய பேரறிவன்
முத்தா யொளிர்கின்ற மூதாட்டி எங்கள் முழுமுதலாள்
செத்தா ரெலும்பணி வான்திறம் நாடிநற் செம்மணியி
லுற்றா ளிவட்குறும் பேய்ச்சி யுலகீ ருளங்கொளுமே. 9.

பெற்றார் தமக்குள மைந்தர்க் கிருபெயர் பேசுமியல்
மற்றோர் மகுடத்த மாதெம் மணியிரா சேசுவரி
கற்றோர்க் கொருபெயர் மற்றோர்க் கொருபெயர் காட்டினளாய்
உற்றா ளெனலிதி லுண்மையுண் டோவென் றுணருதிரே. 10.

---

### கவுணியர்க்குப் பால்சுரந்த கலசம்

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
யுத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பி ராட்டி
அரும்பிள நகைபோற்றி யாரணநூ
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி.

— திருவிளையாடற்புராணம்

### அன்றும் பிறந்தவளே

நின்று மிருந்துஞ் சிடந்து நடந்து நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையின்
ஒன்றும் அரும்பொருளே யருளே யுமையே யிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே.

— அபிராமியந்தாதி

ஈழத்தின் இலக்கியமே உயிர்மூச்சாய் இன்றளவும் எடுத்துக் காட்டி
ஆழத்தே மறந்துமவை மறைபட்டும் போயினதை ஆற்று ராகி
வாழத்தான் அவைபற்றி வகைவகையாய்க் கட்டுரைகள் வரைந்தே யிந்த
ஈழத்தின் இரசிகமணி 'அபிராமி அந்தாதி' எடுத்துச் சொல்வார்.

# அருளாளர் வாய்தவறினர் -- அந்தாதி ஒன்று பிறந்தது

இரசிகமணி. **கனக.** செந்திநாதன்

**அரசர் கேள்வியும்
அபிராமிப்பட்டர் பதிலும்**

கதை ஒன்று சொல்லப்போகிறேன். சிறுகதையும்நாவலும் வாசித்து அலுத்த நீங்கள் இங்கேயும் கதையா? என்று எண்ணி அலட்சியப்படுதத வேண்டாம். இது புனை கதையன்று. பொய்யான கதையும் அன்று. உண்மையான கதை. உள்ள முருக்கும் அருளாளர் கதை.

சோழ நாட்டிலே காவிரியின் தென்கரையிலே உள்ள திருத்தலம் திருக்கடவூர். பிரமதேவர் தவஞ் செய்து பேறு பெற்றதும், மார்க்கண்டேயர் அருந்தவஞ் செய்து இயமனை வென்றதும் இத்தலத்திலேயாம். நாயன்மார் மூவரதும் பாடல் பெற்ற சிறப்பு இதற்குண்டு.

இத்தலத்திலே இருநூற்றைமபது ஆண்டுகளுக்கு முன்னே ஓர் அதிசய சம்பவம் நடந்தது. இங்கு எழுந்தருளியிருக்கும் அபிராமி அம்மையின் திருவருளால் சந்திரனே தெரியாத அமாவாசை நாளிலே பூரணசந்திரன் வானிலே அழகாகப் பிரகாசித்தான்.

ஆம். ஓரன்பர் அப்படிப் பிரகாசிக்கவேண்டும் என்று அம்மையைப் பிரார்த்தித்தார். உள்ளமுருக வேண்டினர். அந்தாதி பாடித் தொழுதார்.

அவர் பெயர் அபிராமிப்பட்டர். திருக்கடவூர் அபிராமி அம்மைமீது நீங்காத பக்தியுடையவர். அம்மையின் திருக்கோலத்தை மனத்தினுள் தரிசித்தபடியே நெடுநேரம் தம்வசமிழந்து தியானத்திலிருப்பவர். அவரைப் பேயர், பித்தரென அவ்வூரார் அழைத்தனர். அவர் அச்சொற்களைப் பொருட்படுத்தவில்லை. அம்மையின் திருவடித் தாமரையே தஞ்சமென வாழ்ந்தார்.

அன்று புனிதமான, தையாத அமாவாசைத் திருநாள். அத்திருநாளிலே தஞ்சையை ஆண்ட சரபோஜி மகாராசா திருக்கடவூர் அபிராமியைத் தரிசிக்க வரப்போகிறார் என்று அறிந்ததும் ஊரே திமிலோகப்பட்டது. எங்கும் பூரண கும்பங்கள். எல்லா இடமும் மகர தோரணங்கள். சனங்களின் உற்சாகம் கரை புரண்டோடியது.

ஒரே ஒரு மனிதர் மாத்திரம் இந்த அமளி துமளிக்குள் அகப்படாமல் அம்பிகையின் சன்னிதானத்திலே அமைதியாக அவள் திருவடித் தாமரையைத் தரிசித்த வண்ணம் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அவர் அபிராமிப்பட்டர்.

சரபோஜி மன்னர் அபிராமி அம்மையின் ஆலயத்துக்குத் தம் பரிவாரங்களுடன் வருகை தந்தார். ஆலய மரியாதைகளுடன் மக்கள் அவருக்கு மகத்தான வரவேற்பு அளித்தனர். மக்கள் ஆரவாரத்துக்கிடையிலும் அசையா மனவுறுதியுடன் அம்பிகையைத் தியானித்த வண்ணம் அமர்ந்திருந்தார் அபிராமிப்பட்டர். அவரைக் கண்டு அரசரே அதிசயித்து, யாரிவர்? என்று பக்கத்தில் உள்ளவர்களிடம் கேட்டார்.

'யாரோ ஒரு பைத்தியம்' என்றனர் சிலர் அலட்சியமாக.

அவரது முகவிலாசத்தின் அருளொளியைக் கண்டு ஐயுற்ற மன்னர், அவர்கள் சொல்லை நம்பாது கிட்டச் சென்று அபிராமிப்பட்டரின் தோளைத் தொட்டார். அம்மையின் திருமுக விலாசத்திலே தம்வயமிழந்து ஈடுபட்டு நின்ற பட்டர் மெல்லக் கண்களைத் திறந்தார். எதையாவது அவரிடம் கேட்க வேண்டும் என்று எண்ணிய மன்னர், "இன்று என்ன திதி?" என்று தெரியாதவர் போலக் கேட்டார். அம்மையின் திருமுகப் பேரொளியில் திளைத்திருந்த அபிராமிப்பட்டர் இன்று "பூரணைத் திதி" என்று நிதானந் தவறி விடை கூறினர்.

அரசர் இவருக்குப் பைத்தியமே என்று நிச்சயித்து விட்டார். அயலில் நின்றவர்கள் 'கொல்' என்று சிரித்துவிட்டனர்.

**அந்தாதி தோன்றியது.**

சனங்கள் சிரித்ததன் காரணம் பட்டருக்குச் சிறிது நேரம் சென்ற பின்தான் விளங்கியது. மன்னரின் வினவுக்குத்தான் சொன்ன விடை தவறானது என்பதை அவர் உணர்ந்தார். உணர்ந்ததும், "அபிராமிதேவியே இந்தத் தவறினின்றும் எம்மைக் காத்தருள வேண்டும்" என்று அவள் பாதம் பணிந்தார்.

வெறும் பணிதலோடு அவர் நிற்கவில்லை "அம்மையே! இன்று இரவு ஆகாயத்திலே பூரண சந்திரனைத் தோற்றுவிக்காவிட்டால் உன் சன்னிதியிலேயே உயிர் விடுவேன்" என்று சபதமும் எடுத்துக்கொண்டார். எடுத்த சபதம் நிறைவேற, ஒரு யார் நீளமும் அகலமும் ஆழமும் கொண்ட ஒரு குழி வெட்டி அதில் அக்கினியைச் சுவாலிப்பித்து அக்குழியின் நான்கு பக்கங்களிலும் நாட்டிய இருப்புக் கால்களின் மேல் இரும்புக் கம்பிகளினால் விட்டம் பூட்டி, அவற்றில் நூறு கயிறுகளை மாட்டித் தொங்கவிட்டு உறியாகப் பின்னி அவ்வுறியின்மேல் தாம் இருந்து கொண்டு அம்பிகையைத் துதித்துப் பாடினார்.

'வெறும் பைத்தியம்' என்று எண்ணிய அபிராமிப்பட்டரது மனவைராக்கியத்தைக் கண்ட அரசனும் சனங்களும் ஆச்சரியத்தோடு அவர் வாயசைவதையே பார்த்த வண்ணம் இருந்தனர்.

தேவி தமக்கு நேரே காட்சி தந்தருளல் வேண்டும் என்பது அந்த அருளாளரது எண்ணம். எனவே '**உதிக்கின்ற**' என்ற சொல்லே அவர் வாயினின்றும் முதலில் பிறந்தது. முதலாம் பாடல் முடிந்தது. அபிராமிதேவி பிரசன்னமாகவில்லை. அபிராமிப்பட்டர் உறியின் ஒரு கயிற்றை வெட்டினார்.

நூறு பாடல்களையும் பாடி நூறு கயிறுகளையும் வெட்டிவிட்டால்... அந்த அருளாளர் அக்கினிச் சுவாலையுள் விழுந்து பஸ்பம் ஆகவேண்டியதுதான். ஆனால், அண்டமெல்லாம் படைத்தளிக்கும் பிராட்டி தமது அடியவரை அப்படி மாண்டுபோக விட்டு விடுவாளா? இல்லை. அவள் அருள் சுரந்தாள். எழுபத்தொன்பதாவது பாடலாகிய '**விழிக்கே அருளுண்டு**' என்ற பாடலைப் பாடியவுடன் அந்த அதிசயம் நடந்தது. ஆகாய வீதியில் - அமாவாசைத் தினத்தில் - பூரண சந்திரன் அழகாகப் பிரகாசித்தான். அம்மை தனது ஒரு திருத்தோட்டைக் கழற்றி ஆகாயத்தில் வீசியதனால் ஏற்பட்ட பூரண சந்திரன் அது.

அபிராமிப்பட்டர், "அம்மையே உன் கிருபையே கிருபை" என்று ஆனந்த மிகுதியால் கூவியே விட்டார். சனங்கள் அன்பரைக் காத்த அம்பிகையின் அருஞ் செயலைக் கண்டு ஆனந்தக் கூத்தாடத் தொடங்கிவிட்டனர். அரசர் தாம் அருளாளரின் உண்மை நிலை அறியாத பாவத்துக்கு என்ன பிராயச் சித்தம் செய்யலாம் என்ற ஆழ்ந்த கவலையுள் மூழ்கி விட்டார்.

**அந்தாதிச் சிறப்பு.**

அபிராமிப்பட்டர் அந்தாதியை அவ்வளவோடு நிறுத்தவில்லை. அம்மையின் வேண்டுகோட்படியே நூறு பாடல்கள் பாடி அந்தாதியை முடித்தார். சரபோஜி மகாராசா அருளாளரின் மெய்யன்பையும் அந்தாதியின் சிறப்பையும் உணர்ந்து அவரை விழுந்து வணங்கினர். அவர் சுகமாக வாழ்வதற்காக - அவர் விரும்பாமலே - சில நிலங்களைச் சர்வமானியமாகக் கொடுத்தார். அபிராமிப்பட்டரது புகழும் அந்தாதியின் சிறப்பும் எங்கும் பரவுவதாயிற்று.

அந்தாதி என்பது முதற் பாட்டிலே வரும் இறுதிச் சொல்லே அடுத்த பாட்டின் முதற் சொல்லாக வரப் பாடப்படும் ஒரு வகை யாப்பாகும். மோனை எதுகைகள் சரியாக வருவதற்காகக் கடினமான சொற்புணர்ச்சிகள் அந்தாதிகளில் இருப்பதுண்டு. ஆனால் அபிராமி அந்தாதியாகிய இந்த நூல் அருள் வழிப்பட்டு வந்த வாக்கானமையால் பொருள் விளக்கமும் எளிமையும் கொண்டு துலங்குகின்றது. அபிராமி அம்மையின் எழிலை அழகுத் தமிழிலே எடுத்தியம்புகின்றது. தமிழறிஞர் ஒருவர் இதற்கு **எழில் உதயம்** என்றே பெயர் வைத்துவிட்டார்.

தோத்திரப் பாடல்களுக்கு எளிமையும் பக்தியனுபவமும் முக்கியமானதாகும். அபிராமியந்தாதியில் உள்ள பாடல்களில் இருபத்தைந்து பாடல்களைத் தொகுத்துப் பார்த்தால் எளிமை என்றால் என்ன? பக்தியனுபவமென்றால் யாது? என்பவை உடனே புரிந்துவிடும். "**சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன் புல்லும் பரிமளப் பூங்கொடியே**" என அபிராமிப்பட்டர் அம்மையை ஓர் இடத்தில் வாழ்த்துகிறார். கவிதையின் இலட்சணத்தை ஓரளவு சுட்டிக்காட்டிய அருளாளர் அதே இலட்சணங்கள் அமையவே பாடல்களைப் பாடியுள்ளார். அவரது பாடல்களில் தேவி தமக்கு அருள் செய்த திறமும் தமது பூர்வ புண்ணியப் பேறும் தேவிமேல் அவருக்குள்ள அசையாத வைராக்கியமும் விதந்து தோன்றுகின்றன.

## உதாரணப் பாடல்கள் மூன்று :

### என்ன புண்ணியம் செய்தேன்.

பாடல்கள் அழகாயிருக்கின்றன, எளிமையாயிருக்கின்றன. பக்தி அனுபவம் மிக்கிருக்கின்றன என்றெல்லாம் சொல்லிவிட்டால் போதாது. அவற்றிற்கு உதாரணமாகச் சில பாடல்களையாவது காட்டல்வேண்டும். அதுதான் முறை. எனவே நூறு பாடல்கள் உள்ள இந்த நூலில் மூன்று பாடல்களையாவது தொட்டுக்காட்ட விரும்புகிறேன்.

கண்ணிய துன்புகழ்; கற்பதுன் நாமம்;
கசிந்து பத்தி
பண்ணிய துன் இரு பாதாம் புயத்தில்;
பகல் இரவாய்
நண்ணிய துன்னை நயந்தோர் அவையத்து;
நான் முன்செய்த
புண்ணியம் ஏது? என்னம்மே! புவியேழையும்
பூத்தவளே!! (பாடல் 12)

என் மாதாவே! இப்பிறப்பிலே நான் சிந்தித்தது உம்முடைய திருப்புகழையே. தமியேன் படிப்பது உம்முடைய திருநாமங்களையே. அடியேன் மன முருகிப் பக்தி செய்தது உம்முடைய திருவடிகளையே. நாயேன் பகலும் இரவுமாகக் கூடியிருந்தது மெய்யடியார்களது கூட்டத்தையே. இதற்கு நான் முற்பிறவியில் என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்பது பாடலின் பொருள்.

பாடலை வாசித்தவுடன் மனத்திற் சென்று பதிகிறது. அகராதி கொண்டு பொருள் தேட வேண்டியதில்லை. சாதாரண மனிதர்களாகிய நாம் இப் பிறப்பில் யாது செய்தல் வேண்டும் என்பதை அபிராமிப்பட்டர் வெளிப்படையாக உணர்த்துகிறார். "நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை; என்றும் வணங்குவதுன் மலர்த்தாள்" (பாடல் 10) என மீண்டும் அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்ற ஞானசம்பந்தரது தேவாரத்துட்பொருள் இப்பாடலிலும் விரவியிருக்கிறது. எப்போதும் மனம் கசிந்து உருகிப் பாடக்கூடிய பாடல் இது.

### நான் பெற்ற பேறு.

நாயேனையும் இங்கொரு பொருளாக
நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய்
நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவு தந்தாய்
என்ன பேறு பெற்றேன்
தாயே! மலைமகளே!! செங்கண்மால்
திருத் தங்கைச்சியே. (பாடல் 61)

அபிராமிப்பட்டர் தாம் பெற்ற நல்லருட் பேறு பற்றித் தாமே பெருமைப்படுகிறார். நாயினும் கெட்ட வனாகிய நான் அம்மையைப்பற்றிச் சிந்தியாமலே எங்கெங்கெல்லாமோ அலைய அவள் என்னைத் தொடர்ந்து வந்து ஆண்டுகொண்டாள். இந்தப் பேறு சாமானியப் பேறா? சொல்லுங்கள் என்று கேட்கிறார். தன்னையும் ஒரு பொருட்டாக நயந்து வந்து ஆண்டாள்; நினைவின்றி ஆண்டாள்; உள்ள வண்ணம் அறியும் அறிவு தந்தாள். என்ற தொடர்களின் ஆழம் சிந்திக்கத்தக்கது.

### கடைக்கண் பேறு

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும்
தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில்
வஞ்ச மில்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர்
என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்
கண்களே
(பாடல்69)

பாட்டின் எளிமையைக் கண்டு இது என்னபாடல்? வெகுசாதாரணம் என்று சிலர் முடிவுகட்டலாம். அருள்வழிப்பட்டோர்க்கன்றி இந்த எளிமை வரவே வராது. பாடிப்பார்த்தவர்களுக்குத்தான் இதுதெரியும். தமிழில் உள்ள நல்ல பாடல்களில் இது ஒன்று. பொருள் சொல்லவேண்டாத எளிமை கொண்ட பாடல்களில் இது ஒன்று.

### முடிவுரை

நூற்பயனாக "ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை" என்று தொடங்கி "முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே" என்கிறார் அபிராமிப்பட்டர். அம்மையை உருக்கமாகப் பரவுவதற்கு ஏற்ற நூல் இந்த அபிராமி அந்தாதி. சிலகோவில்களிலே அம்மையின் புராணத்துக்காக இப்பாடல்கள் படிக்கப்படுகின்றன. உண்மையான தகுதி அதற்குண்டு. இக்கருத்தை நோக்கி நாவலர் பரம்பரையில் வந்தஉரையாசிரியர் மட்டுவில் க-வேற்பிள்ளையவர்கள் இதற்கு அருமையான உரை எழுதியுள்ளார்கள். இந்த அபிராமியந்தாதி இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்றநூல். அன்பர்கள் படித்துப்பய னடைவார்களாக.

விஞ்ஞானக் கல்வியினைக் கற்றுப் பெற்ற வியனுரு மறிவாலே சைவங் காட்டும்
மெய்ஞ்ஞானக் கருத்துகளை விளக்கும் வன்மை மிகுதியுமே பெற்றஒரு விறலார் தம்மை
அஞ்ஞான மறியார்கள் வாழு மெங்கள் அழகான நாயன்மார் கட்டிற் காண்பீர்
எஞ்ஞானம் பெற்றிடினும் எளிமைத் தோற்றம் இயைந்தஇவர் பரநிருப சிங்க மாவர்.

# சைவ உணவின் சில தத்துவங்கள்

சு. பரநிருபசிங்கம் பி. எஸ்ஸி., டிப். இன். எட். (பதிலதிபர், பரமேசுவரக் கல்லூரி)

சைவம் என்பது சிவனை முழுமுதற் கடவுளாகக்கொண்டு வழிபடுஞ் சமயமென்றும், புலால் உண்ணாமை, கொல்லாமை என்றும் இன்னும் பல வேறு கருத்துக்களை இலட்சியங்களாகக் கொண்டதென்றும் பொருள்படும். இங்குக் கருத்திற்கொள்ள வேண்டியது சைவஉணவாகும்.

படைப்பில் மனிதனின் உடலமைப்பு, சைவ உணவு உண்பதற்கேற்ற வகையிலேயே அமைந்திருக்கின்றது. நீண்ட உணவுப்பாதை, உணவு ஆறுதலாகச் சமிபாடடைதல், அசைவெட்டுதல், உமிழ்நீர் சுரத்தல், தோலினுல் வியர்த்தல், உடல் வெப்பக் கட்டுப்பாடு, பற்களின் சிறப்பமைப்பாகியன படைப்பின் திறனையும். உடல், உணவுத் தன்மையையும் தெளிவுபடுத்துகின்றன. இவைகள் அறிவியல் ஆராய்ச்சியாளர் கண்ட முடிவுகளாகும்,

மேற்கூறிய மனிதஉடல் அமைப்புக்கு வேண்டிய உணவுவகைகளாவன: காபோவைதிரேற்றுகள் (மாப்பொருள், சர்க்கரைப் பொருள்) கொழுப்புவகைகள், புரதம், சனிபபொருள்கள், உயிர்ச்சத்துகள், நீர் முதலிய முககிய பொருட்கள் யாவும் தாவரங்களிலிருந்தே கிடைக்கின்றன. இவ்வகையாற் கிடைக்கும் உணவு திரிகரண சுத்தி உடையது, அருட்சத்தியுமுடையது, என்ற உண்மைகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டிருக்கின்றனர்.

அருளியல் வாழ்வுக்குச் சைவஉணவே சிறந்தது. வரலாற்று நூல்கள் வாயிலாகப் பார்த்தால், கிரேக்க தத்துவ அறிஞர்களாகிய அரிஸ்டோட்டல், பிளாட்டோ, பைதோக்கரசு போன்றவர்களும், தொல்காப்பியர், திருவள்ளுவர், ஔவையார்போன்றவர்களும் இவ்வுண்மையைத் தம் வாழ்வாலும், வாக்குக்களாலும் விளக்கிக் காட்டியுள்ளனர்.

உலகப் பெருஞ்சமயங்கள் யாவிலுஞ் சைவ உணவே வற்புறுத்தப்படுகிறது. சைவசித்தாந்தம், வேதாந்தம், கிறித்தவம், இஸ்லாம், பௌத்தம் ஆகியவைகளின் உணவுக் கொள்கையும் சைவ உணவேயாகும். இதிகாச இலக்கியங்கள், புராணங்கள் இந்தச் சைவஉணவின் அடிப்படையை மேலும் வலியுறுத்தியும், தெளிவுபடுத்தியும் காட்டுகின்றன.

சைவம், உலக சமாதானத்தின் ஒருநெறி. படையின் பலத்தினுல் மனிதவர்க்கத்தையும், மற்றும் உயிர்களையும் அழித்தும் துன்புறுத்தியும் வெற்றியிட்டுவது நாகரிகமற்றதும். நெறியற்றதுமாகும். ஆனுல், சைவம் எல்லாஉயிர்களும் ஒன்றுதான் என்னும் கொள்கை உடையது. ஓர் உயிரைக் கொன்றுல், அல்லது துன்பப்படுத்தினுல் அது எல்லா உயிர்களையும் கொல்லுவதாகவோ, அல்லது துன்புறுத்துவதாகவோ முடியும்; உயிர்களிடத்து அன்புடைமையுமாகாது. இதில் அன்பில்லை; அருளில்லை. ஆனுல், சைவ உணவு அருளைத் தெளிவுபடுத்துகிறது, இந்த அடிப்படையிலேதான் உலகசமாதானம் நிலைக்கும். இதுதான் மனிதசமுதாயத்தின் வாழ்க்கைத்தத்துவமும் அறமுமாகும்.

புலாலினுல் ஆக்கப்பட்ட மருந்தும் இரத்தக் கறையுடையது. தொழில்வளம் பெருகிய நாடுகளில் இரத்தக்கறையுடைய மருந்துகளைப் பொருளுக்காகப் பெருந்தொகையாக விருத்திசெய்கிறுர்கள். ஆனுல், கீழைத்தேயத்து முனிவர்களோ, மருத்துவர்களோ இரத்தக்கறையுடைய மருந்துகளை ஆக்க முற்படவில்லை. இரத்தக்கறையுடைய மருந்தினை உண்பது அருளில் செயலாகும்; மருத்துவச் சிறப்பும் இதில் இல்லை. உணவின் அருட் சத்தியைப் புலாலில்லா மருந்துகள் உணர்த்துகின்றன.

தமிழிலக்கியங்களின் உட்கருத்துச் சைவத்தை எல்லாவகையிலும் எடுத்துத் தெளிவுபடுத்துகிறது. தொல்காப்பியம் "காமம் நீத்த பால்", "அருளொடு புணர்ந்த ஆகாரை" என்னும் சொற்றொடர்களினுல் அகிலமும் 'அகிம்சை' என்பதை மறைமுகமாக உணர்த்துகின்றது. திருவள்ளுவர் கொல்லாமை, புலாலுண்ணாமை என்ற அதிகாரங்களினுல் மனித இலட்சியத்தின் பொன்னுய தத்துவத்தையும், பயனையும் எடுத்துக்காட்டியுள்ளார். சிலப்பதிகாரத்தில் கோவலன் சைவஉணவை அன்பு மனைவியிடம் பெற்றபின்தான் மரணப்பாதைக்குச் சென்றுன், என்று கூறப்படுகிறது. மணிமேகலையில் சாத்துவன்—ஒரு வணிகன்—கப்பல் உடைந்து மனிதப்புலால் தின்னும் தீவில் வந்து அடைகிறுன். அங்கு அவர்கள் புலால்உணவைக் கொடுத்தார்கள். அதன் தீமையை அவர்களுக்கு அவன் எடுத்

பண்ணார்ந்த தமிழ்மரபிற் பரைநின்ற கோலத்தை
விண்ணார்ந்த தேவார வியன்முறையிற் பாடிடுவார்
கண்ணார்ந்த நாயன்மார் கட்டினெழில் கூறுமிவர்
நண்ணார்க்கும் நண்ணினர்க்கும் நல்லவராஞ் 'சேந்த'னார்.

# தேவி புகழ்மாலை

"சேந்தன்"

பண்: பழந்தக்கராகம் இ: சுத்தசாவேரி தா: திரிபுடை

பொன்னார்ந்த புனல்மங்கை பொலிகின்ற சடையண்ணல்
மின்னார்ந்த இசைநிலவு மிளிர்கின்ற பொழில்மேனி
முன்னார்ந்த தவநிழல் முழுதாக மொழிநீங்கத்
தன்னார்ந்த பரைபாங்கர் தவநாயன் மார்கட்டே.

உமைதேவி எனவோதும் சிவைசூலி பொறிவாணி
இமையோர்கள் நலனார இசைபாடு மெழில்நாரி
சுமைதீர நமர்கூடிச் சுகமேவ வதியுமிடம்
அமைசோலை இடனான எழில்நாயன் மார்கட்டே.

சிவைமேவு பரைதேவி திருவானு ளுறையுமிடம்
கவைமேவு கொம்பேறிக் குயில்பாடும் மறையென்பார்
நவைமேவு தவமாக நறைபாய விளைசாலி
சுவைமேவு மமுதாகுந் துறைநாயன் மார்கட்டே.

---

துரைக்கும்பகுதி சைவ உணவின் தத்துவங்களை எடுத்துக் காட்டுகிறது. தமிழ் நீதிநூல்கள்—பதினெண்கீழ்க்கணக்கு—"மனிதனின் வயிறு. வாய் பேசா மிருகங்களின் புதைகிடங்கு ஆவது ஏன்?" என்று வினவிப் புலாலுண்ணாமையை வலியுறுத்துகின்றன.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் உணவைத் தூய்மைப்படுத்தியும், அருட்டன்மையாக்கியும் உண்டமை, சைவத்தின் திறனையும், நாகரிகவளர்ச்சியின் உச்சநிலையையும் எடுத்துக் காட்டுகிறது. இதனுடைய வியாபகத்தையும், உயர்வையும் சைவ மடங்களின் விளைவால் 14-ஆம் நூற்றாண்டு தொடக்கம் இன்றுவரை காணக்கூடியதா யிருக்கிறது.

இதுதான் சைவத்தின்—உணவின்—அகில உலகக் கொள்கையையும், சிவபுண்ணியத்தையும் உலகிற்குச் சரித்திர, சமயவாயிலாக எடுத்துக்காட்டுகிறது.

சைவம் அருளுடையது, நெறியுடையது, உண்மையுடையது, எல்லா உயிரிடத்தும் அன்புடையது, தொழிற்சிறப்புடையது, முயற்சியுடையது. உலகசமாதானத்தை அறவழியில் பேணுவது, சமயங்களின் வேறுபாட்டில் ஒற்றுமையைக் காட்டுவது. ஆகவேதான் சைவம் மனித நாகரிகத்தின் வளர்ச்சியையும், அருளியல், பொருளியல் வளர்ச்சியின் நடுநிலையையும் பாதுகாத்தும், அரசியலை அறவழியில் நடாத்தியும் எல்லோரும் இன்புற்று வாழ்வதை உலகிற்கு, எடுத்து உறுத்துகிறது.

வாழ்க சைவம்! வாழ்க மக்கள்!

பத்தரொடும் சித்தர்களும் பாடுகின்ற பொருள்கேட்டு
வித்தகப்பூம் பைங்கிளிகள் விண்ணதிரப் பண்மிழற்ற
சித்திரத்தி னெத்தமயில் தெய்விகமா நடம்பயில
சத்தியுமை வதிபொழிலின் தலைநாயன் மார்கட்டே.

அயன்மாலு மறியாத நெறியானே குறியாளுள்
வியன்மேய பதியாக மிளிர்கின்ற வளவைப்புக்
கயல்மேவக் கண்மலரும் கமலஞ்சேர் மடவன்னம்
மயல்தீரத் துயில்செய்யும் வளநாயன் மார்கட்டே.

மான்நோக்கு மலர்நோக்கு மடவன்னம் மாதேவன்
தேன்நோக்குத் திருப்பாதம் திருநோக்கு நெறிநோக்கி
மீன்நோக்கு மழைநோக்கி உடனுக ஒளிர்தேவி
தான்நோக்கு தவர்வைப்புத் தவநாயன் மார்கட்டே.

மலையரசன் மணிமார்பம் மகிழ்பூக்க மாதவர்கள்
கலையரசர் களிகொள்ளக் காசினியை நண்ணினளூர்
கலையினெடு பிணைமருத நிழல்வதியும் கவினுடைய
அலைபொருதிக் கரைகழுவும் அணிநாயன் மார்கட்டே.

செந்திருவும் வெண்கமலப் பைங்கொடியும் தொண்டுசெயக்
கந்தருவர் விஞ்சையரும் கடவுளரும் கைதொழவே
வந்தடியில் மாதவரும் வேதியரும் வாழ்த்திசைக்கப்
பந்தமற வாழ்கௌரி பதிநாயன் மார்கட்டே.

பால்மிகுத்த பிறைசூடி பாகத்தாள் பதிகேளீர்
சூல்மிகுத்த இளஞ்சங்கச் சுடர்முத்தம் மார்பசைய
வேல்மிகுத்த விழிநல்லார் வீணையினும் பண்மிழற்றும்
சேல்மிகுத்த தடம்பாடு திருநாயன் மார்கட்டே.

பணிகொண்ட நெடுமார்பன் பணிகொண்ட மடநங்கை
துணிகொண்ட பிறைசூடி, துடிகொண்ட இடையொன்ற
அணிகொண்ட நெடுநீல அழகம்மை வதியுமிடம்
மணிகொண்ட மலர்ச்சோலைப் பதிநாயன் மார்கட்டே.

---

மக்களின் வாழ்க்கையிலே இயக்கம் உண்டு மலர்கின்ற இலக்கியமும் மனித வாழ்வைத்
தக்கபடி எடுத்தியம்பி இயங்கும் என்ற தன்மையினை உணர்ந்ததனைத் தெளிவாய்க் கூறும்
மிக்கமதி நலத்துடனே நூல்கள் ஆயும் மிகுதிறனும், புலமையது வீறுங் கொண்ட
தக்கவராங் கைலாச பதியார் கூறுந் தண்டமிழின் பாரதியின் மரபு காண்போம்.

# பாரதியும் வேதமரபும்

**கலாநிதி க. கைலாசபதி எம். ஏ.,** *(தமிழ் விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு)*

மகாகவி பாரதி "புதுநெறி காட்டிய புலவன்" என்னுங் கருத்து இன்று பொதுவாக நிலவுவதொன்றாகும். பாரதியின் சமகாலப் புலவர் பலருடன் ஒப்பு நோக்குமிடத்து, அவர் ஈடிணையற்று விளங்குகிறார் என்பது மறுக்க இயலாத உண்மையாகும். ஆயினும் பாரதியின் சமய நம்பிக்கையையும் நோக்கையும் கூர்ந்து கவனித்தால், அவர் பழமையை எந்த அளவுக்குக் கைக்கொண்டார் என்பதும், அவ்வாறு கைக்கொண்டதன் தருக்கரீதியான முடிவு எவ்வாறு அமைந்தது என்பதும் துலக்கமாகும்.

பாரதியின் சிந்தனை வளர்ச்சிக்குப் பின்னணியாக அமைந்த சமய மறுமலர்ச்சி இயக்கத்தின் சுருக்கவரலாறு இவ்விடத்திலே இன்றியமையாததாகிறது. இந்திய தேசீய மறுமலர்ச்சி என்று வரலாற்றாசிரியர்களால் வழங்கப்பெறும் இயக்கம் இந்துமத அடிப்படையிலேயே முகிழ்த்தது. மரபுவழி வந்த இந்துமத உணர்ச்சியே அவ்வியக்கத்திற்கு உரமூட்டியது. எனினும் இவ்வியக்கம் இரு பெருங் கிளைகளாய்ப் பிரிந்து வளர்ந்தது.

இந்து மதத்திலே காலப்போக்கிற் புகுந்த மூடக் கொள்கைகள், பொருளற்ற சடங்குகள என்பவற்றைக் களைந்து எறிந்துவிட்டு, பகுத்தறிவும் பரிவுணர்ச்சியும் நிரம்பப்பெற்ற நவீன இந்து மதம் ஒன்றினைத் தாபிக்க விழைந்தார் ராஜா ராம் மோகனராயர் (1772—1833). ராயரது மாநிலமான வங்காளத்திலே இந்நவீன மதம் **பிரமசமாஜம்** என்ற பெயருடன் பேரியக்கமாகப் பரவியது; அனைத்திந்திய முக்கியத்துவம் பெற்றது. 1828 இல் இவ்வியக்கம் நிறுவன வடிவம் பெற்றது.

பண்டைக்கால இருடிகள் கண்டறிந்த வேதங்களை அப்படியே ஏற்றுக் கொண்டு, அவற்றிலே குறிப்பிடப்படும் வாழ்க்கை முறையை இந்தியர்கள் கடைப்பிடித்தல் வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கை உடையராயிருந்தார், பஞ்சாப் மாகாணத்திலே தோன்றியவரான தயானந்த சரஸ்வதி (1824 - 1883). பிரமசமாஜத்துக்கு எதிரிடையாகத் தோன்றியது எனக் கொள்ளத்தக்க வகையில் அமைந்தது, அவர் 1875 இல் நிறுவிய ஆரிய சமாஜம்.

பண்டை இந்தியாவின் சிறப்பைப்பற்றி இரு பிரிவினருமே அசைக்க முடியாத பற்றும் பெருமையும் கொண்டிருந்தனர்; நிகழ்காலத்துக்குகந்த நடைமுறைகளைப் பற்றியே வேறுபாடுகள் நிலவின. இவற்றை இங்கு விரிவாக உரைக்க வேண்டியதில்லை. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்கூற்றிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இந்தியாவிலே எழுந்த சமயச் சார்பான மறுமலர்ச்சி இயக்கங்கள் அனைத்தும் ஏதோவொரு வகையில் மேற்கூறிய பிரிவுகளுக்குள் அடங்குவனவே. "மானுடனைக் கட்டிய தளைகள் யாவும் அறுக" என்று வீறுடன் பாடிய பாரதியாரும் இவ்விரு பிரிவுகளில் ஒன்றைச் சார்ந்தவராகவே இருந்தார். இவ்விரு பிரிவுகளுக்கும் மூலாதாரமான தத்துவார்த்த வட்டத்தை முற்றாக விட்டு விலகிப்போக அவரால் இயலவில்லை; ஏனெனில் அவர் அம்மறுமலர்ச்சி இயக்கத்தின் ஞான புத்திரர்.

பாரதியைப் பற்றிப் பொதுவாக நாம் கொண்டிருக்கும் எண்ணங்களின் அடிப்படையில் சிந்திக்கும் பொழுது, உய்த்தறி முறையில், அவர் சீர்திருத்தப் போக்கை வற்புறுத்திய பிரமசமாஜத்தையே பெரிதும் போற்றியிருப்பார் என்று கருதத் தோன்றும். ஆயினும் நுணுகி நோக்கின் பாரதி ஆரிய சமாஜத்தின் செல்வாக்குக்கு ஆளாகியிருந்தார் என்பது புலனாகும்.

பாரதியார் கவிதைகளை ஆராய்ந்திருப்பவர்கள் இவ்விஷயம் குறித்து விரிவாயெழுதியிருப்பதாகத் தெரியவில்லை. இதை ஆராய்வதற்கு உதவும் வகையில் முற்குறிப்புக்கள் சில இங்குக் கூறப்படுகின்றன.

அறிவியல் சம்பந்தமான விஷயங்களைப் பாரதியார் நாட்டு முன்னேற்றங் கருதி ஆதரித்தவரெனினும், அவரது ஆளுமை, உணர்ச்சி பூர்வமாகவே செயற்பட்டது. அறிவின் துணைகொண்டு கிறித்துவத்தின் நற்பண்புகள் சிலவற்றையும் நவீன இந்து மதத்துடன் இணைக்க விரும்பினார் ராம்மோகனர்.

ஆரிய சமாஜத்தினரோ, ஐயமெதுவுமின்றி வேதங்களைச் சிக்கெனப் பிடித்தனர். தெய்வத்தை நம்புவதுபோல வேதங்களை நம்பினர். இத்தளரா உறுதி பாரதியாருக்கு ஏற்றதாயிருந்தது எனலாம். கலப்பற்ற தூய்மையையே பாரதி ஆதர்சமாகக் கொண்டார்.

தொடக்கத்தில் எவ்வாறிருந்தபோதும், நாளடைவில, பிரமசமாஜம் சமரசஞானத்தை வற்புறுத்தி, மரபுவழி இந்துமதத்திலிருந்து வெகுதூரஞ் செல்லத் தொடங்கியதும் 'தியாஸபி' என்ற சமய ஞானம் மேனாட்டார் சிலரையும் கவர்ந்து, உலக மதமாகும் இலட்சியத்தைக் கொண்டிருந்தது. அரசியல் அடிப்படையில் பிரமசமாஜத்தினர் தீவிரவாதிகளல்லர்; தாகூர் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. ஆனால் லஜபதிராய் போன்ற ஆரிய சமாஜத் தொடர்புடையோர், (திலகர் மற்றுமோர் உதாரணம்) அப்பழுக்கற்ற விடுதலை வேட்கையுடையோராய்த் திகழ்ந்தனர். திலகரைக் குருவாகக் கொண்ட பாரதியார் ஆரியசமாஜத் தொடர்பைப் போற்றியதில் ஆச்சரியமில்லை.

நடைமுறையில், பிரமசமாஜத்தினர்'உயர்தட்டு, வர்க்கத்தினராயும். 'நவநாகரிக'த்திற்கு வளைந்து கொடுப்பவராயும் இருந்தனர். பிரமசமாஜத்தின் உள்ளார்ந்த பண்புகளில் ஒன்றாகவிருந்த பன்னலக் கூட்டுத்தன்மை இதற்கு ஏதுவாயிருந்திருக்கலாம். ஆனல் ஆரிய சமாஜத்தினர் வேதகால வாழ்க்கை என்ற வரம்புக்குள் ஒரு வகையான எளிமை, படாடோபமின்மை, சிக்கனம், கிராமியத்தன்மை, நேர்மை முதலியவற்றைக் கருதினர். இதன் காரணமாக, பிரமச்சாரிகள், துறவிகள், சாதுக்கள், தியாகிகள் முதலானோர் ஆரிய சமாஜ வாயிலாக இந்திய அரசியலரங்கிற் பிரவேசித்தனர். மணியாச்சியில் ஆஷ்துரை கொல்லப்பட்ட காலத்துக்குச் சிறிது முன்பினுகை, பாரதியாருக்கு இத்தகைய துறவிகள் தொடர்பு அதிகமிருந்தது. கவிஞர் வாழ்க்கை வரலாறு இந்நோக்கில் ஆராயத்தக்கது.

ஆரிய சமாஜம், இந்தியாவை முதலிற்கொண்டு. அதன் மூலம் உலகை நோக்கியது. அதாவது இந்தியாவே உலகம். ஆனல் பிரமசமாஜமோ கிழக்கு மேற்கு என்ற உணர்வையும் சர்வதேசிய நோக்கையும் பெருமளவிற் கொண்டியங்கியது. தாகூர், அரவிந்தர் ஆகியோர் இந்த வகையில் பிரமசமாஜத்தின சிறந்த பிரதிநிதிகளாவர். ஆனல்

''எல்லாரும் அமரநிலை எய்துநன் முறையே
இந்தியா உலகிற் களிக்கும் — ஆம்
இந்தியா உலகிற் களிக்கும் — ஆம் ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்

என்று உறுதியுடன் பாடிய பாரதி இந்தியாவை ஆரிய நாடாகவே கருதினர்,

**ஆரிய பூமி** என்று பாரதி பாடும்பொழுது உலகம் முக்கியத்துவம் இழந்துவிடுகிறது. '**ஆரியர்**' என்ற சொல்லைப் பாரதியார் பல்வேறு சந்தர்ப்பங்களிலே பயன்படுத்தியிருக்குமாற்றைக் கவனிப்பவர்க்கு இதன் தாற்பரியம் நன்கு விளங்கும். பாரதமாதாவை "ஆரியராணி" என்கிருர்.

இந்திய தத்துவ ஞானமரபின் பல்வேறு கூறுகளைப்பற்றிய அறிவும் ஈடுபாடும் பாரதியாருக்கு நிரம்ப இருந்தது. ஆயினும் நடைமுறை வழிபாட்டைப் பொறுத்த வரையில் அவர் ஒரு சாக்தர். பிரமஞானமோ, சங்கரருடைய ஏகான்மவாதம், ஒருமைவாதம் என்பனவற்றின் வழிவருவது. அரூபமான சிந்தனைகளுடன் மல்லாடும் அறிவு பூர்வமானது; செயலிலிருந்து விடுபட்டுத் தூய சிந்தனையில் ஈடுபடும் ஓய்வுவேளை முயற்சி அது. சாக்தமோ, காளாமுகம், பாசுபதம், வீரசைவம் முதலிய வீறுகொண்ட சமயப்பிரிவுகளைப் போல, களத்திலே நிற்கும பக்தரின் சித்த வைராக்கியத்தின் வெளிப்பாடு ஆகும். இவை இரண்டனுக்கும் பெருவேறுபாடுண்டு.

''சுற்றி நில்லாதே போ, பகையே
துள்ளி வருகுது வேல்.'

என்றும்

''அச்சமில்லை அமுங்குத லில்லை
நடுங்குத லில்லை நாணுத லில்லை.''

என்றும், துணிந்து செயல்திறம் வேண்டி நின்ற கவிஞன் உணர்ச்சிபூர்வமான பக்திமார்க்கத்தைத தழுவி நின்றதில் வியப்பெதுவுமில்லை. அதுவே அவரை, ஆரிய சமாஜ வட்டத்தில் நிறுத்தியது என்பதிலும் ஐயமில்லை. பாரதியின் நெருங்கிய நண்பராயிருந்த வ. வே. சு. ஐயருக்கும் இது பொருந்தும்

இக்குறிப்புக்கள் பாரதியைத் தக்கபடி இனங் கண்டுகொள்ளவும், சில புதிய கோணங்களிலிருந்து பார்க்கவும் உதவும என்று நம்புகிறேன். பாரதியார் ஆரிய சமாஜத்தவர் என்று நாமம் சூட்டுவதல்ல இக்கட்டுரையின் நோக்கம், ஆனல் இறுதியாவில், வேதத்தை மூலாதாரமாகக் கொள்ளும் வைதிக நெறியில் வருபவரே பாரதி எனனும அடிப்படை உணமையை நிறுவுவதற்கு இத்தகைய நோக்கு உபயோகப்படும் என்று எண்ணுகிறேன. அது பாரதியாரின் நிறைவை மட்டுமன்றி, குறையையும் கண்டுகொள்ள வழிவகுக்குப் அல்லவா?

நல்லறிவு நற்சங்கம் நல்ல கேள்வி நன்னெறியைக் கடைப்பிடித்தல் முதலா யுள்ள
செல்வமிகப் பெற்றுயர்ந்த சீர்மை யாளர் திருவாளர் பரநிருப சிங்கம் என்பார்
இல்லுறைந்த பெருஞானி என்றே போற்ற இருந்தகை லாசபதி சீட ராவார்
வல்லமைசேர் பொருளுக்குப் பொருளைத் தந்து வரைந்தஅருங் கட்டுரையை வழங்கு கின்றோம்

# பொருள்

**ச. பரநிருபசிங்கம்**
*(ஆசிரியர், அருணோதயக் கல்லூரி, அளவெட்டி.)*

பொருள் என்னும் சொல் தமிழ்மொழி பேசும் யாவரும் அறிந்ததேயாம். ஆயினும் அப்பதம் மிகப்பெரிய ஆராய்ச்சிக்குரியது. பொருள் என்றவுடனே யாவரும் செல்வப்பொருளையே நினைக்கிறோம். செல்வப்பொருளின் இன்றியமையாமையும் அதன் ஆற்றலும் கற்றோர் மற்றோர் யாவரும் அனுபவத்திற் கண்டவை ஒன்றுக்கும் பற்றாத ஒரு பேதையையும் இந்த உலகத்தில் ஒரு ஆளாக்குவது பொருள்.

"பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள்"

"பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை"

என்பன பொய்யா மொழிகள்.

செல்வப்பொருளிலும் மேலாக அறிஞர்களாலே போற்றப்படுவது கல்விப் பொருள். "கேடில் விழுச்செல்வம் கல்வி"; "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்"; "அறிவுடையார் எல்லாம் உடையர்"; "கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு" என்ற ஆப்தவாக்கியங்கள் நாமறிந்தவை.

கல்வி செல்வங்களைவிட உலகத்தில் நாம் காண்பவையெல்லாம் ஒவ்வொருவகையான பொருள்தான். கண்ணுற் காணமுடியாத குணங்கள், குற்றங்களையும் பொருள் என்ற வார்த்தை குறிக்கும். "சினத்தைப் பொருள் என்று கொண்டவன்" என்கிறார் தெய்வப் புலவர். ஆழ்ந்து சிந்திப்போர்க்கு இன்னும் ஆழமான கருத்தில் பொருள் என்னும் பதம் தமிழில் வழங்கிவருவது தெள்ளிதிற் புலனாகும்.

"பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருளானும் மாணாப் பிறப்பு"என்ற தேவரின் மந்திரத்தை நோக்குவோம். அவர் எல்லாப் பொருள்களையும் இரு கூறு செய்கிறார். ஒன்று பொருளல்லாத பொருள். மற்றது பொருளான பொருள். நிலையில்லாதவற்றையும், நிலையான இன்பத்துக்குக் காரணமல்லாதவற்றையும் பொருளல்லாப் பொருள் என்கிறார் தேவர். ஆன்மாக்களுக்கு உண்மையான இன்பத்தைக் கொடுக்கின்ற நிலையான, பொருளான பொருளை மெய்ப்பொருள் செம்பொருள், உள்ளது என்ற வார்த்தைகளாற் குறிப்பிடுகின்றார். அவர் அந்தப் பொருளான பொருளையே "அகள மாய யாரும் அறிவரி தப்பொருள்" என்கிறார் மெய்கண்ட சாத்திரங்களுள் தலையாய திருவுந்தியார் ஆசிரியரும்.

எனவே தமிழ்ச் சான்றோர் ஆக்கிய நூல்களிலே வரும் பொருள் என்னும் பதம் பல்வேறு கருத்துகளில் உபயோகிக்கப்படுவதை நாம் காண்கிறோம். கற்போரின் விவேகம், அறிவு, தவம் என்பனவற்றிற்கேற்பச் சந்தர்ப்பத்திற்குத்தக்கபடி அச்சொல் பொருள் கொடுக்கும். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் வரிசையில் வரும் பதங்கள் என்னும் பதம் பெரிதும் சிந்தனைக்குரியன. மனமாசு நீங்கவே அனைத்தறம் என அறிவுறுத்துகிறார் வள்ளுவனார். மாசு நீங்கிய மனத்தான் பொருளல்லவற்றைப் பொருளென்றெண்ணும் மருள் நீங்கிப் பொருளான பொருளை அறியவல்லது. பொருளான பொருளை ஆன்மா புணர்வதால் வரும் இன்பந்தான் அகத்துறை இலக்கியங்களிலே பேசப்படுகிற இன்பம். அந்த இன்பத்தில் அமிழ்ந்தலால் பொய்யுலகம் விடுபடுதலே வீடு.

இவை தமிழ் மரபுதெரிந்த சிந்தனையாளரின் கருத்துக்கள். உலகப் பொருள்களில் உயர்ந்தது கல்விப்பொருளே. ஆனால் பொருளான பொருளில் நாட்டம் பிறந்தவர்க்கு அதுவும் கசந்து விடுகிறது. 'கற்றாரை யான் வேண்டேன், கற்பவையும் இனியமையும்' என்கிறார் மணிவாசகர். 'புல்லிப்புணர்வதென்று கொலோ என்பொல்லா மணியைப்புணர்ந்தே' என்று பொருளான பொருளைப் புணர்வதற்கு வேட்கை மிக்க அவர் அதைப் 'புணர்ந்த ஞான்று "நம்மையுமோர் பொருளாக்கி நாய் சிவிகை ஏற்றுவித்த அம்மை எனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே" என்று குதூகலிக்கின்றார்.

இந்தப் பொருளான பொருள் எது? அது எப்படியானது? அதை அறியு நெறியாது? அதை அடையுமுறையுண்டோ? என்றின்னோரன்ன ஆராய்ச்சிதான் அறிவுபடைத்த மனிதன் செய்யவேண்டியது. நம் பழந்தமிழ்ச்சான்றோர் நடாத்திய ஆராய்ச்சிகளெல்லாம் பொருளான பொருளை அறிந்து' அடைவதற்குரிய ஆராய்ச்சிகளேயாம். பொருளான பொருளை அடைவதற்கு உபகாரமாகக் கலைகளை அவர்கள் விருத்தி செய்தனர். அதற்கு அபகாரமானவற்றை விலக்கினர். தனிமனிதனின் ஈடேற்றத்திற்கும் மனிதகுல அமைதிக்கும் ஒரே வழி மெய்ப்பொருளறிவுதான் என்பதில் எம் மூதாதையர்க்கு எவ்வித ஐயமும் இருக்கவில்லை. ஆனால் கலி வளர வளரப் பொருளறிவு குறைந்துகொண்டேபோகிறது. இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் நடந்த சம்பவம் இங்கே நினைவுகூரத்தக்கது. பாண்டிநாட்டில் பன்னீராண்டு மழை இல்லாமல் நாடழிந்தது. பின் நாடுமலிய மழை பெய்தது. "நூல் வல்லாரைக் கொணர்க" என அரசன் எல்லாப்பக்கமும் ஆட்போக்கினான். போனவர் எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து "பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேம்" என்று வந்தார். "என்னை, எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே. பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்.'' எனப் புடைபடக் கவன்றான். பொருளறிவைப்பற்றி அக்கால அரசியலாருக்கு இருந்த கவலை அது.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே கலியின் கோலம் இவ்வாறாயின், இன்று எம்மிடையே பொருளறிவு எவ்வாறாகும் என்பது சொல்லவும் வேண்டுமோ. உரையாசிரியர்களுட் டலையாய பரிமேலழகரே அறம்இம்மை மறுமை வீடு மூன்றும் பயப்பது. பொருள் இம்மையும் மறுமையும் பயப்பது. இன்பம் இம்மையே பயப்பது. என்று சாதாரண உரை செய்யநேர்ந்துவிட்டதெனில் எம்மனோர் பொருளைப் பற்றிச் சிந்திப்பதெப்படி?

செல்வப் பொருள் கல்விப்பொருள் இரண்டும் பொருளான பொருளை அறிந்து அடைவதற்கு வழி செய்யாவிடத்து எம் முயற்சியெல்லாம் உமிக் குத்திக் கை சலித்ததேயாகும்.

மெய்ப்பொருளே எமது இலக்கு. அந்த இலக்கை அடையச்செய்வதே கல்வியின் நோக்கமாதல் வேண்டும். செல்வம் அவற்றுக்கு உபகாரமாதல் வேண்டும்.

பணம் ஒன்றுமல்ல, வெறும்பொய். பிரபஞ்சத்தில் நடக்கவேண்டிய முறையைச் செய்து லோப மோகத்தைப் போக்கி அர்த்தத்தை அறியத்தான் பொருளை உரிய முறையில் தேடி, உரிய முறையில் செலவிடப்பழகுதல் என்றார், பொருளாராய்ச்சியில் முதிர்ந்த பெரியார் ஒருவர். உண்டுடுத்து வாழ்வதையே ஒரே இலக்காகக் கொண்ட இக்காலப் பொருளாதாரம் எங்கே? மெய்ப்பொருளாராய்ச்சி எங்கே? நாமெங்கே? பாண்டியன் ஏன் புடைபடக்கவன்றான். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே என்றது ஈண்டுச்சிந்திக்கத்தக்கது.

"மெய்ப்பொருள் ஒன்றுண்டு. அதையடைய வேண்டும்." என்ற அறிவை விருத்தி செய்வதே கல்வியின் நோக்கமாதல் வேண்டும்.

"கற்றதனா லாயபய னென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅரெனின்" என்பது கல்வியொடு சம்பந்தமில்லாத வெறும் பாட்டாகக் கிடக்கின்றது. மேலைநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பொருளாதாரத்திட்டங்களிலும் கல்வித் திட்டங்களிலும் எமக்கு நிரம்பிய ஈடுபாடுண்டு. எம்முன்னோர் எமக்களித்த மெய்ப்பொருளாராய்ச்சியில் எமக்கு எட்டுணையும் நாட்டமில்லை. எமது நாட்டுக்கு, எமது பழந்தமிழ் நூல்களுக்கு, எமது பண்பாட்டுக்கு ஒரு தனித்துவம் உண்டென்றால் அது மெய்ப்பொருளறிவாலும், ஆராய்ச்சியாலும் வந்ததேயாகும். அந்தப் பெருமையை அறிகிற சக்தி இல்லாதவர்களானது மட்டுமன்றி அதை இழித்துரைக்கும் நிலையும் எமக்கு வந்துவிட்டது. என்னே எம்மடைமை! என்னே எம்தலைவிதி!

ஓர்த்துள்ளம் உள்ளதுணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

---

### தையலுமாய் நிற்தும்

**தானே இருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்குந்**
**தானே சுடும்அங்கி ஞாயிறுந் திங்களும்**
**தானே மழைபொழி தையலு மாய்நிற்குந்**
**தானே தடவரை தண்கட லாமே.**

— *திருமூலர்*

ஊஞ்ச லாட உயிராட உள்ளம் யாவுந் தாமாடப்
பாய்ந்த அருளும் மேலாடப் பரையி னிதழில் நகையாட
மாய்ந்த வினைகள் கீழாட மதியும் முடியின் மேலாட
வேய்ந்த புலமை வீருட வீரமணியா தாடுடும்.

நாயன்மார்கட்டு

# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் திரு ஊஞ்சல்

இயலிசை வாரிதி, யாழ்ப்பாணம் ந. வீரமணி ஐயர்

## காப்பு

*பொன்னிதழி மணிமகுடம் என்றே மின்னும்*
*பொழில்சூழு மீழவள நாட்டி னுச்சிச்*
*சென்னிமுடிச் சிரோமணியாழ்ப் பாணந் தன்னில்*
*செழித்தொளிரும் நாயன்மார் கட்டில் மேவும்*
*மன்னிடுசீர் இராஜரா ஜேஸ்வ ரித்தாய்*
*மகிழ்ந்தாட ஊஞ்சலிசை பாடி ஏத்தத்*
*தன்னிகரில் லாவருளைத் தந்தே காக்கும்*
*தந்திமுகன் தாளிணைகள் காப்பதாமே.*

## நூல்:

1. நன்பவளக் கால்நான்கும் வேத மாக
நடுவயிர விட்டமுமா கமமு மாகச்
சின்மயமாம் வடம்நான்கும் கலைகள் ஆகச்
சிவஞான பீடமுமோங் கார மான
இன்பமய வூஞ்சலிலே இனித மர்ந்தே
இன்னமுதத் தண்ணருளை இறைஞ்சும் தாயே
இன்பதியாம் நாயன்மார் கட்டில் மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

2. பூவுலகில் பத்தியெனும் கால்நி றுத்திப்
புலனைந்தை விட்டமதாய் ஒருங்கு கூட்டி
மேவுமெழில் நாற்கரண வடங்கள் மாட்டி
மேதினியில் திருவருளாம் பலகை கோத்துத்
தாவுபசு முத்தியெனும் ஊஞ்ச லாடத்
தத்துவனைச் சேரவருள் புரியுந் தாயே!
ஈசனிடப் பாகமதில் இணையுந் தேவி
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

3\. பொன்முடியும் ஆடப்பூங் குழலும் ஆடப்
பூமலரின் வதனத்தில் அருளும் ஆடப்
புன்முறுவல் பூத்தருளும் இதழும் ஆடப்
புருவத்தின் மையெழுதும் நயனம் ஆடப்
பன்மலரின் மாலையொடு பதக்கம் ஆடப்
பசுமார்பில் மங்கலநாண் பதிந்தே ஆட
இன்னமுதே நாயன்மார் கட்டில் மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

4\. குங்குமமும் மஞ்சளணி குழைந்தே ஆடக்
குழையோடு திருச்செவிக்குண் டலங்க ளாடப்
பொங்குமெழில் மரகதமாய் அங்கம் ஆடப்
பொலியபய வரதமருள் கரமும் ஆட
செங்குவளை மலர்விழியில் அழகும் ஆடச்
செங்கரத்தி லேந்துதிரி சூலம் ஆட
இங்கிதமாய் நாயன்மார் கட்டில் மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

5\. பச்சைவணத் திருமேனி ஆட ஆடப்
பரனுட அரியாட அயனும் ஆட
நச்சரவின் அணியாட நாகம் ஆட
நம்பியொடு தும்பிமுகன் தொந்தி ஆட
மெச்சிடுமீ ரேழுலக அண்டம் ஆட
மேதினியில் அடியரக மகிழ்ந்தே ஆட
இச்சையுடன் நாயன்மார் கட்டில் மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்

6\. பானுவெனும் ஞாயிறுவெண் குடையை ஏந்தப்
பலர்புகழ ஆலவட்டம் திங்கள் தூக்கத்
தேனுலரா மலர்மதனும் செவ்வாய்க் கன்னி
தேவிரதி கரும்புதனைக் கையி லேந்த
வானுயரக் கலைச்செல்வி யாழன் போடு
வாசிக்க வெள்ளியரி யாச னித்தே
ஈனுமருள் நாயன்மார் கட்டில் மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

7\. திருமகளாம் இலக்குமியோர் வடந்தொட் டாட்டத்
தேவிஸரஸ் வதியாளோர் வடந்தொட் டாட்ட
அருமகளார் அரம்பையரோர் வடந்தொட் டாட்ட
அடியரக மகிழ்ந்தேயோர் வடந்தொட் டாட்டப்
பெருமகளாம் பேய்ச்சியம்மை அருள்பா லித்தே
பேரருளாம் பேரின்பம் தன்னை ஈய
இருநிலத்தில் நாயன்மார் கட்டில் மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

8 மத்ததுவாய் மந்தரத்தைக் கொண்டு முன்னாள்
மாநாக வாசுகியை நாணு மாக்கி
அத்திருமால் அயன்தேவர் அசுர ரோடே
ஆழியாம் பாற்கடலைக் கடையும் போது
பித்தனவன் எழுநஞ்சைப் பருகும் வேளை
பிடித்ததனைக் கண்டத்தில் நிறுத்தும் தேவீ!
இத்தரையில் நாயன்மார் கட்டில் மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

9. தக்கனவன் தவப்பேற்றால் தரணி மீதில்
தாக்ஷாய ணியெனவே நாமம் பூண்டு
திக்கெதிலும் திகழ்வீரக் கொடியும் நாட்டித்
திகழ்ந்தவுனை அணைத்திடவே மதுரை தன்னில்
சொக்கனவன் பொருதிடநீ துவண்டு நாணிச்
சொக்கியவன் இடப்பாகம் சேர்ந்த தாயே!
இக்கவினூர் நாயன்மார் கட்டில் மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

10. பத்தியொடு முருகரெனும் பத்தர் உன்னைப்
பாதமலர் பூசைசெய்யப் பரிந்து வந்தே
முத்தியெனும் பேரின்பம் முகிழ்க்கச் செய்தாய்
முண்டகப்பூங் கண்ணியளே முத்துமாரி!
சத்திசிவ காமியபி ராமி காளி
சாம்பவி மனோஹரியே ஆடீர் ஊஞ்சல்
இத்திருவூர் நாயன்மார் கட்டில் மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்

11 வட்டமதி வதனியுமா ஆடீர் ஊஞ்சல்
வாகீஸ்வரி மாயே ஆடீர் ஊஞ்சல்
கட்டழகி கல்யாணீ ஆடீர் ஊஞ்சல்
கல்யாணி மீனாக்ஷி ஆடீர் ஊஞ்சல்
மட்டவிழும் மலர்க்குழலீ ஆடீர் ஊஞ்சல்
மந்திரமாம் ஓங்காரி ஆடீர் ஊஞ்சல்
இட்டமுடன் நாயன்மார் கட்டில் மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

## வாழி

*அந்தணராம் வேதியரும் தேவர் வாழி*
*ஆநிரையும் அகிலமொடு மாரி வாழி*
*வந்தவுயர் அரசினொடு மறிஞர் வாழி*
*வளர்ஞானம் வனிதையரின் கற்பும் வாழி*
*அந்தமிலா அறம் வாழி அருளும் வாழி*
*அருங்கலைகள் வாழிசிவ நெறியும் வாழி*
*இந்தவெழில் நாயன்மார் கட்டும் வாழி*
*இராஜரா ஜேஸ்வரியும் வாழி வாழி.*

சுபம்!

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டு,

## ஸ்ரீ இராஜராஜேசுவரியம்பாள் ஆலய பரிபாலனசபை, 1971.

தலைவர்
திரு. ச. பொன்னையா

உப தலைவர்
திரு. சு. பரநிருபசிங்கம் பி. எஸ்ஸி. டிப். இன். எட்

காரியதரிசி
திரு. வெ. கந்தையா

தனாதிகாரி
திரு. இ. சரவணமுத்து
(கிராமச்சங்க உறுப்பினர், கோப்பாய்)

உப காரியதரிசி
திரு. க. சிவராசா

நிருவாகசபை உறுப்பினர்:

திருவாளர்கள் க. நாகமுத்து, ப. கணபதிப்பிள்ளை, செ. கந்தையா, த. குணமணி, சு. நடராசா, க. இராசேந்திரம்

ஸ்ரீ செ. இரத்தினசபாபதிஐயர்
ஷெ ஆலய கௌரவ அதிபர்

ஸ்ரீ செ. தர்மலிங்கம்
பூசகர்

## ஆலய திருப்பணிச் சபை, 1971.

உபகுழு உறுப்பினர்:

திருவாளர்கள் சு. பரநிருபசிங்கம், ச. சதாசிவம், இ. சரவணமுத்து, செ. இரத்தினசபாபதிஐயர், இ. திருநாவுக்கரசு

## யாழ். சைவசமய அபிவிருத்திக் கழகம், 1971.

நாயன்மார்கட்டு

தலைவர்:
திரு. க. சொக்கலிங்கம் பி. ஏ.

உப தலைவர்கள்:
திரு. க. இராசேந்திரம், திரு. க. நிற்சிங்கம், திரு. இ. திருநாவுக்கரசு

காரியதரிசி:
திரு. கா. இரகுநாதன்


உப காரியதரிசி:
திரு. மு. ஸ்ரீரங்கநாதன்

தனாதிகாரி:
திரு. சி. இராசேந்திரம்

நிருவாகசபை அங்கத்தவர்கள்:

திருவாளர்கள் அ. தம்பையா, வே. பூவிலிங்கம், சி. பத்மநாதன், சோ. தயாபரமூர்த்தி

உ
தேவி துணை



நின்று மிருந்துங் கிடந்து நடந்தும் நினைப்பதுனை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையின்
ஒன்றும் அரும்பொரு ளேயரு ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே.

— அபிராமியந்தாதி

வெளியீடு : யாழ் - நாயன்மார்கட்டு, சைவசமய அபிவிருத்திக் கழகம்.
அச்சுப் பதிவு : ஸ்ரீ நிரஞ்ஜன அச்சகம், நல்லூர், யாழ்ப்பாணம்.